
வீடும்
விளக்கும்
பேராசிரியர்
சுந்தர சண்முகனார்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# வீடும் விளக்கும்

பேராசிரியர்
**சுந்தர சண்முகனார்**

புதுவைப் பைந்தமிழ் பதிப்பகம்
8, 2-வது தெரு வேங்கட நகர் புதுவை-605 011
பேசி: (0413) 223110

# நூல் பற்றிய விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | வீடும் விளக்கும் |
| நூலின் தன்மை | : | வாழ்வியல் சிந்தனை — உரைநடை |
| மொழி | : | தமிழ் |
| ஆசிரியர் | : | பேராசிரியர் சுந்தர சண்முகனார் |
| வெளியீடு | : | புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்<br>8, 2-வது தெரு வேங்கட நகர்<br>புதுவை-605 011<br>பேசி: (0413) 223110 |
| நூற்பதிப்பு | : | முதற் பதிப்பு 1947<br>இரண்டாம் பதிப்பு 1955<br>மூன்றாம் பதிப்பு 30—10—2000 |
| தாள் | : | 11.6 பல்லாப்பூர் |
| அச்சு | : | 12 புள்ளி |
| பக்கங்கள் | : | 132 |
| விலை | : | ரூபாய் 25-00 |
| அச்சிட்டோர் | : | சுபம் பிரிண்டர்ஸ்,<br>சுப்பிரமணியம் தெரு,<br>சிதம்பரம்-608 001 |

# பதிப்புரை

தங்கள் கரங்களில் தவழும் 'வீடும் விளக்கும்' என்னும் இந்நூல் பேராசிரியர் சுந்தர சண்முகனாரின் முதல் நூலாகும். பேராசிரியர் அவர்கள் இந்நூலினை முதன் முதலாக 1947–ஆம் ஆண்டும் இதன்இரண்டாம் பதிப்பை 1958–ஆம் ஆண்டும் வெளியிட்டார். நாற்பத்தெட்டு ஆண்டுகள் கழித்து இப்போது மூன்றாம் பதிப்பு வெளி வந்துள்ளது. இதற்குப் பெரிதும் காரணமாக இருந்தவர் இந்நூலின் முதல் பதிப்பிலேயே இளைஞராக இருந்தபோது தன்னை ஈடுபடுத்திக் கொண்ட புதுச்சேரி பேராசிரியர் க. சச்சிதானந்தன் அவர்கள் ஆவர். இந்நூலுள், பெண்ணின் பெருமையும், பிள்ளைகள் கடமையும், இன்ன பிற குடும்ப விளக்கங்களும் பல பட வகுத்து விரித்து விளக்கப்பட்டுள்ள தாக நூலாசிரியர் முதல் பதிப்பின் முன்னுரையில் கூறியுள்ளார். இந்நூல் அந்நாளிலேயே மாநிலப் பொது நூல் நிலையங்களில் பயன் படுத்துவதற்காக, சென்னை மாநிலக் கல்வித் துறையினரால் அங்கீகரிக்கப்பட்டதாகும். இந்நூல் வெளிவர பொருளுதவி புரிந்த பேராசிரியர் க. சச்சிதானந்தன் அவர்கட்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். பேராசிரியரின் விருப்பத்துக்குச் செயல் வடிவம் தந்து இந்நூலினை வெளிக் கொணர்ந்த புலவர் வ. ஞானப்பிரகாசம் அவர்கட்கும் எங்களின் நனி நன்றி உரித்தாகுக பேராசிரியர் சுந்தர சண்முகனார் அறக்கட்டளை உறுப்பினர்களுக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்நூலினை அழகுற அச்சிட்டுத் தந்த சிதம்பரம் சுபம் அச்சகத்தாருக்கும் எங்களின் நன்றி. அன்பகள் இந்நூலை தாம் படித்துப் பயன்பெறுவதோடு, தம் உறவினரையும், நண்பர்களையும் படிக்கச் செய்ய வேண்டுகிறோம். தாம் கலந்து கொள்ளும் திருமணங்களில் மணமக்களுக்குப் பரிசாகத் தந்தும் பயனுற வைக்க வேண்டுகிறோம்.

**புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்**

## மதிப்புரை

### டாக்டர். அ. சிதம்பரநாதனார், M.A., Ph.D.

திரு. வித்துவான். சுந்தர சண்முகனார் அவர்கள் எழுதியுள்ள "வீடும் விளக்கும்" என்ற புத்தகத்தில், பண்டைத் தமிழர் வாழ்விற் கண்ட இனிய கருத்துக்கள் பல தேர்ந்தெடுத்து விரும்பிப் படிக்கத் தக்க முறையில் எழுதி வெளியிடப்பட்டுள்ளன. "மனைக்கு விளக்காகிய வாணுதல் கணவன்" என்ற சங்ககாலச் சான்றோர் மொழி, பின்னர் "மனைக்கு விளக்கம் மடவார்" என வந்தது; நண்பர் வெளியீட்டில், அது "வீடும் விளக்கும்" என்ற சொற்றொடர்க்குள் நின்று நம்மை இன்புறுத்துகின்றது.

இதன்கண், மகளிர் மனைக்கு விளக்காய் நின்று மாண்பு செய்யும் திறத்தை ஆசிரியர் பல்வேறு கூறுகளாக வகுத்து, இனிய கதைகள் வாயிலாகவும், விளக்கவுரை வழியாகவும் விரித்துரைத்துள்ளார். புறநானூறு, குறுந்தொகை முதலிய சங்க இலக்கியங்களிலும் சிலப்பதிகாரம், கம்பராமாயணம் முதலிய காவியங்களிலும் வரும் பல செய்திகள் இந்நூலிற்கு அணி செய்வனவற்றை எடுத்து அமைத்துள்ளார்.

இந்நூலாசிரியர் வரைந்துள்ள தமிழ்நடை, மிக்க எளிமையும் இனிமையும் வாய்ந்து பிழையில்லாமல் இருப்பது மனத்திற்கு மகிழ்ச்சி தருகின்றது. கிடைத்தற்கரிய மணி பெற்றால் அதைப் பொன்னிடை வைத்துப் பதித்து அணி செய்வது அறிவுடைய மக்கள் செயல், அது போல நல்ல கருத்துக்களை இனிய எளிய பிழையில்லாத செந்தமிழில் எழுதி வழங்குவது தமிழறிஞர்க்குத் தகுதி.

இனிய அழகிய தீவிய தமிழில் இந்நூலை எழுதி வழங்கும் வித்துவான்-சண்முகனார் அவர்கள் மேன்மேலும் இத்தகைய நூல்களை எழுதி, நம் இனிய தமிழகத்துக்குத் தொண்டாற்றிச் சிறப்பெய்துவாராக! இவர்கட்கு வேண்டும் ஆதரவைத் தமிழுலகம் பெரிதும் அளிக்குமென எதிர்பார்க்கின்றேன்.

பல்கலைக்கழகம்,
அண்ணாமலை நகர்.
12-12-1947

இங்ஙனம்,
அ. சிதம்பரநாதன்



பேராசிரியர் சுந்தர சண்முகனார்

# பேரா. சுந்தர சண்முகனார் - ஒரு குறிப்பேடு

சூட்டிய பெயர் : சண்முகம்
சூட்டிக்கொண்ட பெயர் : சுந்தர சண்முகனார்
பெற்றோர் : சுந்தரம் – அன்னபூரணி
பிறந்த நாள் : 13 – 07—1922
பிறந்த ஊர் : புது வண்டிப்பாளையம், கடலூர்.
மறைந்த நாள் : 30—10—1997

பயின்ற நிறுவனங்கள்:

1. சிவத்திரு ஞானியார் மடாலயம், திருப்பாதிரிப் புலியூர். (ஐந்தாம் பட்டத்து ஞானியார் அடிகளின் மாணாக்கர்)
2. தூய வளனார் மேல்நிலைப் பள்ளி, திருப்பாதிரிப் புலியூர்.
3. அரசர் கல்லூரி, திருவையாறு, (வித்துவான்)
4. ஆசிரியர் கல்லூரி, சைதாப்பேட்டை, சென்னை.

தற்படிப்பு: இண்டர்மீடியட், இளங்கலை.
மேலும் சில கல்விச்சான்றிதழ்கள்:

1. சென்னை – முதியோர் இலக்கியப் பண்ணைப் பயிற்சிச் சான்றிதழ். (அரசு)
2. சென்னை – சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் சைவ சித்தாந்தச் சான்றிதழ்.
3. தருமபுர ஆதீனம் – சமயக் கல்விப் பயிற்சிச் சான்றிதழ்.
4. பிரஞ்சு இன்ஸ்டிடியூட், புதுச்சேரி–பிரஞ்சு பட்டயம்.

பணியாற்றிய பதவிகளும் – நிறுவனங்களும்:

1. 1940 – 46 விரிவுரையாளர், துணை முதல்வர், சிவஞான பாலய அடிகள் தமிழ்க் கல்லூரி, மயிலம்.
2. 1949 – 58 தமிழ்த்துறைத் தலைவர், பெத்தி செமினார் மெட்ரிக்குலேசன் ஆங்கிலப் பிரஞ்சுக் கல்விக்கூடம், புதுச்சேரி.

3. 1958 – 80 தமிழ்த் துறைத் தலைவர், அரசினர் ஆசிரியர் பயிற்சி மையம், புதுச்சேரி.
4. 1982 – 83 பேராசிரியர், தொகுப்பியல் துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
5. வாழ்நாள் உறுப்பினர், கல்விக்குழு, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

பெற்ற சிறப்புப் பெயர்கள்:

1. இயற்கவி – "செந்தமிழ் ஆற்றுப்படை" நூலுக்காக நாவலர் சோமசுந்தர பாரதியார் வழங்கியது.
2. செந்தமிழ்ச் செம்மல் - புதுவைத் தமிழ்ச் சங்கம்.
3. புதுப்படைப்புக் கலைஞர் - தொகுப்புக்கலை நூல் பாராட்டு விழாவில் புதுவை ஆளுநரால் அளிக்கப் பெற்றது.
4. செந்தமிழ்க் கொண்டல் – புதுவை சுப்பிரதீபக் கவிராயர் மன்றம்.
5. ஆராய்ச்சி அறிஞர்–சிவத்திரு ஞானியார் மடாலயம், திருப்பாதிரிப்புலியூர்.
6. தமிழ்ச் சான்றோர்–சேலம் தமிழ்ச் சங்கம், தமிழகப் புலவர் குழுவின் வெள்ளி விழாவில் வழங்கியது.
7. திருக்குறள் நெறித்தோன்றல் – தமிழக அரசு வழங்கியது.
8. குறளாயச் செல்வர்–ஈரோடு குறளாய இயக்கத்தின் புதுவைக்கிளை வழங்கியது.
9. தமிழ் ஆய்வுக் கடல் - தமிழகச் செங்குந்தர் பெருமன்றம் அளித்தது.
10. முனைவர் – உலகப் பல்கலைக் கழகம், அமெரிக்கா.
11. தமிழ்ப் பேரவைச் செம்மல் - மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

பரிசுகள்:

1. "பணக்காரர் ஆகும் வழி" நூலுக்கு மத்திய அரசின் பரிசு. (1965)
2. "தமிழ் அகராதிக் கலை" நூலுக்குத் தமிழக அரசின் பரிசு. (1969)

3. "History of Tamil Lexicography" நூலுக்குத் தமிழக அரசின் பரிசு. (1973)
4. "கவுதம புத்தர் காப்பியம்" நூலுக்குப் புதுவை அரசு பரிசு. (1987)
5. "திருவள்ளுவர் விருது" 15.01.1991–இல் தமிழக அரசு வழங்கியது.
6. "தமிழ்நூல் தொகுப்புக் கலைக்களஞ்சியம்", நூலுக்கு மூன்று பரிசுகள்:
   அ) தமிழக அரசின் பரிசு (1992)
   ஆ) தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பரிசு. (1992)
   இ) சென்னை M.A.C. அறக்கட்டளைப் பரிசு (1994)

## படைப்புகள்

**சிறுகதை:**

1. ஆத்திசூடி அமிழ்தம் (1948,50)

**கவிதை நூல்கள்:**

2. தமிழ் அம்மானை–தனித்தமிழ்க் கிளர்ச்சி (1948, 1998)
3. குழந்தைப் பாட்டு (1948, 1951)
4. பொங்கல் வாழ்த்துக் கீர்த்தனைகள் (1948)
5. சிறுவர் செய்யுட் சோலை (1949, 1950)
6. செந்தமிழ் ஆற்றுப்படை (1951)
7. அண்ணா நாற்பது (1969)
8. அம்பிகாபதி காதல் காப்பியம் (1982) (அகவல் யாப்பில் 30 காதைகளாக அமைந்தது)
9. கவுதம புத்தர் காப்பியம் (1986) (பல்வேறு யாப்பில் 30 காதைகளாக அமைந்தது)
10. புத்தர் பொன்மொழி நூறு (1986, 1987) (101 அறுசீர் ஆசிரிய விருத்தங்களால் அமைந்தது)
11. பல்வேறு தனிப் பாடல்கள்.

உரைநடை நூல்கள்:

12. வீடும் விளக்கும் (குடும்ப நூல்) (1947, 1958)
13. வாழ்க்கை ஓவியம் (வாழ்வியல்) (1950)
14. வாழும் வழி (கட்டுரைத் தொகுப்பு) 1962)
15. தமிழர் கண்ட கல்வி (கல்வி இயல்) (1964)
16. பணக்காரர் ஆகும் வழி (பொருளியல் (1964)
17. இன்ப வாழ்வு (பாலியல்) (1965)
18. தமிழ் அகராதிக் கலை (ஆய்வு – அகராதியியல்) (1965)
19. போர் முயற்சியில் நமது பங்கு (இந்திய பாகிஸ்தான் போரின்போது எழுதியது. (1965)
20. தைத்திங்கள் (ஆய்வு) (வானியல்) (1972)
21. கெடிலக் கரை நாகரிகம் (பண்பாட்டு இயல்) (1975)
22. கெடில வளம் (பண்பாட்டு இயல்) (1984)
23. உலகு உய்ய (உலக ஒருமைப்பாடு) (1987)
24. தமிழ்க் காவிரி (அரசியல், தரைநூல்) (1988)
25. கருத்துக் கண்காட்சி (ஆய்வுக் கட்டுரைகள்) (1988)
26. இலக்கியத்தில் வேங்கடவேலவன் (திருப்பதி கோயில் ஆய்வு) (1988)
27. மக்கள் குழு ஒப்பந்தம் (ஆய்வுக் கட்டுரைகள்) (1989)
28. இயல்தமிழ் இன்பம் (ஆய்வுக் கட்டுரைகள்) (1992)
29. மனத்தின் தோற்றம் (ஆய்வுக் கட்டுரைகள்) (1992)
30. தமிழ் அங்காடி (ஆய்வுக் கட்டுரைகள்) (1993)
31. பல்வேறு மலர்கள் மற்றும் இதழ்களில் பல ஆய்வுக் கட்டுரைகள்.

திருக்குறள் ஆய்வுகள்:

32. தெவிட்டாத திருக்குறள் (ஆய்வு) (1948–1958)
33. திருக்குறள் தெளிவு (ஆய்வு) 1948–1958) "திருக் குறள் தெளிவு" – என்னும் திங்கள் இருமுறை இதழ் நடத்தியுள்ளார்.
34. வள்ளுவர் கண்ட மனையறம் (ஆய்வு) (1957)

35. *வள்ளுவர் இல்லம் (இல்லற இயல் விளக்க நூல்)* (1963)
36. *ஆழ்கடலில் சில ஆணிமுத்துக்கள் (ஆய்வு நூல்)* (1991)

கம்பராமாயணத் திறனாய்வுகள்:

37. *சுந்தர காண்டச் சுரங்கம்* (1989)
38. *அயோத்தியா காண்ட ஆழ்கடல்* (1990)
39. *சுந்தர காண்டச் சூறாவளி (மதிப்புரைக்குப் பதில்)* (1990)
40. *பாலகாண்டப் பைம்பொழில்* (1991)
41. *கிட்கிந்தா காண்டத் திறனாய்வு* (1992)
42. *ஆரணிய காண்ட ஆய்வு* (1993)

அறிவியல் ஆய்வுகள்:

43. *உலகமும் உயிர்களும் உண்டான வரலாறு* (1988)
44. *கடவுள் வழிபாட்டு வரலாறு* (1988)
45. *மருந்தாகித் தப்பா மரஇனப் பெயர்கள்* (1989)
46. *மர இனப் பெயர் வைப்புக் கலை* (1990)
47. *மாதவம் புரிவாள்* (1991)
48. *விளையும் பயிர் முளையிலே தெரியும்* (1993)

இலக்கணம்:

49. *எழுத்தாளர் துணைவன்* (1954)
50. *தொண்ணூறும் தொள்ளாயிரமும்* (1971)

மொழியியல்:

51. History of Tamil Lexicography (1967)
52. *தமிழ் இலத்தீன் பாலம்* (1970)
53. *தொல் திராவிட மொழி கண்டு பிடிப்பு* (1988)

தொகுப்பியல்:

54. *தமிழ்நூல் தொகுப்புக் கலை* (1972)
55. *தமிழ்நூல் தொகுப்புக் கலைக் களஞ்சியம்* (1990)

முழு உரைநூல்கள்:

56. *திருக்குறள் தெளிவுரை* (1966, 2000)

57. நாலடியார் நயவுரை (1970)
58. திருமுருகாற்றுப் படை தெளிவுரை (1973)
59. இனியவை நாற்பது இனியவுரை (1987)
60. நன்னெறி நயவுரை (1989)
61. முதுமொழிக் காஞ்சி உரை (1991)
62. நல்வழி உரை (1993)

**சிலப்பதிகாரத் திறனாய்வு:**

63. சிலம்போ சிலம்பு (1992)

**வரலாறு:**

64. காந்தியின் நாகரிகம் (1948)
65. புலிசை ஞானியார் அடிகளார் (1973)
66. பாரதிதாசரொடு பல ஆண்டுகள் (1987)
67. ஞானியார் அடிகளார் 1993)

**புதினம்:**

68. மலர் மணம் (1961)
69. தெய்விகத் திருமணம் (1990)

**பாடமாக அமைக்கப் பெற்ற நூல்கள்:**

1. "அகராதிக் கலை"–சென்னை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகங்கள், வித்துவான், முதுகலை வகுப்புகளுக்கும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் புலவர் வகுப்புக்கும் பாடமாக அமைந்தது.
2. History of Tamil Lexicography – சென்னைப் பல்கலைக்கழகம் முதுகலை வகுப்புப் பாடம்
3. "வாழும் வழி"–அண்ணாமலைப் பல்கலைக்கழகம், புகுமுக வகுப்புப் பாடம்
4. "தமிழர் கண்ட கல்வி" – மதுரைப் பல்கலைக் கழகம், புகுமுக வகுப்புப் பாடம், பெங்களூர் பல்கலைக் கழகம், இளங்கலை வணிகவியல், பாடம்.
5. "திருமுருகாற்றுப்படை தெளிவுரை" – மதுரைப் பல்கலைக் கழகம், முதுகலைப் பாடம்.

---

தொகுப்பு :

**புலவர் வ. ஞானப்பிரகாசம்,** பி.லிட்., பி.எட்.
புருகீசுபேட்டை, கடலூர்–607 004 (04142 – 323214)

---

# வீடும் விளக்கும்

## தோற்றுவாய்

**பழங்கால மனிதன் வரலாறு:**

பண்டைக் காலத்திலிருந்து மனிதரின் வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்து பார்த்து வருவோமானால் நமக்குப் பெரியதொரு வியப்பு உண்டாகாமற் போகாது. அக்கால மனிதனுக்கும் இக்கால மனிதனுக்கும் எவ்வளவோ வேற்றுமை உண்டு. அக்கால மனிதன் இயற்கையாய் விளைந்த காய், கனி முதலியவற்றை உண்டுவந்தான். அவ்வுணவோடு விட்டானா? சில சமயங்களில் விலங்கு, பறவை முதலியவற்றை வேட்டையாடியும் உண்ணத் தொடங்கினான். அங்ஙனம் உணவுப் பொருள்களைத் தேடித் திரிவதை விட வேறு வேலை அவனுக்குக் கிடையாது. வேறு வேலை செய்யத்தான் தெரியுமா? அதுதான் இல்லை. அடுத்தபடியாகத் தூங்கவே தெரியும். அவனுக்கென வீடு இல்லை. அதனால் அவன் வெறுந்தரையில் உறங்கினானா? இல்லை. விலங்குகள் கொன்றுவிடும் என்ற அச்சத்தால் இரவானதும் மரத்தின்மேலும், மரப்பொந்துகளிலும், மலைக்குகைகளிலும் உறங்கி வந்தான்.

**நாகரிக வளர்ச்சி:**

இப்படி உண்பதையும் உறங்குவதையும் தவிர வேறொன்றையும் அறியாத அவன் இதே நிலையில் இருந்து விடவில்லை. நாளாக நாளாகச் சிறிது நாகரிகமும் அடையத் தலைப்பட்டான். நாடோறும் உணவைத் தேடி அலைவது அவனுக்கு அலுப்பாய்த் தோன்றியது. அதனால் எதிர்காலத்திற்கும் உதவும் படியாக உணவைச் சிறிது சேமித்து வைத்துக் கொள்ளவும் கற்றுக்கொண்டான். அதற்காக நிலங் களை உழுதான்; விதை விதைத்தான்; விளைந்ததும் அறுத்தான். அறுத்தவற்றைக் கொட்டி வைக்க வேண்டுமே. எங்கே கொட்டி வைப்பது? பாதுகாப்பாகத் தனக்கென ஓர் இடமும் இல்லை யல்லவா? ஆதலின் தனக்கென வீடு கட்டிக் கொள்ளவும் கற்றுக் கொண்டான். முதலில் கால்களை நட்டுத் தழைகளையும் மட்டைகளையும் பரப்பினான். பின்பு மண்சுவர் வைத்து மேலே கூரை வேய்ந்தான். பின்பு மண்ணைச் சுட்டுக் கல்லும் ஓடும் செய்து அவற்றால் வீடு கட்டினான். இப்படி நாளாக நாளாகப் போதிய நாகரிகம் அடையத் தொடங்கினான். பெரிய பெரிய மாட மாளிகைகள் கட்டக் கற்றுக் கொண்டான். சிறந்த உணவுப் பொருள்களைச் சிறந்த முறையில் பயிர் செய்யவும் கற்றான். மேலும் மேலும் அறிவு பலதுறையிலும் வளரத் தலைப்பட்டது. அதனால் நாகரிக உணர்ச்சி ஏற்பட்டது. ஏற்படவே இக்காலத்திருக்கும் நெசவு முதலான பலவகைத் தொழில்களையும் செய்யப் படிப்படியாகக் கற்றுக்

கொண்டான். இக்காலம் நாகரிகத்தின் உச்சியில் நிற்கின்றான். இதுதான் பழங்கால மனிதன் வரலாறு.

**வீடு:**

ஆகவே, மனிதன் தூங்கி விழித்ததிலிருந்து திரும்பவும் தூங்கும் வரையிலும் உணவு உடை முதலியவற்றுக்காக வெளியில் சென்று பலவிதமான தொழில்களையும் செய்கின்றான்; பின்பு உண்ணவும் உறங்கவும் ஓர் இடத்தைக் கைக்கொண்டு ஓய்வு எடுத்துக்கொள்கின்றான் என உணர்கின்றோம். அந்த இடத்திற்குத் தான் தமிழர்கள் ‘வீடு’ எனப் பெயரிட்டுள்ளார்கள். மனிதன் மட்டுமா? ஐந்தறிவு படைத்த பறவைகளும் உணவுக்காக உழைக்கின்றன. பின்பு அவ்வலுப்பு நீங்கி இளைப்பாறக் கூடு கட்டிக்கொண்டு வாழ்கின்றன. அவற்றினும் அறிவு குறைந்த பாம்பு, நண்டு முதலியவைகளும் வளையில் வாழ்கின்றன. மிகச்சிறிய எறும்பும் அப்படியே. இவைகளே இப்படி என்றால் ஆறறிவு படைத்த மனிதன் வீடு கட்டி வாழத் தெரியாமல் இருப்பானா? இங்ஙனம் எல்லா உயிர்களின் செயலையும் நோக்குங்கால் வீடு என்பது இன்பம் அடைதற்குரிய இடம் என்பது நன்கு விளங்குகின்றதல்லவா? இல்லம், இல், மனை, அகம் முதலிய சொற்கட்கும் வீடு என்பதே பொருள். வீடு என்பதற்கு விட்டது என்பது நேர்பொருளாம். பட்டதைப் பாடு என்றாற்போல் விட்டதை வீடு என்றார்கள். எல்லாத் துன்பத்தையும் விட்டு உடம்பைத் தங்கவிட்ட இடம் வீடாம். இப்போதும் வெளியில் சென்று வேலையால்

அலுத்தவர்கள் வீட்டிற்கு வந்தவுடன், 'அப்பா! எப்போது வீட்டுக்குப் போவோமோ என்றிருந்தது' என்று கூறுவதை நாம் கேட்டே வருகின்றோம். காரணம், வீட்டிற்கு வந்தால் இன்பம் பெறலாம் என்ற எண்ணம் அல்லவா? வீடு கட்டிக்கொள்ள முடியாத ஏழைகட்கும் பிச்சைக்காரர்கட்கும் பயன்படும்படியாகச் சத்திரம் சாவடி கட்டி வைத்தல் பெரிய அறமாகக் கருதப்படுவதும் இது பற்றியே போலும்.

**சில அறிவிலிகள்:**

இதனை யறியாத மக்கள் சிலர் இன்பப் பொழுது போக்கிற்குரிய வீட்டைப் போர்க்களமாக்கிக் கொள்கின்றனர். என்னே இவர்தம் அறியாமை! ஆண்கள் சிலர், வேட்டைநாய் போல் உறுமிக்கொண்டே உள்ளே நுழைகின்றார்கள். திரும்பவும் வீட்டை விட்டு வெளியேறும் வரையிலும் இடித்துப் புடைத்துக்கொண்டேயிருக்கின்றார்கள். இவ்வறிவிலிகளின் செயலை என்னென்றுரைப்பது! பெண்களுட் சிலரும், கணவன் உள்ளே நுழைந்ததும் தொடங்கிவிடுகின்றார்கள் கதையை. அந்த ஆர்ப்பாட்டத்தைக் கணவனால் பொறுக்க முடிவதில்லை. வீட்டிற்குப் போனால் இன்பம் பெறலாம் என்ற எண்ணம் இருந்த இடத்தில், எப்போது வீட்டை விட்டு வெளியேறுவோம் என்ற எண்ணம் குடிபுகுந்து விடுகின்றது.

**''பத்தாவுக் கேற்ற பதிவிரதை உண்டானால்**
**எத்தாலும் கூடி யிருக்கலாம்—சற்றேனும்**
**ஏறுமா றாக இருப்பளே யாமாயின்**
**கூறாமல் சந்நியாசங் கொள்''**

என ஔவைப் பிராட்டியார் கூறியுள்ளதும் இத்தகைய பெண்களை நோக்கித்தான்போலும்? கணவன் மனைவி இருவருள் ஒருவர் மிஞ்சியவராயிருப்பின் மற்றொருவராவது அடங்கியவராய் இருக்கவேண்டும். அப்போது தான் சிறிதாயினும் குடும்பம் உருத்தேறும். இருவரும் இருபெரும் பேய்களாக இருப்பரேயாயின் அவ்வீட்டின் நிலை நினைப்போர்க்கும் அச்சம் தரும் என்பதில் ஐயமுண்டோ? இவர்களைக் குளிக்கப் போய்ச் சேறு பூசிக்கொண்டவர்கட்கு ஒப்பாகத்தான் சொல்ல வேண்டும். இங்ஙனமின்றி வீட்டை இன்ப மயமாக்குவதே அறிவுடைமையாம். வீடு கட்டி வாழ்வதின் நோக்கமும் அதுவே என்றால் தவறொன்றுமில்லை.

**வீட்டின் பெருமை:**

தமிழர்கள் நுட்பமான அறிவு பெற்றவர்கள் என்பதற்கு இங்குத் தக்கதொரு சான்று பகர முடியும். சிற்றின்பம் நுகர்வதற்குரிய இந்த இடத்திற்கு வீடு எனப்பெயர் வைத்திருப்பது போலவே, பேரின்பம் நுகர்வதற்குரிய மோட்சத்திற்கும் வீடு எனப்பெயர் வைத்துள்ளார்கள். இதனைக் கூர்ந்து நோக்கின் தமிழர்களின் அறிவு நுட்பத்தை எவரால்தாம் புகழாதிருக்கமுடியும்? மோட்சமென்றாலும் முத்தியென்றாலும் வீடென்றாலும் விடுபடுதல் என்னும் ஒரே பொருள் தான். துன்பம் தரும் உலகக் கட்டுக்களையெல்லாம் விட்டு, உயிரை இன்பமாகத் தங்கவிட்ட இடம் மோட்ச வீடாம். சிறந்ததெனப்படும் பேரின்பத்திற்குரிய (மோட்ச) வீட்டை அடைவதற்காக முற்றத்

துறந்த முனிவனாகித்தான் தீரவேண்டும் என்பதில்லை. காட்டில் திரியவும் வேண்டுமோ? காற்றைத்தான் உண்ணவும் வேண்டுமோ? அல்லது ஓடெடுத்துப் பிச்சையேற்று உழலத்தான் வேண்டுமோ? ஒன்றுமே வேண்டாவே! சிற்றின்பத்திற்குரிய குடும்ப வீட்டில் மனைவி மக்களுடன் இருந்தபடியேயும் பேரின்ப (மோட்ச) வீட்டை அடைய முடியுமென்றால் அதனை மறுக்க வல்லுநர் யாவருளர்? இது சிறந்த உண்மை யாகும். இதனை நம் பட்டினத்தார்,

**''காடே திரிந்தென்ன காற்றே**
**புசித்தென்ன கந்தை சுற்றி**
**ஓடே எடுத்தென்ன உள்ளன்**
**பிலாதவர் ஓங்குவிண்ணோர்**
**நாடேய் இடைமரு தீசர்க்கு**
**மெய்யன்பர் நாரியர்பால்**
**வீடே யிருப்பினும் மெய்ஞ்ஞான**
**வீட்டின்பம் மேவுவரே''**

என அழுத்தமாகவும் தெளிவாகவும் கூறியுள்ளார். இப்பாட்டின் கடைசி அடிக்கு 'பெண்களுடன் குடும்ப வீட்டில் இருந்தபடியே (மோட்ச) வீட்டிற்குச் செல்ல முடியும்' என்பது பொருள். மேலும் இவ்வடிக்கு, (மோட்ச) வீட்டில் நுகரக்கூடிய பேரின்பத்தையும் குடும்ப வீட்டில் இருந்து கொண்டே நுகர முடியும் என மற்றொரு பொருளும் கூறிவிடலாம். இதற்கு மெய்யன்பு வேண்டும். சமய நூலார் 'சீவன்முத்தர்' எனக் கூறுவதும் இந்நிலையில் உள்ளவர்களை யன்றோ? முற்றத்துறந்த முனிவரும் நுகர்ந்து கண்ட

வரும் (அநுபவசாலியும்) ஆகிய பட்டினத்தடிகளே இங்ஙனம் கூறியுள்ளனரென்றால் நாம் இங்கு இன்னும் வேறு கூறவும் வேண்டுமோ? மனைவி மக்கள் சூழ வீட்டில் இருந்துகொண்டே செய்யப்படும் நெசவுத் தொழில் முதலிய கைத்தொழில்கள் சிறந்ததெனக் கொண்டாடப் பெறுவதும் இதுபற்றியே யென்றால் தவறொன்றும் இலது. **'செய்யுந் தொழிலைச் சீர்தூக்கிப் பார்க்கின், நெய்யுந் தொழிற்கு நிகரில்லை'** எனும் முதுமொழி எழுந்ததும் இதனால் தான் போலும்! இவ்வித இன்பத்திற்குரிய வீட்டின் பெருமையே பெருமை! புகழே புகழ்!

**விளக்கின் தேவை:**

வீடென்றால் அதனை விளக்க நல்ல விளக்கு வேண்டாவா? இருட்டால் மறைக்கப்படாமல் பொருள்களை விளக்குங் காரணத்தினாலேயே விளக்கிற்கு விளக்கு எனப் பெயர் வைக்கப்பட்டுள்ளது. பறவைகளும் கூட்டில் விளக்கு வைத்திருந்ததாக இலக்கியங்களில் காணக் கிடக்கின்றது. வேட அரசன் வள்ளியைத் தினைப் புனத்திற்குக் காவல் வைத்த செயல், பறவையானது பாம்பால் கக்கப் பட்டுக் காட்டில் கிடந்த மாணிக்கத்தைக் கொண்டுவந்து கூட்டிலுள்ள இருளையோட்டுதற்கு வைத்த செயலோடு ஒத்துளது என்னும் கருத்தில்.

**''காட்டில் எளிதுற்ற கடவுள் மணியைக் கொணர்ந்து**
**கூட்டில் இருளோட்டக் குருதுய்த்த வாறன்றோ,''**

எனக் கந்தபுராணத்தில் கச்சியப்ப முனிவர் அழகாகக் கூறியுள்ளார். பறவையின் கூட்டிற்கே விளக்குத் தேவை யென்றால் மனிதன் வீட்டிற்கும் விளக்குத் தேவை எனச் சொல்லவும் வேண்டுமோ? அப்படியென் றால் அவ்வீட்டை விளக்கும் விளக்கு எது என்று நோக்கவேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது, அதுவே இந்நூலில் எடுத்துக் கொண்டதுமாகும். ஆனால், இந் நூலில் ஒரே ஒரு விளக்கு மட்டும் பேசப்படப்போவ தில்லை. ஒன்றுக்கொன்று தொடர்புடைய இரண்டு விளக்குக்கள் பேசப்படப் போகின்றன. அவ்விரண்டு விளக்குக்களும் உள்ளபோதே வீடு நன்கு விளக்கம் பெறும். வீடுமட்டுமோ? நாடே விளக்கம் பெறுமென் றால் அதுவும் பொருத்தமான தொன்றாகும். இனி அவ்விரண்டு விளக்குக்களையும் இரண்டு பகுதிகளில் அமைத்துச் செல்வோம்.

## முதல் பகுதி

# வீட்டின் விளக்கு

வீட்டிற்கு இருக்கவேண்டிய விளக்கு எது என்று சிறுவர்களைக் கேட்டால் அவர்கள் தங்கள் மனத்திற்கு எட்டியவாறு பல விளக்குக்களைக் குறிப்பிடுவார்கள். ஆனால் வீட்டிற்கு இன்றியமையாத முதல் விளக்கு எது என்பதைப் பின்வரும் சிறுகதை யொன்றின் வாயிலாக நன்கு அறிந்துகொள்ளலாம்.

**சிறு கதை:**

அழகியதொரு மாளிகை. மிகப் பெரியதுமாகும். ஒன்றன்மேல் ஒன்றாக மூன்றடுக்குகள் அடுக்கிக் கட்டப்பட்டுள்ளன. புதியவர் உள்ளே நுழைந்தால் அவ்வீட்டை விட்டு வெளியே வர மனங்கொள்ளார். அவ்வளவு அழகாகக் கட்டப்பட்டுள்ளது அவ்வீடு. ஒரு நாள் முன்னிரவு. மணி எட்டு இருக்கலாம், வீடு முழுமையும் ஞாயிறு (சூரிய) மண்டலத்திலிருந்து இற்றுத் தெறித்தவை போல் மின்சார விளக்குக்கள் ஒளி வீசிக்கொண்டுள்ளன. விளக்குக்கள் என்றால் உயர்தர ஆற்றல் உள்ளவைகள். கூடங்களையும் மாடிகளையும் அழகுபடுத்திக் கொண்டுள்ளன. அவ் விளக்குக்கள் திடீரென நின்றுவிட்டால் அப்போது

பயன்படுதற்காக எண்ணெய் விளக்குக்களும் ஏற்றி வைக்கப்பட்டுள்ளன.

அவ்வீட்டுக் கூடத்தின் நடுவில் ஒரு சாய்வு நாற்காலி போடப்பட்டுள்ளது. அதில் ஒருவர் சாய்ந்து கொண்டிருக்கிறார். வயது அறுபத்தைந்து இருக்க லாம். அவரைப் பார்த்தால் குடும்பத் தலைவராகக் காணப்படுகின்றார். அவரருகில் அவருடைய ஒரே மகன் ஒரு நூலை (புத்தகம்) வைத்துப் புரட்டிக் கொண்டிருக்கின்றான். வயது இருபது இருக்கலாம். நறுங்காளை. தந்தையார் தம் ஒரே மகனைப் பார்த்த வண்ணம் ஆழ்ந்த எண்ணங்களால் அலைக்கப்படு கின்றார்.

அவ்வமயம் ஒரு நாட்டுப் புறத்தான் உள்ளே நுழைந்தான். அவன் அவர்கட்கு உறவினனாவான். அவன் அங்கு எரியும் மின்சார விளக்குக்களை எல்லாம் நோக்கிப் பெரியதொரு வியப்படைந்தான். **'பட்டிக்காட்டான் யானை கண்டது போல'** என்பது பழமொழியல்லவா? பின்பு மெல்ல அவ்வீட்டுத் தலைவர் இருக்கும் இடத்தை அடைந்தான். அவரும் அவனை அன்புடன் வரவேற்று அருகில் அமர வைத்தார். மேற்கொண்டு சில பேச்சுக்களும் பேசத் தொடங்கினார்கள். வந்தவன் பெரியவரை நோக்கி, 'நும்மைப் பார்த்தால் யாதோ பெரியதொரு கவலை குடிகொண்டிருப்பதாகத் தோன்றுகின்றதே, அதன் காரணம் என்ன?' என்று வினவினான். அதற்கவர், ,ஆமாம் தம்பி! என்ன செய்வது? எனக்கும் வயதாய்

விட்டது; வீட்டில் ஒரு விளக்கேற்றி வைத்து விட்டால் என் சுமை நீங்கிவிடும்; இதைத் தவிர வேறு கவலையென ஒன்றுண்டோ?' என்று பதிலளித்தார். அதனைக் கேட்டதும் நாட்டுப்புறத்தானால் வியப்படையாமல் இருக்க முடியுமா? என்ன! இவ்வளவு விளக்குக்கள் எரிகின்றன; இன்னும் ஏதோ விளக்கு வேண்டுமாம்; அவ்விளக்கு இல்லாமையானது ஒரு சுமையாகிக் கவலையைத் தருகின்றதாம்; இதன் உண்மைக் கருத்து யாதோ! என்று பற்பல எண்ணலானான். பெரியவரை நோக்கித் தன் மனம் எண்ணியதை அப்படியே ஒளிக்காமல் அறிவித்தான். அதற்கு அப்பெரியவர் 'என்ன இது தெரியாதா? விட்டில் விளக்கேற்றி வைத்தல் என்றால் என் மகனுக்கு ஒரு நல்ல பெண்ணைப் பார்த்துத் திருமணம் செய்து வைத்தல் என்பது பொருள்; அவ்விளக்குத் தானே வீட்டை விளக்கும் முதல் விளக்கு; ஏனைய விளக்கெல்லாம் விளக்காகுமா?; என்று அவனுக்கு நன்கு எடுத்து விளக்கிக் காட்டினார். அவனும் ஒத்துக்கொண்டவனாய் நம் முன்னோர்கள் பெண் கொள்வதற்கு 'விளக்கேற்றி வைத்தல்' எனப் பெயரிட்டிருப்பது மிகவும் பொருத்தமானதே. ஆகவே வீட்டிற்கு இன்றியமையா விளக்குப் பெண்களே என்று எண்ணி மகிழ்ந்தான். பின் இருவரும் எழுந்து உண வருந்தச் சென்றனர்.

**வீட்டின் விளக்கு எது?**

மேற்கூறிய சிறு கதையால் வீட்டின் முதல் விளக்குப் பெண்களே என்பது உணரக் கிடக்கின்றது.

ஏனைய விளக்குக்கள் எல்லாம் விளக்குக்கள் ஆகாவோ எனின், அவ்வளவு சிறந்த விளக்குக்கள் ஆகாவாம். காரணம் ஒன்றன்று; இரண்டல்ல; பல உள்ளன. ஏனைய விளக்குக்கள் பகலில் பயன்படா. இரவில் மட்டுமே பயன்படக் கூடியவைகள். பெண் விளக்கோ என்றும் எபபோதும் பயனளிக்கும். மேலும், ஏனைய விளக்குக்கள் இருட்டை மட்டுமே போக்கக் கூடியவைகள். குப்பை கூளங்களைப் போக்காவாம். இப்பெண் விளக்கோ வீட்டிலுள்ள குப்பை கூளங் களைப் பெருக்கியும், அழுக்குகளைக் கழுவியும், புழுதி படிந்த இடங்களை மெழுகியும் பற்பல விதங்களில் வீட்டை விளக்கப்படுத்தி மங்களமுறச் செய்வதை நாம் காண்கின்றோம். மற்றும் மின்சார விளக்கு எல்லா ஊரிலும் எல்லா வீட்டிலும் இருப்பதில்லை. எண்ணெய் விளக்குக்களையும் இப்பெண் விளக்குத் தான் ஏற்றி உயிர்ப்பிக்கின்றது.

இக்கருத்துக்கள் பலவற்றையும் அடக்கியே நம் பெரியோர்கள், திருமண காலத்தில் முதன் முதல் மணப்பெண் வீட்டிற்குள் புகும்போது கையில் விளக்கைத் தந்து அழைத்துக்கொள்கின்றார்கள். இம்முறை ஆண்களுக்குண்டோ? அப்படி ஓர் ஆண் மகன் மாமனார் வீட்டிற்கே குடிபோனாலும் அவன் கையில்விளக்கைத் தந்து உள்ளே அழைத்துக்கொள்ளும் பழக்கத்தை நாம் எங்கும் கண்டிலோம். ஆகவே, இப்பெண் விளக்குப் பற்பல வகைகளிலும் வீட்டை

விளக்குகின்றது என்பது காணக் கிடக்கின்றது. அவ்வகைகள் ஒவ்வொன்றினையும் கண்டு செல்வோம்.

### பெயர்ப் பொருத்தம்

முதலில் பெண்கட்குள்ள பெயர்ப் பொருத்தமே அவர்க்கும் வீட்டிற்கும் உள்ள நெருங்கிய தொடர்பைப் பறை சாற்றி உணர்த்துகின்றதென்றால் அதனை ஒருவரும் மறுக்க முடியாது. பெண்கட்கு மனைவி எனவும் இல்லாள் எனவும் பெயருண்டு. மனையென்றாலும் இல் என்றாலும் வீடு என்பது பொருள். ஆகவே மனைவி, இல்லாள் என்னும் சொற்கள் வீட்டிற்கு உரிமை பூண்டவள் என்னும் பொருளைத் தருகின்றன. ஆண்கட்கு மனையான் என்றோ இல்லான் என்றோ பெயரிருப்பதாகத் தெரியவில்லை.

மற்றும், சில ஆண்கள், தம் மனைவிமார்களை 'எங்கள் வீட்டிலே' என்னும் சொல்லால் குறிப்பிடுகின்றார்கள். இதனை விளங்க நோக்குவோம். ஓர் ஆண்மகன் தான் சிறுவனாய் இருக்கும்போது 'எங்கள் வீட்டிலே திட்டுவார்கள்' எனத் தன் தாய் தந்தையரை 'வீட்டிலே' என்னும் சொல்லால் குறிப்பிடுகின்றான். அவனே தனக்குத் திருமணமாகிவிட்ட பின்பு தன் தாய் தந்தையர் இருக்கும்போதே, 'எங்கள் வீட்டிலே கேட்டார்கள்' எனத் தன் மனைவியை 'வீட்டிலே' என்னும் சொல்லால் குறிப்பிடுகின்றான். என்ன விந்தை இது! ஒருவர் தம் மனைவியை மனத்திலே குறிப்பிட்டுக்கொண்டு தம் நண்பரிடம் 'எங்கள்

வீட்டிலே காய்கறி வாங்கிவரச் சொன்னார்கள்' என்பார். அதன் உண்மைக் கருத்தை உணராத அந் நண்பர், வீட்டிலே என்றால் நும் தாயார் வாங்கிவரச் சொன்னார்கள் போலும் என்பார். அதற்கவர், இல்லையையா, எங்கள் வீட்டிலே என்கின்றேன். நீ என்னவோ தாயாரா என்று கேட்கின்றாய் என்பார். உடனே நண்பர், ஓகோ! நும் தகப்பனார் வாங்கிவரச் சொன்னாரா? சரிதான் என்பார். அதற்கவர், இல்லை யையா; எங்கள் வீட்டிலே வீட்டிலே என்று அடித்துக் கொள்கின்றேன்; மறுபடியும் தகப்பனாரா என்று கேட்கின்றாய்; வீட்டிலே என்றால் வேறு யாரையா? என் மனைவி வாங்கிவரச் சொன்னாள் என்பார். உடனே நண்பர், ஓ அப்படியா! தாய் தந்தையரை விட மனைவி இருந்தால்தான் உமக்கு வீடு வீடாகத் தெரியும் போலும் எனக் கூறி நகையாடுவார்.

இந்த நிகழ்ச்சியை நாம் வாழ்க்கையில் பன்முறை கண்டிருப்போம். இங்ஙனம் பெண்களை வீட்டோடு தொடர்பு படுத்திக் கூறுவதைத் தவிர, ஆண்களையோ வேறு விளக்குக்களையோ கூறுவது யாண்டும் இல்லை; எஞ்ஞான்றும் இல்லை, ஆனால், இங்கென்ன இவ்வளவு எளிய கருத்துக்கள் சில எடுத்துக் காட்டப் படுகின்றனவே என்று எண்ணலாகாது. இந்நூலில் எடுத்துக்கொண்ட கருத்துக்கு ஏற்புடைய நுட்பங்கள் இவற்றில் அமைந்து கிடப்பதையே குறிக்கோளாகக் கொள்ளவேண்டும்.

**இயற்கைத் தடைகள்:**

மற்றும், மனைவி இல்லாள் என்னும் பெயர்கட்கேற்பவே பெண்கள் பெரும்பாலும் வீட்டிலேயே காலங்கழிக்க வேண்டியவர்களா யிருக்கின்றார்கள். ஆண்களைப்போல வெளியில் காலங் கழிக்க முடியாதபடி அவர்கட்குச் சில இயற்கைத் தடைகளும் உள்ளன. கருத்து வேறுபாடுடைய எவரும் இதனை மறுக்க முடியாது. ஆண்களைப் போலவே வெளியில் சென்று சில இன்றியமையாச் செயல்களில் ஈடுபடவேண்டிய கட்டாயம் பெண்மக்கட்கும் சில நேரங்களில் வருவதுண்டு. அப்போது சில பெண்களைத் திங்கள் தீட்டு (மாதவிலக்கு) தடுத்துவிடும். சிலரை நிறைந்த சூல் (கர்ப்பம்) தடை செய்யும். சிலர்க்குப் பொறையுயிர்ப்பு (பிரசவம்) தடையாயிருக்கும். சிலரை அவர்தம் பச்சிளங் குழந்தை நோயுற்று எங்கும் செல்ல முடியாதபடி தடை செய்துவிடும். இவ்வளவோடு நின்றுவிட்டதா? சில பெண்மணிகள் ஊருக்குப் புறப்படுவார்கள், அப்போது தள்ளமுடியாத விருந்தினர்கள் வந்துவிடுவார்கள். அவர்கட்கு உணவு செய்து படைக்கவேண்டிய கட்டாயப் பொறுப்பு ஏற்பட்டுவிடும். இவையெல்லாம் ஆண்கட்கில்லாத தடைகள் அல்லவா?

இங்ஙனம் பெண்மணிகள் இயற்கையாகவே வீட்டை விளக்கும் விளக்காக அமைந்துள்ளார்கள். அப்படியானால், இந்த நாகரிக காலத்திலும் பெண்மக்கள் வீட்டிலேயே அடைபட்டுக் கிடக்க வேண்டுமா?

ஆண்களைப் போல் கல்வி முதலியவற்றால் அவர்களும் முன்னேற வேண்டாவா? என்று சினந்து சிலர் கேள்விமேல் கேள்விகளை அடுக்கிக்கொண்டே போகலாம். ஆனால், பெண்கள் முன்னேற்றத்திற்கு யான் ஒரு சிறிதும் தடை கூறுகின்றேன் இல்லை. கூறவும் எனக்கு உரிமை கிடையாது. பெண்கள் முன்னேற்றம் நாட்டிற்கு மிகவும் தேவையானதுஎன்பதில்எள்ளளவும் தடையில்லை. ஆனால் இங்குப் பெண்கட்கு இயற்கையாகவே அமைந்துகிடக்கும் உண்மை நிலை எடுத்துக் கூறப்பட்டதே தவிர வேறன்று. இதற்குத் தக்கபடி தானே இளமையிலிருந்தே அவர் தம் செயல்களும் உள்ளன. ஆண்பிள்ளைகள் சிறு வயதில் என்னென்னவோ விளையாடுகிறார்கள். பெண்பிள்ளைகளோ எனின், சிறு வயதில் மணல்வீடு கட்டுவதையும், மணற் சோறு ஆக்குவதையுமே பெரும்பான்மையான விளையாட்டாகக் கொண்டுள்ளார்கள். இவ்விளையாட்டிற்குச் **'சிற்றில் இழைத்தல்'** எனப் பெயர் கூறுவர் புலவர் பெருமக்கள். எதிர்காலத்தில் நிகழக் கூடிய இயற்கைப் பழக்க வழக்கங்களே இங்ஙனம் செய்யத் தூண்டுகின்றன போலும்?

இருப்பினும் தங்களை இயற்கைத் தடைகள் தடுத்த நேரம் போக மீதி நேரங்களில் பெண்களும் ஆண்களைப் போலவே எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைய முன்வரவேண்டும் என்பதை உணர்வார்களாக! ஆண்களும் அதற்கு உறுதுணையாய் இருக்கவேண்டும் என்பதை மறவாமல் இருப்பார்களாக! இங்ஙனம்

பெண்கள் முன்னேறினால் மேலும் வீடு விளக்கம் பெறும் என்பது உறுதியன்றோ?

**பெண்ணில்லா வீடு:**

அது நிற்க, பெண்ணென்னும் விளக்கில்லா வீடுகளைப் பற்றிச் சிறிது நோக்குவோம். சில வீடுகள் குப்பைக் குவியலால் நிரம்பப் பெற்றிருக்கும். அடிக்கடிப் பூட்டப்பட்டே கிடக்கும். திறந்திருந்தாலும், வீட்டிற்கு உரியவர் நல்லவராயின்றிக் கெட்டவராய் இருப்பாரேயாயின் சொல்லவே வேண்டியதில்லை. நல்லோர் ஒருவரும் உள்ளே நுழையார். அவ்வீடு ஒரே சந்தை மடமாயும் சூதாட்டக் கொட்டகையுமாகவே காட்சியளிக்கும். விளக்கு வெளிச்சத்திற்குப் பதில் பீடி, சுருட்டுகளைப் பற்றவைக்கும் வெளிச்சமே நிறைந்திருக்கும். அடுப்புப் புகைச்சலுக்குப் பதில் இப்புகையே மண்டி வட்டமிடும். விருந்தினர்க்குப் பதில் வேதாளமே கூத்தாடும். பூஞ்செடிக்குப் பதில் வெள்ளெருக்கு முதலியனவே தழைதோங்கும். சீதேவிக்குப் பதில் மூதேவியே குடியிருப்பாள். குழந்தைகள் விளையாடுவதற்குப் பதில் பாம்பே படமெடுத்தாடும். இவ்வித வீட்டிற்குரியவர்கள் முற்பிறவியில் நீதி மன்றங்களில் பொய்ச்சான்று (சாட்சி) சொல்லியிருப்பார்களோ? நம் ஔவைப் பிராட்டியார்

**''வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே**
**பாதாள மூலி படருமே—மூதேவி**
**சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே**
**மன்றோரம் சொன்னோர் மனை''**

என விளக்கமாகக் கூறியிருப்பதும் இத்தகைய வீட்டின் நிலைமையை நோக்கியேயாம்.

ஆனால், பெண்கள் இல்லாத வீடுகள் சிலவற்றை ஆண்கள் விளக்கமாக வைத்திருக்கின்றார்களே என்று வினவலாம். அங்கேயும் ஒரு வேலைக்காரி இருப்பாள். அல்லது அவ்வேலையை ஆண்களில் ஒருவராவது பெண்கட்குப் பதில் செய்து முடிப்பார். இதுபோல் நடப்பது எங்கேயோ ஒன்று. ஆனால் அவ்வீடு தூய்மையால் ஓரளவு விளக்கமுற்றிருந்தாலும் குழந்தைகளின் கொஞ்சல், விருந்தோம்பல் முதலிய சிறந்த பேறுகளை ஒரு சிறிதும் பெற்றிருக்காது. இதுபற்றி

**''உடன்பிறப் பில்லா வுடம்புபாழ் பாழே**
**மடக்கொடி யில்லா மனை''**

என ஔவைப் பிராட்டியார் கூறியிருப்பதும் பொருந்திய தொன்றாய் உளது.

**தூய்மையும் மங்களமும்**

ஆனால் பெண்கள் இருக்கும் வீடுகளோ இப்படியிரா. அவர்கள் வீட்டின் ஒவ்வொரு பகுதியையும் அடிக்கடிப் பெருக்கியும், வாரியும், மெழுகியும், விளக்கம் செய்துகொண்டே யிருப்பார்கள். அதிலும் சிறப்பு நாட்களில் சிறிதும் வாளா (சும்மா) இருக்க மாட்டார்கள். சில ஆண்கட்கு அமாவாசை, கார்த்திகை முதலியனவே தெரியா. வீட்டில் பெண்கள் மெழுகுவதைக் கொண்டே உணர்வார்கள்.

மேலும் இன்றைக்கு வீட்டில் என்ன? என்று கேட்டும் தெரிந்துகொள்வதுண்டு. சில ஆண்கள் இன்றைக்கு மெழுகினால்தான் மெழுகினபடியா? இன்னொரு நாளைக்கு மெழுகிக்கொள்ளக்கூடாதா? என்று வைவதுமுண்டு. இதில் ஒரு நுட்பம் அமைந்து கிடப்பதை எடுத்துக் காட்டாமல் விடுவதற்கில்லை. கூர்ந்து நோக்கினால் புலப்பட்டே தீரும்.

ஒரு பள்ளிக்கூடத்தைத்தான் எடுத்துக்கொள்வோமே. அதில் ஒரு நாளைக்கு ஐந்து மணி நேரம் வேலை செய்ய வேண்டுமென வைத்துள்ளார்கள். அதிலும் இத்தனை மணிக்கு மேல் இத்தனை மணி வரையிலுந்தான் பள்ளிக்கூடம் நடக்கவேண்டும்; இன்னின்ன நேரத்தில் இன்னின்ன பாடங்கள் நடைபெற வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் இங்கு ஏன் இப்படிக் கணக்கு வைத்திருக்க வேண்டும்? ஒரு நாளையில் எப்போதாவது எந்தப் பாடமாவது ஐந்து மணி நேரம் நடக்கவேண்டியது தானே யென்று கேட்க முடியாது. அப்படி நடந்தால் பள்ளிக்கூடம் ஒழுங்கு பெறாது. பாடமும் வரம்பு கடவாமலும் தவறாமலும் நடைபெறாது. நினைத்தார் நினைத்தபடி யெல்லாம் சிதற நேரிடும். அதேபோல் என்றைக்காவது மெழுகிக்கொள்ளலாம் என்றால் நாளைக்காகட்டும், மற்றொரு நாளைக்காகட்டும் என்று தள்ளிக்கொண்டே போகும்; குறிப்பிட்ட வேலைகள் குறிப்பிட்ட நேரங்களில் செய்து முடிக்கப் பெறா. நம்முன்னோர்கள் இன்னின்ன நாட்களில் மெழுக

வேண்டும்; இன்னின்ன நாட்களில் வாசற்படி விளக்கம் செய்யவேண்டும் எனக் கால நிகழ்ச்சி நிரல் செய்து வைத்திருப்பதும் இதுபற்றியே. அப்படியிருந்தால்தான் வேலையும் முடிவுறும். பெண்கட்கும் எளிதாகத் தெரியும்.

சில பெண்மணிகள் தாங்கள் நோயுற்றிருந்தாலும் விடுவதில்லை. பொழுது சாய்ந்ததும் மெல்ல எழுந்து விளக்கேற்றுவதையாவது செய்தே தீர்வார்கள். அல்லது வேறுயாரைக் கொண்டாயினும் செய்து வைப்பார்கள். இங்ஙனம் பெண்மக்கள் உள்ள இடமே தூய்மையாகவும் மங்களமாகவும் இருக்க முடியும். சில கழகங்களிலும் மாநாடுகளிலும் ஆண்கள் நிறைந்த ஒரு பெருங்கூட்டம் ஊர்வலமாக வந்து உள்ளே புகும் போது ஒரு பெண்மணி வந்து ஆலாத்தி யெடுக்க, அப்போது அவ்விடம் மிகவும் பொலிவு பெற்று விளங்குவதை நாம் காண்கின்றோம். எனவே தூய்மையாம் வெளிச்சத்தினையும் மங்களமாம் ஒளியினையும் தந்து வீட்டை விளங்கச் செய்யும் விளக்குப் பெண்மணிகளே என்பது வெள்ளிமலை போல் விளங்குகின்றது அல்லவா?

**தெய்வ விளக்கம்:**

மேலும், வீடுகளில் தெய்வ விளக்கம் பெண் மணிகளாலேயே உண்டாக்கப் பெறுகின்றது. சிறப்பு நாட்களில் சில ஆண்கள் கற்பூரத்தையோ நெய்த் திரியையோ கொளுத்துவதொன்றைத்தான் செய்கின் றார்கள். மற்றைய வேலைகளை யெல்லாம் பெண்களே

செய்து முடிக்கின்றார்கள். ஆனால் இங்கு தக்கதொரு கேள்விக்கு இடமுண்டு. ஓர் பெண்ணின் நல்லாள் யாதொரு தெய்வத்தையும் தொழாது தன் கண வனையே தொழுவளேயாயின், அவள் பெய்யென்றால் பெய்யும் மழை. இக் கருத்தை

**''தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யு மழை''**

எனத் திருவள்ளுவர் திருக்குறள் பறைசாற்றுகின்றது. எனவே, பெண்கட்குத் தெய்வம் கணவனல்லவா? அவர்கள் வேறொரு தெய்வத்தையும் வணங்கலாமா? என்று கேட்கலாமல்லவா? ஆம், அது உண்மையே. ஆராயத் தக்கதும் ஆகும். இக்கருத்து வேறு பல சங்க நூற்களிலும் பெறப்படுகின்றது. சிறிது சுருங்க நோக்குவோம்.

**பிறை தொழல்:**

பெண்கள் திருமணமாவதற்குமுன் எல்லாத் தெய்வங்களையும் வணங்குவது வழக்கம். அதிலும் கட்டாயமாக மூன்றாம் பிறை நிலவை வணங்குவது அக்கால இளந்தமிழ் நங்கைமார்களின் இயற்கை வழக்கமாகும். மணமான பின் மூன்றாம் பிறையையும் வணங்கமாட்டார்கள். மணமாகத்தான் வேண்டுமோ? இன்ன ஆடவனையே மணக்கவேண்டும் என்று மனத்திற்குள் உறுதி செய்து கொண்டாலுமே போதும். பிறை வணக்கத்தை அறவே கைவிடுவர். அங்ஙனம் நங்கையொருத்தி நம்பி (ஆண் மகன்) ஒருவனைக்

குறித்துக்கொண்டாள் என வைத்துக் கொள்வோம். அவள் தோழி அவள் மேல் ஐயங் கொள்வாள். அது இயற்கைதானே? பின்பு அந்த ஐயத்தைப் போக்கிக் கொள்வதற்காகப் பிறையை வணங்கும்படி அந் நங்கைக்கு அறிவிப்பாள். அங்ஙனம் வணங்கினால் ஐயம் தீரும். வணங்காவிட்டாலோ, ஓகோ! எவனோ ஓர் ஆடவன் இவள் உள்ளத்தைக் கொள்ளை கொண் டுள்ளான் என உறுதி கொள்வாள். இந்நிகழ்ச்சிக்குத் தமிழ்ப் புலவர்கள் **'பிறைதொழு கென்றல்'** எனப் பெயரிட்டுள்ளனர். ஆகவே, பெண்கள் மணமான பின் தெய்வ வணக்கம் செய்யமாட்டார்கள் என்பது இதனால் அறியக் கிடக்கின்றது.

**மணத்திற்குப் பின் வணக்கம்:**

அதே சங்க இலக்கியங்களில், மணமான பின்னும் பெண்மணிகள் தெய்வ வணக்கம் செய்வதுண்டு என் பதற்குச் சான்று இல்லாமற் போய்விட்டதா? மணமான பின்னும் சில காரணங்களை முன்னிட்டு வணங்கலாம் என்பதற்குப் போதிய இடம் உள்ளது. கணவன் ஒரு தவறு செய்துவிட்டானாயின், அத்தவறுக்காக அவனுக்கு ஒருவிதத் தீமையும் செய்யக் கூடாதென வேண்டி அவன் நன்மைக்காகத் தெய்வத்தை வணங்குவதுமுண்டு. இந்நிகழ்ச்சியைக் கோவை நூற்களில் குறிப்பிட்டுள்ளனர் புலவர் பெருமக்கள்.

மேலும், இங்கு அகநானூறு என்னும் சங்க நூலில் உள்ள நிகழ்ச்சி யொன்றினைக் குறிப்பிடாமற் போக முடியவில்லை. கணவன் ஒரு வேலையின் நிமித்தம்

வெளியூருக்குச் சென்றிருந்தான். மனைவி தனியே வீட்டில் இருந்தாள். அப்போது வீட்டின் ஒரு பக்கத்தில் பல்லி ஏதோ சொல்லிற்று. அப்போது மனைவி யானவள், "நம் கணவர் வெளியே சென்றுள்ளனரே; இங்கு பல்லி ஏதோ சொல்லுகின்றதே; போன இடத்தில் என்ன நடக்கின்றதோ; இது எப்பலனைக் குறிக்கின்றதோ; ஒன்றும் புரியவில்லையே; ஏ தெய்வமே! போன கணவர் யாதொரு தீங்காலும் தாக்கப்படாமல் நன்மையுடன் திரும்பும்படியாக அருள் புரிவாயாக" என்று தெய்வத்தை நோக்கி வணங்கி நின்றாளாம். இந்நிகழ்ச்சி

> **"ஓங்கிய நல்லில் ஒருசிறை நிலைஇப்**
> **பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவிக்**
> **கன்றுபுகு மாலை நின்றோள் எய்தி"**

என்னும் அகநானூற்று அடிகளில் அழகாக அமைந்து கிடக்கின்றது. மற்றும், ஒரு பெண் தன் கணவன் நன்மைக்காக அவனால் வணங்கப்படும் தெய்வத்தைத் தானும் வணங்குவதற்கு 'முதல் கற்பு' எனப் பெயரிட்டுள்ளனர் நம் முன்னோர்.

**உண்மை முடிவு:**

அப்படியென்றால், திருவள்ளுவர் தெய்வம் தொழ வேண்டுவதின்று எனக் கூறியுள்ளாரே! இது எப்படியாவது? முன்னுக்குப் பின் முரணாய் உள்ளதல்லவா? என்ற கேள்வி எழத்தான் செய்யும். ஆனால், 'பெண்கட்குக் கணவன்மாரிடத்தில் மிக்க உறுதியும் உள்ளன்பும் வேண்டும்; அப்போதுதான் இல்லறம்

இன்பமாகவும் ஒற்றுமையாகவும் நடைபெறும்' என்பதை வற்புறுத்துவதற்காகவே அங்ஙனம் கூறியுள்ளார். சிறிதும் தெய்வ வணக்கம் கூடாதென்பது திருவள்ளுவர் கருத்தன்று, அவர் ஒவ்வோரிடத்தில் ஒவ்வொரு கருத்தை வற்புறுத்துவதற்காக ஒவ்வொரு விதமாகப் பாடிச் செல்லும் ஒருவித இயல்புடையவர். அதில் தவறொன்றும் இல்லை. புலமை மரபுகளுள் அதுவும் ஒன்றாகும். 'ஊழிற் பெருவலி யாவுள' என்று ஒரு குறளில் கூறிய வள்ளுவர், மற்றொரு குறளில் 'ஊழையும் உப்பக்கம் காண்பர்' என்று கூற மறந்தா ரிலர். ஈண்டும் அதுபோலத்தான். அவர், 'உலகம் கடவுளையே முதன்மையாக உடையது; ஆதலின் அக் கடவுளை மனிதர்கள் கட்டாயம் வணங்கியே தீரவேண் டும்' எனப் பல குறள்களில் வற்புறுத்திப் போந்துளார். அவர் ஈண்டுப் பெண்களைப் பிரித்தே உலகம் என்று குறிப்பிட்டுள்ளார் என்று எவரேனும் கூறமுடியுமா? கூறினால்தான் பொருந்துமா? பெண்களைப் பிரித்து விட்டால் உலகம் என ஒன்றுதான் உண்டா? ஆண் பெண்களின் கூட்டுறவே உலகம் அல்லவா? ஆகவே, ஒரு பெண்ணுக்கு முதல் தெய்வம் அவள் கணவனே; ஆயினும் அக்கணவன் நன்மைக்காகத் தானும் அவனால் வணங்கப்படும் தெய்வத்தை அவனுடன் கூடி நின்று வணங்கலாம்; அதில் சிறிதும் தவறில்லை என்ற முடிவுக்கு நாம் அஞ்சாமல் வரலாம். காரைக் காலம்மையார் தம் கணவர் தம்மைக் கைவிட்ட பின்பே அணிகலன்களைக் கைவிட்டுப் பேரின்ப நெறிக்குச்

சென்றதாகக் கூறும் பெரியபுராண வரலாறு ஈண்டு நுணுகி நோக்கி மகிழ்தற்குரிய தொன்றாகும்.

அன்றியும், உலகம் உரிமைக்குப் போராடும் இக் காலத்திலும் ஆண்கள் மட்டுமே தெய்வ வணக்கம் செய்ய வேண்டும்; பெண்கள் அவ்வித உரிமையின்றி ஆண்கட்கு அடங்கியே கிடக்கவேண்டும் என்று கூறத்தான் முடியுமா? கூறினாலும் பகுத்தறிவு நிறைந்த உலகந்தான் விடுமா? ஆனால், பெண்கள் சிலர், தெய்வ வணக்கம் என்ற பெயரை வைத்துக் கொண்டு பலவித மூடப்பழக்க வழக்கங்கட்கு அடிமைப் பட்டு அல்லல் அடைகின்றனர். அது கூடாது. பகுத் தறிவுக்குப் பங்கம் வராத நிலையில் குறிப்பிட்ட அளவில் நிகழ்த்தப்படவேண்டும். அதுவே சிறப்புற்று வளர்ச்சியளிக்கும். ஆகவே, வீடுகள் பெண்களால் தெய்வ விளக்கும் ஏற்றப்பட்டு விளக்கம் பெறுகின்றன என்பது போதருகின்றது.

**செல்வ விளக்கம்:**

மற்றும், பெண்களாலேயே வீடு எல்லாப் பொருள் களாலும் விளக்கம் பெறுகின்றது. நல்ல மாண்புடைய பெண்கள் வாழும் வீட்டில் ஒன்றுள்ளது; ஒன்றில்லை என்று கூறுவதற்கிடமிருக்காது, ஏறக்குறைய எல்லாச் செல்வமும் நிறைந்திருக்கும். அவர்கள் எப் பாடு பட்டாயினும் ஒவ்வொரு பொருளாகக் குடும்பத் தில் சேர்த்து வைத்துக்கொள்வார்கள். பின்பும் அவை களைக் கண்ணுங்கருத்துமாகப் பாதுகாத்து வைப்பார்

கள். மேலும், உள்ளதைக் கொண்டேயும் நிறைவு படுத்திக் காட்டுவார்கள்.

நினைத்த நேரத்தில் நினைத்த பொருளை வாங்க முடியாத ஒரு சிற்றூரை (குக்கிராமம்) எடுத்துக்கொள் வோம். ஒரு தோற்றம் இரவு ஒன்பது அல்லது பத்து மணியிருக்கலாம். அந்நேரத்தில் தள்ள முடியாத புது விருந்தினர் ஒருவர் வந்துவிட்டதாகவும் வைத்துக் கொள்வோம். அவருக்கு நாலைந்து விதமான கறி சமைத்துப் பரிமாற வேண்டும். வீட்டிலோ ஒருவிதக் காய்கறியும் இல்லை. வெளியில் சென்று வாங்கி வருதற்கும் நேரம் இடம் தரவில்லை. வெளியிலும் கிடைக்காது. என்ன செய்வது? இவ்வித நெருக்கடி யான நேரத்தில் சில அறிவுள்ள பெண்கள் வீட்டிலுள்ள பயறு முதலியன கொண்டே பலவிதம் சமைத்துப் பரிமாறுவார்கள். சில பெண்கள் ஒரு குழம்பு வைப்பதற்கும் வழியறியாமல் திகைப்பார்கள்.

எனவே, மேற்கூறிய செல்வ வளப்பமெல்லாம், திறமையோடு நற்குண நற்செய்கைகள் நிறைந்த பெண்கள் உள்ள வீடுகளிலேயே நிறைந்திருக்கும். சண்டித்தனம் மண்டிக் கிடக்கும் வீடுகளில் ஒன்றும் இராது. அவ்வீடுகள் புலிகிடக்கும் காடுபோல் பொலி வற்றிருக்கும். அத்திறமையற்ற பெண்கள், வீட்டில் எவ்வளவு செல்வமிருப்பினும் தக்கமுறையில் பயன் படுத்தத் தெரியாமல் விரைவில் அழித்துவிடுவார்கள் என்பது உறுதி. **'ஆவதும் பெண்ணால் அழிவதும் பெண்ணால்'** என்னும் பழமொழியை இங்கு மறக்கவும்

முடியுமோ? ஆவது நல்ல பெண்டிரால். அழிவது தீப்பெண்டிரால்.

**"இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை**
**இல்லாளும் இல்லாளே யாமாயின்—இல்லாள்**
**வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில்**
**புலிகிடந்த தூறாய் விடும்"**

எனப் பெண்ணாகிய ஔவையார் கூறியுள்ளதும் இது கருதியே. திருவள்ளுவப் பெருந்தகையாரும்

**"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்**
**இல்லவள் மாணாக் கடை"**

**"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**
**எனைமாட்சித் தாயினும் இல்"**

என இக்கருத்தை வற்புறுத்திப் போந்துளார்.

**கற்பு:**

மேலும், கற்பு கற்பு என்றால் உரிய கணவனைத் தவிர வேறெவரையும் மனத்தாலும் நினையாத பெருந்தன்மைக்கு மட்டும் பெயரன்று. குடும்பத்தை ஒழுங்குபெற நடத்துதற்கு வேண்டிய நற்குண நற்செய்கைகள் அனைத்திற்கும் கற்பு என்று பெயர் கூறலாம். இத்தகைய கற்பென்னும் கலங்காத் திண்மை ஒரு பெண்ணிடத்தில் இருக்குமேயாயின் அப்பெண்ணைக் காட்டிலும் வீட்டிற்கு வேறென்ன செல்வம் வேண்டும்? அப்பெண்ணே எல்லாவற்றையும் நிறைவுபடுத்துவாள். ஆதலின் அவளே போதும். இக்கருத்தை

**''பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**
**திண்மை உண்டாகப் பெறின்''**

என்னும் திருக்குறள் தெள்ளிதின் உணர்த்துகின்றது. எனவே, நல்ல திறமை வாய்ந்த பெண்மணிகள் எல்லா வகைச் செல்வ விளக்கங்களாலும் வீடுகளை விளக்கம் பெறச் செய்வார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாம். திருவள்ளுவரின் மனைவி போன்ற நல்ல பெண்மணிகளின் வரலாறே இதற்குத் தக்க சான்றாகும்.

**மாறன் மனைவியார்:**

இவ்விடத்தில் இளையான்குடி மாற நாயனாரின் மனைவியார் செய்த திறமைப்பாட்டை எடுத்துக் காட்டாது விடின் அவ்வளவு அழகுபடாது. இரவு நேரம். முதல் யாமம் விடை பெற்றது. மாறனாரும் மனைவியாரும் கதவைத் தாளிட்டுப் படுத்துக் கொண்டனர். மழையோ 'சோ' வெனப் பெய்து கொண்டிருக்கின்றது. அந்நெருக்கடியான நேரத்தில் அடியார் ஒருவர் வந்துவிட்டார். கதவு தட்டப்பட்டது. மாறனாரும் மனைவியாரும் எழுந்துவந்து திறந்தனர். அடியாரைக் கண்டனர். நனைந்த உடையை மாற்றினர். அவருக்கு அமுது படைக்கவேண்டு மல்லவா? என் செய்வது? கொடிய வறுமை வாட்டு கின்றது. வீட்டிலோ ஒருவித உணவுப் பொருளும் இல்லை. மாறனார் மனைவியை நோக்கினார். செய்வதறியாது திகைத்தார். ஆனால் மனைவியார் வாளா இருந்தார்களா? இல்லை. கணவரை நோக்கி,

'அன்பரே! இன்று கொல்லையில் விதைத்த நெல், மழை நீரில் மிதந்து கொண்டிருக்குமே' வாரிக்கொண்டு வரலாமே' என நினைவூட்டினார்கள். அங்ஙனமே நெல்லும் கொணரப்பட்டது. அம்மையாரும் நெருப்பின் உதவியால் நெல்லின் ஈரத்தைப்போக்கிக் குற்றி அரிசியாக்கினார்கள். கூரையில் இருந்த அலகுகள் இழுக்கப்பட்டு விறகாயின. தோட்டத்துக் கீரைகள் கொணரப்பெற்றுப் பயனளித்தன. கீரை வகைகளைக் கொண்டே தம் திறமையால் பல்வகைக் கறிகள் சமைத்தார்கள். அடியாரையும் அமுதுண்ண அன்புடன் அழைக்கலானார்கள். ஈண்டு அம்மையாருக்குப் போதிய திறமையில்லாவிடின் இவ்வளவு புகழ்ச்சிக்கு இடமுண்டோ? அவ்வம்மையார் ஆற்றிய செல்வ விளக்கந்தான் என்னே!

**சில பழக்கவழக்கங்கள்:**

இன்னும் தமிழருடைய சில பழக்க வழக்கங்களும் இக்கருத்தை நன்கு வலியுறுத்துகின்றன. அவற்றைச் சிறிது நோக்குவோம். பெண்கள் வெள்ளிக்கிழமையில் வீட்டைவிட்டு வேறு வீட்டிற்கோ வெளியூருக்கோ செல்லலாகாது. சென்றாலும் அங்கேயே தங்கிவிடாது அன்றே திரும்ப வீடு வந்து சேர்ந்துவிடவேண்டும். அங்ஙனம் வேறு வீட்டிற்குச் சென்றால் திருமகளும் தம்முடனேயே வந்து விடுவாளாம். இதற்கேற்றபடியே பெண்கள் எப்பொருளையும் வெள்ளிக்கிழமையில் வெளியாருக்குக் கொடுக்கமாட்டார்கள். எனவே திருமகளைத் தம்முடனேயே வைத்துக்கொண்டிருப்

பவர்கள் பெண்கள் என்பது உணரக்கிடக்கின்றது. இதற்கு மாறாக, ஆண்கள் வெளியில் சென்றால், 'ஐயோ! வெள்ளிக்கிழமையில் வெளியில் செல்கின்றீர்களே! அங்கேயே தங்கிவிடாமல் விரைவில் திரும்பி விடுவீர்களாக' என்று எந்த ஆண்மகனையும் நோக்கிச் சொல்லும் பழக்கம் நம்நாட்டில் எங்கும் இல்லை, என்றும் இல்லை.

மேலும், பெண்கட்குத் தாய்வீட்டாரே விளக்கு வாங்கித் தர வேண்டும் என்னும் கட்டாய வழக்கமும் உண்டு. அதன் கருத்துத்தான் என்ன? விளக்கைத் திருமகளாகக் கருதுவது மரபு. ஆதலின் பெண்கள் அந்தத் திருமகளோடு (இலட்சுமிகரத்தோடு) கணவன் வீட்டிற்கு வரவேண்டுமாம். அப்போதுதான் அப்பெண் இருக்கும் இடத்திலும் திருமகள் தங்கி யிருப்பாளாம். வீடும் விளக்கம் பெறுமாம்.

இதுபோல் மற்றொரு கருத்தும் தமிழர்கட்குண்டு. வெள்ளிக்கிழமையில் பெண்கள் இறக்கக் கூடாது. இறந்து விட்டால் செல்வம் அவர்களோடு போய்விடும் என்றும், இனி அவ்வீடு நீண்ட நாளைக்கு விளக்கம்பெறாது என்றும் கருதிவிடுவார்கள். இன்னும் சில பழக்கங்களும் உண்டு. ஒரு பெண் என்றைக்கிறந்தாலும் சரியே; பிணத்தின் கையில் வெற்றிலை பாக்கு வைத்து அவற்றைக் கணவன் எடுத்துக்கொள்வான். இதன் கருத்து, இறந்த பெண் எல்லா உரிமைகளையும் தன்னுடன் கொண்டு செல்லாமல் இங்கேயே வைத்துவிட்டுப் போவதற்குச்

செய்யப்படுவதாகச் சொல்லப்படுகின்றது. இவ்வளவு செய்தும் மனம் அமைகின்றதா? ஆண்டாண்டுதோறும் அப்பெண்ணுக்குப் 'பூவாடைக்காரி' எனப்பெயரிட்டுப் புதுப்புடவை வைத்துப் படைத்து அப்பெண்ணை வீட்டோடு தொடர்பு படுத்தி வைத்துக்கொண்டே யிருப்பார்கள். தமிழர்களுடைய இப்பழக்க வழக்கங்கள் எல்லாம், பெண்மணிகளால்தாம் எல்லாச் செல்வ வளப்பங்களும் நிரம்பப்பெற்று வீடு விளக்கம்பெறும் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. எனவே வீட்டின் முதல் விளக்குப் பெண்மணிகளே என்பது இதனாலும் நன்கு போதருகின்றதன்றோ?

**விருந்தோம்பல்:**

மேலும், மற்றொரு விதத்திலும் பெண்களால் வீடு விளக்கம் பெறுகின்றது. ஒரு வீட்டை எடுத்துக் கொள்வோம். அது மிகப் பெரியதுதான். அழகுடையது தான். பல்வகைக் காட்சிப் பொருள்களாலும் நிரம்பப் பெற்றதுதான். அவ்வீட்டிற்கு விருந்தினர் ஒருவர் சென்றார். சென்றவரை வாவென்றழைப்பாரில்லை; நற்சொல் சொல்வாரில்லை; தாகத்திற்கு வெறுந் தண்ணீர் கொடுப்பாரில்லை; உணவுபடைப்பார் இல்லை என்று வைத்துக்கொள்வோம். உடனே அவ்விருந்தினர் சிறிது நேரம் இருந்தபின்பு வீட்டைவிட்டு வெளியேறத் தொடங்குவார். அவ்வீடு மற்றையவற்றால் பொலிவு பெற்றிருந்தாலும் அவர் கண்கட்குச் சிறிதும் விளக்கமில்லாததாகவும் ஒரு பொதுச்சாவடி போலவுமே தோற்றமளிக்கும். ஆடவன்

ஒரு வேலையின் நிமித்தம் வெளியில் சென்றிருக்கலாம். அல்லது வீட்டில் இருந்துகொண்டே விருந்தினரை வரவேற்கும் முறைமையும் திறமையும் அறியாமல் இருக்கலாம். அந்நேரத்தில் அவ்வீட்டுப் பெண்மணி வந்து, வந்தவரைத் தக்கமுறையில் வரவேற்று உணவு படைப்பாளேயானால் அவர்க்கு அவ்வீடு எவ்வளவோ அமைதியை அளிக்கும். பொலிவாகவும் காணப்படும். இதுபற்றியே பிச்சைக் காரர்களும் பிச்சை போடாத வீடு பெரிய மாளிகையாயிருப்பினும், 'இது என்ன வீடு' என்று குறைகூறிச் செல்கின்றனர். பிச்சை போட்ட வீடு கூரை வீடாயிருப்பினும், 'இந்த வீடு விளங்குவதாக' என வாழ்த்திச் செல்கின்றனர். எனவே, பெண்மணிகள் விருந்தோம்பல் என்னும் விளக்காலும் வீடுகளை வெளிச்சம் பெறச் செய்கின்றார்கள் என்பது வெளிப்படை.

**ஆடவர் எளிமை:**

பெண்கள் ஊருக்குச் சென்றிருக்கும் நேரத்தில் ஒரு வீட்டிற்கு விருந்தினர் ஒருவர் வந்து விட்டதாக வைத்துக் கொள்வோம். அப்போது அவ்வீட்டிற்குரிய ஆடவர் வந்தவரைக் கண்டதும் அவ்வீடிருக்கும் எளிய தோற்றத்திற்குத் தாமே வெட்கப்படுகின்றார். அதனையறியாத விருந்தினர் 'சிறிது தண்ணீர் கொண்டு வாருங்கள்' என்று கேட்டு விடுகின்றார். உடனே வீட்டுக்காரர் கிடந்து விழிக்கின்றார். குடிதண்ணீர் சிறிது தூரத்திலுள்ள குளத்திலிருந்து

கொண்டுவர வேண்டும். இவரோ உணவுக் கடையில் உண்டு வருகின்றார். அந்தோ என்ன செய்வார்! கதையைத் திறந்து சொல்லத் தொடங்கி விடுகின்றார். ''இப்போது வீட்டில்என் மனைவி இல்லை. அதனால்தான் வீடு இப்படித் தூய்மையற்றுக் கிடக்கின்றது. என்ன! சிறிது தண்ணீருக்கும் வழியில்லையல்லவா? அப்பப்பா! பெண்கள் இல்லாத வீடும் ஒரு வீடா? எனக்கென்னவோ பிடிக்கவில்லை. ஒரு நாள் போவதும் ஒரு மலையாய்த் தோன்று கின்றது. யான் ஓர் உணவுக் கடையில் (ஓட்டல்) உண்டு வருகின்றேன். என்ன உணவு அது? நும்மைக் கண்டதும் எனக்கே வெட்கமாய்ப் போய் விட்டது'' என்று முணுமுணுக்கின்றார். வந்தவரும், ''ஆமாம் உண்மைதான்; பெண்கள் இல்லாமல் என்ன காரியந்தான் நடக்கும்; பட்டால்தானே தெரியும்'' என்று ஒத்துக்கு மத்தளம் அடிக்கத் தொடங்கி விடுகின்றார்.

**சில விருத்தினர் நிலை:**

சில வீட்டிற்கு விருந்தாய்ப் போனவர்களின் நிலையை எண்ணினால் பெரியதோர் நகைப்புத் தோன்றாமற் போகாது. போனவரும் வீட்டுக்காரரோடு சேர்ந்து சமையல் செய்ய வேண்டியதாய்விடும். **'வௌவால் வீட்டுக்குப் போனவரும் தலைகீழாய்த் தொங்க வேண்டும்'** என்னும் பழமொழிதான் இருக்கவே இருக்கின்றதே. சில சமயம் விருந்தினர் கட்டமுது கொண்டுவந்தால் வீட்டுக்குரிய ஆடவரும் அதில் பங்கு

போட்டுக்கொள்வதும் உண்டு. இவற்றையெல்லாம் என்னென்று எடுத்துரைப்பது?

**நற்பெண்டிரின் குறை:**

மேற்கூறிய நிகழ்ச்சிகளையெல்லாம் நாம் வாழ்க்கையில் பன்முறை பலவிடங்களில் கண்டேயிருப்போம். ஆனால், வீட்டில் நல்ல மாண்புமிக்க பெண்மணிகள் இருப்பார்களேயாயின், விருந்தினரை வறிதே அனுப்பவே மாட்டார்கள் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். வந்தவர் ஒரு வேலையின் நிமித்தமாக உண்ணாமல் விரைந்து சென்றுவிட்டாலும், அது நற்பெண்டிருக்கு ஒரு பெருங்குறையாகவே தோன்றும். மனமிளகி உதவுங்குணம் ஆண்களைவிடப் பெண்கட்கே மிகவும் உண்டு. அவர்கள் தாய்மையின் இருப்பிடமன்றோ? இதற்கு எடுத்துக்காட்டாகப் பல வரலாறுகள் உள்ளன.

**கண்ணகியின் கற்புச்செயல்:**

கோவலன் மனைவி கண்ணகி, கற்புக் கணிகலம். செல்வப்பெண். அவளை வாழ்க்கையில் இன்பமின்றித் தவிக்கவிட்டான் கணவன். மாதவியை அடுத்திருந்தான். பின்பு தன் பிழையை நன்குணர்ந்தான். திரும்பவும் கண்ணகியை அடைந்தான். பொருள் தேடும் விருப்பத்தால் ஒருவரும் அறியாமல் இரவில் அவளை அழைத்துக் கொண்டு மதுரைக்குச் சென்றான். ஆயர் பெண் மாதரி வீட்டில் தங்கினான். கண்ணகியை அருகில் அமரச் செய்தான். மன்னிப்புக் கேட்பவன்

போல் தன் குற்றங்களையெல்லாம் ஒப்புக்கொள்ள லானான். ''இரவில், கரடுமுரடான வழிகளில் கால் நோவ உடன் வந்த கண்ணகியே! உன் அன்பை என்னென்பேன்! உன் உள்ளம் அறியாமல் வாணாளை வீணாள் ஆக்கினேன். உனக்கும் இன்பம் அளித்தே னில்லை. துன்பக் கடலில் தோயச் செய்தேன். அவ்வமயம் உன் மனநிலை எத்தகையதா யிருந்ததோ! நீ எந்த நிலைமையில் இருந்தாயோ! ஆ கொடியேன்! என்ன செய்தேன்'' என்றெல்லாம் பல கூறி அரற்றினான், பிதற்றினான், ஏங்கினான்.

கேட்டாள் கண்ணகி, ''என் அருமைத் தலைவரே! இராவழி நடந்ததால் எனக்கொன்றும் அலுப்புத் தோன்றவில்லை. காரணம் நும்முடன் வந்தமையே. நும்மைப் பிரிந்து தனித்திருந்த காலமே இன்பமின்றிக் கழிந்தது. அவ்வமயம் பெருங்கவலை யொன்று என்னை மிகவும் தாக்கியது. நம் வீட்டிற்கு வந்த அறவோர்கட்கு ஒன்றும் அளித்தேனில்லை. செந்தண்மை பூண்ட அந்தணர்களை மகிழ்வித் தேனில்லை. துறவிகளைக் காத்தேனில்லை. விருந்தினர் களை எதிர்கொண்டு வரவேற்றேன் இல்லை. பெண் கட்குக் கிடைக்கக்கூடிய இந்த அரும்பெரும் வாய்ப்பு களையெல்லாம் இழந்து வருந்தினேன்'' என்று அன்பு கனிய இன்மொழி புகன்றாள். இதனை,

**''அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை''**

என இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் அழகு பெறப் பொறித்துக் காட்டியுள்ளார்.

கண்ணகி கோவலனிடத்தில், நும்மைப் பிரிந்திருந்த காலத்தில் நல்ல உணவில்லை என்று மொழிந்தாளா? அல்லது உயர்ந்த ஆடை அணிகலன்கள் கிடைக்க வில்லை என்றுதான் இயம்பினாளா? இன்னும் வேறு பல நன்மைகளை அடைவதற்கில்லையென்றுதான் ஏங்கினாளா? ஒன்றுமில்லையே. கணவனைப் பிரிந்து ஏழ்மையுற்ற சோர்வால், வீட்டிற்கு வந்தோர்க்குப் பணி செய்யமுடியாது போனதையே ஒரு பெருங் குறையாகவும் கவலையாகவும் குறிப்பிட்டுள்ளா ளல்லவா? இதைக் கூர்ந்து நோக்கின் உண்மை விளங்காமற் போகாது. அக்கண்ணகியின் மனப்பான்மை தான் என்னே!

**சீதையின் சீரிய நோக்கம்:**

இராமாயண வரலாற்றிலும் இதைப்போன்ற நிகழ்ச்சியொன்றுள்ளது. இராமனும் சீதையும் அயோத்தியை விட்டனர். காட்டையடைந்தனர், குடிசையில் வாழ்க்கை நடத்தினர் சின்னாள். திடீரெனச் சீதை இராவணனால் சிறையெடுக்கப் பட்டாள். இராமன் காட்டில் தனித்து வருந்தலானான். இலங்கையில் இருக்கும் சீதையின் கவலைக்கோ ஓர் எல்லையில்லை. அவள் கவலை சென்றது எவ் விதத்தில்? ''காட்டில் நாம் இருந்த குடிசைக்குப் பல துறவிகள் விருந்தாக வருவார்களே. அவர்கள் நிலை என்ன? அவர்க்குச் சமைத்துப் பரிமாறுபவர் யாவர்

என்பது புலப்படவில்லையே. நாம் அங்கிருந்து அவர்க்குத் தொண்டு செய்வதற்கும் இல்லையே. அவ் விருந்தினரைக் கண்டதும் உணவு முதலியவற்றால் மகிழ்வித்தற்கின்றி நம் கணவர் மனம் என்ன பாடு படுகின்றதோ'' என்றெல்லாம் பல எண்ணிக் கவன்றாள். இதனை,

**''விருந்து கண்டபோது என்னுறுமோஎன விம்மும்''**

என மிகவும் உருக்கமாக எடுத்துக் கூறியுள்ளார் கம்பர்.

**பெண்டிர் திறமை:**

எனவே, கண்ணகியும் சீதையும் விருந்தோம்பாது போயினும் தம்மால் முடியாது போனமைக்கு வருந்தி யாவது இருப்பது மிகவும் போற்றிப் புகழ்தற்குரியதாம். சிறந்த பெண்களின் இலக்கணமும் இதுவே. தாங்கள் எவ்வளவு எளிய நிலையில் இருப்பினும் சரியே. தம்மை நாடி வந்தவர்களை உதறித் தள்ளாமல் மகிழ் விக்கும் மனப்பான்மை பெண்டிர்க்கும் இருந்தே தீர வேண்டும். எடுத்துக்காட்டாக ஒன்று நோக்குவோம்.

வீட்டில் ஒன்றும் இல்லை. உணவு தண்ணீரே. அதுவும் ஒரு நாளைக்கு ஒரு குடத்திற்கு மேல் மறு குடத்திற்கும் வழியில்லை. இந்நெருக்கடியான நேரத் தில் சுற்றத்தினர் வந்து சூழ்ந்துவிட்டனர். சுற்றம் என்றால் ஒருவரல்லர்; இருவரல்லர்; கடல்நீரும் போதாத அளவில் பலர் கூடிவிட்டனர். அவ்வமயத்தில் பெண்ணானவள் செய்ய வேண்டுவதென்ன? தன் முழுத் திறமையினையும் பயன்படுத்த வேண்டாவா? இனிய

பேச்சாலும் செய்கையாலும் இயன்ற அளவு வந்தவர் களை நிறைவுபடுத்தி மகிழச் செய்யவேண்டும். வேறு விளக்கில்லாவிடினும் அவ்வீடே வந்தோர் கண்கட்கு விளக்கமாகக் காணப்படும். இதுபற்றி யன்றோ

**''குடநீர்அட் டுண்ணும் இடுக்கட் பொழுதும்**
**கடல்நீர் அறஉண்ணும் கேளிர் வரினும்**
**கடனீர்மை கையாறாக் கொள்ளும் மடமொழி**
**மாதர் மனைமாட்சி யாள்''**

என நாலடியாரும் முழங்குகின்றது.

**இல்வாழ்க்கையின் நோக்கம்:**

இங்ஙனம் வந்தோர்க்கு வழங்கிக்கொண்டேயிருந் தால் தம் குடும்பம் வளர்வதெப்படி? விரைவில் நொடித்து விடாதா? என்ற கேள்வி எழுந்தே தீரும். குடும்பம் நொடித்துப் போவதற்குரிய பெருங்காரண மாக இதனைக் கூறுவது அவ்வளவு அறிவுடைமை யாகத் தோன்றவில்லை. அதற்கு ஆரவாரத்தாலுண் டான பல்வேறு காரணங்கள் இருக்கலாம். விருந் தோம்பல் என்றால் உள்ளதை மறைக்காது இயன்ற அளவு செய்யவேண்டும் என்பதே தவிர வேறன்று, வீடென ஒன்று கொண்டு, அதில் கணவன் மனைவி யென இருவர் கூடி இல்வாழ்க்கை நடாத்துவது, இங்ஙனம் உலகத்திற்கு உதவி உழைப்பதற்குத்தானே. இல்வாழ்க்கையின் நோக்கமும் இதுவேயெனின் மிகை யாகுமோ?

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்பது திருக்குறள் அல்லவா?

**விருந்தோம்பற் பெருமை:**

தேவாமிர்தம் ஆனாலும் விருந்தின்றி உண்ண லாகாது. நாடோறும் விருந்தோம்புவோர் வாழ்க்கை சிறிதும் கெடாது. மேன்மேலும் வளரும். அவ்வீட்டில் திருமகள் மனமகிழ்ந்து தங்குவாள். அவர்கள் அடுத்த பிறவியில் தேவர்க்கு விருந்தாகத் தெய்வ உலகம் செல்வார்கள். விருந்தோம்பாதோர் எவ்வளவு பெருஞ் செல்வராய் இருப்பினும் ஏழையராகவே கருதப்பட்டு இழிக்கப்படுவார்கள். இவ்விதமாக விருந்தோம்பலின் கட்டாயத்தையும் பெருமைதனையும் பலபட எடுத்தியம்பி யுள்ளார் திருவள்ளுவர். இவற்றைத் திருக்குறளிலுள்ள 'விருந்தோம்பல்' என்னும் பகுதியில் பரக்கக் காணலாம்.

**சில பெண்டிர் உயர்நிலை:**

சில வீடுகளில் ஆண்கள் வெளியூருக்குச் சென்றிருப்பினும் பெண்கள் தம் தகுதிக்கேற்ப வந்த வர்களை மகிழ்விப்பதுண்டு. இதனைப் புறநானூற்றில் பொறிக்கப்பட்டுள்ள வரலாறொன்று நன்கு தெளிவிக் கின்றது.

பண்டைக்காலம். இரு பேரரசர்கள். இணைந்த நண்பர்கள். இளங்கண்டீரக்கோ என்றும் இளவிச் சிக்கோ என்றும் பெயர் பெற்றவர்கள். இருவரும் ஒரு நாள் ஒருங்கமர்ந்திருந்தனர். பெருந்தலைச் சாத்தனார்

என்னும் புலவர் பெருமான் அவர்களை அணுகினார். இளங்கண்டீரக் கோவை மட்டும் பலவாறு புகழ்ந்தார். அன்பிற்கறிகுறியாகத் தழுவியும் கொண்டார். தாம் ஒரு புலவராயிருந்தும் இளவிச்சிக்கோ ஓர் அரசனாய் இருந்தும் அவனை ஏறெடுத்தும் பார்த்தாரிலர். இளவிச்சிக்கோவின் மனம் வேலை செய்யத் தொடங்கியது. 'என்ன ஒரு புலவன்! ஓர் அரசனை மட்டுமா கொண்டாடுவது? அருகிலிருக்கும் நம்மை ஏறெடுத்தும் பார்த்தானில்லையே, இஃதென்ன மனத் திண்மை!' என்று பல எண்ணினான். வெட்கமும் வருத்தமும் ஒருங்கே கொண்டான். அதனோடு நின்றா னில்லை. 'ஏ புலவரே! நாங்கள் இரண்டரசர் வீற்றி ருக்கின்றோம். எம்மில் ஒருவரைக் கொண்டாடி மற்றொருவரை விட்டதற்குக் காரணம் என்ன' என்று மனம் எண்ணியதை வாயால் கேட்டும் விட்டான். உடனே புலவர் அரசனென்றும் அஞ்சினாரிலர். நடுங் கினாரிலர். உள்ளத்தில் தோன்றிய உண்மையை எடுத்துக் கூறலானார்: ''ஆம் அரசே! நீ கூறியது உண்மைதான். கண்டீரக்கோவைப் பாராட்டினேன். நின்னைப் பாராட்டவில்லை. அதற்குத்தக்க காரண மும் உண்டு. கேட்பாயாக.

பண்டைக் காலந்தொட்டே கண்டீரக் கோவி னுடைய நாட்டு மக்கள் மிகவும் நல்லவர்கள். பாடும் புலவர் வந்துவிட்டால் பலவிதத்திலும் போற்று வார்கள். பரிசு கொடுத்தும் அனுப்புவார்கள். ஆண்கள் தாம் என்றல்லர். பெண்களும் அப்படியே. தம் கணவர்

வெளியூருக்குச் சென்றுவிட்ட சமயத்தில் யாராவது வந்து விட்டார்களென்று வைத்துக்கொள்வோம். கணவர் வரும்வரையும் வந்தவர்களைக் காக்க வைத்திருக்கமாட்டார்கள். பயனின்றியும் அனுப்ப மாட்டாகள். உணவு முதலியவற்றால் உளங்குளிரச் செய்வார்கள். அதுமட்டுமா? தம் தகுதிக் கேற்பப் பெண் யானைகளை அணிகலன்களால் அழகுபடுத்தி அவற்றைப் பரிசாக அளிப்பார்கள். அத்தகைய உயர்ந்த மனப்பான்மை நிறைந்த உறவினர்களையும் குடிமக்களையும் உடையவர் கண்டீரக்கோ. ஆதலின் அவரைப் பாராட்டினேன். நின்னையும் பாராட்ட வேண்டியதே. ஆயினும் நீ பெண் கொலை புரிந்த நன்னன் உறவினன். மற்றும், பாடும் புலவர் நின்னைக் காணவரின், நின்கோட்டை அவர்க்கு அடைத்த கத வோடு காட்சியளிக்கும். ஒருவரும் உள்ளே புகவும் முடியாது. ஒருவிதமான பயனையும் பெறவும் முடியாது. நின்னைப் பாராட்டாது விட்டதும் அதனாலேயே. நான் மட்டுமா? என்போன்றோர் எவருமே நின்னைப் பாராட்டுவதில்லை'' என்று கூறி முடித்தார். இவ் வரலாற்றை, அப்புலவர் பாடிய ‘‘**பண்டும் பண்டும் பாடுநர் உவப்ப**'' என்னும் புறநானூற்றுப் (151) பாடல் புலப்படுத்துகின்றது. கணவர் இல்லாத நேரத்தும் பெண்கள் விருந்தோம்பியதால் அந்நாட்டின் அரசனுக்கே பெரும்புகழ் கிடைத்துளதன்றே! இதனை நோக்கின் விருந்தோம்பலின் சிறப்புத்தான் என்னே! அதன் பெருமையே பெருமை!

**சில பெண்டிர் தாழ்நிலை:**

இச்சிறப்பறியாத பெண்டிர் சிலர் பிற்போக்குடன் நடந்துகொள்கின்றனர். விருந்தினர் வந்துவிடின் கற்றன வெல்லாம் கையாண்டு பார்க்கின்றனர். வந்தவரை நோக்கி, ''சாபிட்டே வந்துவிட்டீர் போலும்'' என்பார் சிலர். ''நுமக்கு எம் வீட்டு உணவு ஏற்குமா?'' என்பார் சிலர். இன்னோர்க்கு உணவளிக்கவும் மனமிராது. அளிக்காவிடினும் என்ன குறை நேருமோ என்ற அச்சமும் வாட்டும். ஆதலின், இன்னோர் விருந்தினரை ஆராய (சோதிக்க)த் தொடங்குவார்கள். பல் துளக்குகின்றீர்களா என்றாயினும், குளிக்கின்றீர்களா என்றாயினும் சில (சோதனைக்) கேள்விகளைப் போட்டுப் பார்ப்பார்கள். விருந்தினர் வேண்டா என்று கூறுதலோ, மயங்குதலோ செய்வாராயின் பதமாக வழியனுப்பிவிடுவார்கள். உண்பதாக ஒத்துக்கொண்டாலோ, வேண்டா வெறுப்பாய்ப் பின்பே சமைக்கத் தொடங்குவார்கள்.

**கழுத்தணியான கதை:**

சில வீடுகளில் கணவன் விருந்தினரை அழைத்துக் கொண்டு வந்துவிடுவான். மனைவிக்கு மனமிராது. ஒரே போராட்டந்தான். வந்தவர் தாமாகவே பறந்து விடுவார். **நல்லவருக்கு அடையாளம் சொல்லாமற் போதல்** அல்லவா? சில ஆண்கள் விருந்தினரைக் கண்டதும் அஞ்சுவதும் மறைந்துகொள்வதும் இதனாலேயே. சில நேரங்களில் உணவுக் கடையில் உண்ணச் செய்து அப்படியே அனுப்பிவிடுவது முண்டு.

மீறி அழைத்துக்கொண்டு வந்த ஆடவன் ஒருவனது தலையில் சட்டி உடைக்கப்பட்டுக் கழுத்திற்கு அணிகலமான கதை இங்கு நினைவிற்கு வருகின்றது.

**'வீணாய் உடைந்த சட்டி வேணதுண்டு என்தலையில்**
**பூணாரம் பூண்ட புதுமைதனைக் கண்டதில்லை'**

என்னும் அடிகளே இதற்குச் சான்றாகும். இதைப் போன்ற நகைச்சுவை ததும்பும் மற்றொரு கதையும் உண்டு.

**ஔவையார் ஏமாற்றம்:**

விருந்தாக வெளித் திண்ணையில் அமர்ந்திருந்தார் ஔவையார். அவரை எப்படியாவது உண்ணச் செய்ய வேண்டும் என்பது அவ்வீட்டு ஆடவனின் ஆவல். ஆனால் மனைவியோ கொடுமையின் இருப்பிடம். விருந்து வந்துளதென அவளிடம் அறிவிக்கவும் அச்சம். ஆதலின் அவளைத் தன்வயப் படுத்துவதற்காகச் சில தொண்டுகள் செய்ய முற்பட்டான். அவள் அருகில் சென்றான். தலையிலுள்ள ஈரையும் பேனையும் எடுத்தான். கூந்தலைக் கோதி முடித்தான். தண்ணீரால் முகத்தைத் தூய்மை செய்து துடைத்தான். பொட்டிட்டான், மற்றும் பணிவிடைகள் பல புரிந்தான். இனி நம் குறையை மனைவி ஏற்கலாமென அரைகுறையாய் நம்பினான். கட்டிக்கொண்டான் கையை. பொத்திக்கொண்டான் வாயை. மெல்ல விருந்து வந்துள்ளதென விண்ணப்பம் செய்தான். அவ்வளவுதான். அம்மைக்கு வந்தது சினம். எழுந்தாள். ஆடினாள். சரமாரியாகப் பாடி

னாள் சில பாடல்களை. அவனோடினான். விட்டா ளில்லை. தானும் ஓடினாள். பழமுறத்தாலும் சாடினாள். இவ்வளவுதானா? இன்னும் என்னென் னவோ சிறப்புகள் எல்லாம் செய்தாள். பார்த்தார் ஔவையார். என்ன செய்வார் அந்தோ! இவ்வளவு நேரம் அவர் வாய் உண்ணக்காத்திருந்தது. இப்போது ஏமாற்றம் எய்திற்று. ஆனால் உண்பதற்குப் பதிலாக,

**''இருந்து முகத்திருத்தி ஈரொடு பேன்வாங்கி**
**விருந்துவந்த தென்று விளம்ப—வருந்திமிக**
**ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தால்**
**சாடினாள் ஓடிமுன் தான்''**

என்று பாடத் தொடங்கிவிட்டது அவ்வாய்.

**சில ஆடவர் தாழ்நிலை;**

ஆனால் இவ்விதமான பெண்கள் எங்கேயோ சிலர் தாம் இருப்பார்கள். பெண்கட்கு இக்குணம் சிறிதும் கூடாது. பெண்மைக்குரிய தாய்மை உள்ளமே இருக்க வேண்டும். பெண்கள் மட்டுமா? ஆண்களும் ஒத் துழைக்க வேண்டும். சில ஆண்கள் இதற்கு முரணாய் உள்ளார்கள். **எச்சில் கையால் காக்கை ஓட்டாதவர்** என்பது இன்னோரையே. தப்பித் தவறி மனமிரங்கி மனைவி விருந்தோம்பினாலும் வைவார்கள். அடிக்கவும் செய்வார்கள். அதனால் பெண்மணிகள் சிலர், கணவர் அறியாதபடி விருந்தோம்பிக் குடும்பத்தை விளக்கப் படுத்துவதுமுண்டு.

**விருந்தோம்பும் சிறப்புரிமை:**

இல்லறத்தார்கள் இவ்வளவு குறுகிய மனப்பான்மையுடன் இருக்கக்கூடாது. தங்கள் வயிறுமட்டும் வளர்ந்தால் போதுமா? "**உயிர் வாழ்வதற்காக உண்கின்றோம்; உண்பதற்காக உயிர் வாழவில்லை**" என்னும் பொன்மொழியின் கருத்து ஈண்டு ஆராய்வதற்குரியது. உலகில் பலர்க்கும் உதவி வாழவேண்டும். அதற்காக உயிர் நீண்ட நாளைக்கு உடம்பில் நிலைக்கவேண்டும். அதற்காக உண்ணவேண்டும். இங்ஙனமின்றி ஒருவர்க்கும் உதவாமல் தாம் மட்டுமே உண்டு உறங்குவதற்காக உயிர் வாழக் கூடாது. இக்கருத்தை அப்பொன்மொழி புலனாக்குகின்றது. "**மருந்தேயாயினும் விருந்தோடுண்**" என்பது மற்றொரு பொன்மொழியாம். ஆனால், மற்றொன்று; கணவற்கு மனமில்லாது போயினும் மனைவியால் விருந்தோம்ப முடிந்தாலும் முடியலாம். மனைவிக்கு மனமில்லாது போனாலோ கணவனால் சிறிதும் முடியவே முடியாது. பழக்கமின்றித் திடீரெனச் சிறிது வெந்நீர் சுடவைத்துக் கொடுக்கவும் முடியாது. வீட்டிலுள்ள தாள்களும் (காகிதங்களும்) மண்ணெண்ணெயும் தீர்ந்திருக்குமே தவிர அடுப்பு மூண்டிருக்காது. இப்பணி சிறப்பாகப் பெண்மக்கட்கே உரியதாம். எனவே பெண்மணிகள் இக்கடமையை உணர்வார்களாக. அவ்வீடே விளக்கம் பெறும்.

**கணவனைக் காத்தல்:**

மேலும், வீடுகளில் பெண்கள் இல்லாவிட்டால் ஏமாற்றம் விருந்தினர்க்கு மட்டுமா? வீட்டிற்குரிய

ஆடவனும் நலம் பெறுவதில்லை. சில சமயங்களில் முழுப்பட்டினியும் கிடக்கவேண்டியிருக்கின்றது, சமையலாள் வைத்து உண்பதும், உணவுக் கடையில் உண்பதும் உயிர்ப்பற்றவையாகும். சமையலாட்கும் உணவுக் கடைக்காரர்கட்கும் உண்பவர் நிரம்ப உண்ண வேண்டுமென்ற பேரன்பு உண்டோ? உணவு உடம்புக்கு ஒத்துக்கொள்ள வேண்டும் என்ற பேரிரக்கந்தான் உண்டோ? பிழைப்புக்காகவே அவர்கள் செய்கின்றார்கள். உண்மையானவர் எங்கேயோ ஒருவரிருவர் இருக்கலாம். போதுமா? கணவரை இனிய பேச்சாலும் இனிய உணவாலும் இன்புறச் செய்பவர்கள் பெண்டிரே. இத்தகைய மனைவியைப் பெற்ற ஆடவனுக்கே வீடு விளக்கமாகத் தோன்றும் என்பது தெளிவு. இதனைக் குறுந்தொகைச் செய்யுள் ஒன்றால் உணரலாம்.

**கணவற்குத் தொண்டு:**

தம் கணவனுக்குத் தக்க முறையில் தொண்டு செய்த ஓர் பெண்ணின் பெருமையை, அவள் செவிலித்தாய் பெற்ற தாயிடம் பின் வருமாறு புகழ்ந்து பேசலானாள்.

''நம் பெண் தன் கணவனிடத்தில் எவ்வளவோ அன்புடையவளாகக் காணப்படுகிறாள். காலநீட்டிப்பில்லாமல் சுவையோடும் சமைத்து அவனுக்குப் பரிமாறுகின்றாள். ஒருநாள் நிகழ்ச்சி ஒன்றை ஓதுவேன் கேள்! விலையுயர்ந்த ஆடை உடுத்திக்கொண்டிருந்தாள். அதனோடு தயிர் கடைந்தாள். அவ்வமயம் அடுப்பின் மேல் வைத்திருந்த உணவு கொதிக்கத்

தொடங்கியது. உடனே தயிர் கடைவதை விட்டு விரைந்தெழுந்தாள். கட்டியிருந்த புடவைநெகிழ்ந்தது. விலையுயர்ந்த தென்றும் எண்ணாது தயிர்கடைந்த கையாலேயே புடவையைக் கட்டியபடியே அடுப்பின் அருகில் ஓடினாள். தாளிதப்புகை கண்ணையும் மூக்கையும் அப்புவதையும் பொருட்படுத்தாது தாளிதம் செய்தாள். இங்ஙனம் விரைவில் சுவை நிரம்பிய உணவு சமைத்துக் கணவற்குப் பரிமாறினாள். அவனும் மிகவும் நன்றாயுளது எனப் பாராட்டிக் கூறி உண்டான். அவன் சொல்வதைக் கேட்டாள். ஆவலோடு உண்பதையும் கண்டாள். அவள் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. நான் அருகில் இருத்தற்கு நாணி, மிகவும் நுட்பமாக மலர்ந்தது அவள் முகத்தாமரை. என்னென்று புகழ்வது அவள் குடும்பத்திறனை!'' என்று பெண்ணின் குடும்ப விளக்கத்தை அழகாக எடுத்தியம்பினாள். இவ்வரலாறு.

**''முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கம் கழாஅ துடீஇக்**
**குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்**
**தான் துழந் தட்ட தீம்புளிப் பாகர்**
**இனிதெனக் கணவன் உண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே''**

என்னும் குறுந்தொகைப் (167) பாடலில் குறிக்கப் பட்டுள்ளது. எனவே நன்மனைவியால் கணவன் பெறும் நன்மைகள் பல என்பது போதரும்.

**கண்ணகியின் காதல்:**

மேலும், இவ்விடத்தில் கண்ணகியின் காதற் செயலொன்றினை நினைவுக்குக் கொண்டுவராமல் இருக்க முடியவில்லை. அவ்வரலாற்றை அழகாகச் சிலப்பதிகாரத்தில் பொறித்துள்ளார் இளங்கோவடிகள். கண்ணகி கோவலனுடன் மதுரையில் மாதரி வீட்டில் அடைக்கலம் புகுந்தாள். கணவன் களைப்பைப் போக்கச் சமைக்கவும் தலைப்பட்டாள். அவள் பிறந்ததோ மிகப்பெருஞ் செல்வக் குடும்பம். வளர்ந்ததோ பல பணிப் பெண்கள் சூழ, வாழ்க்கைப் பட்டதும் இரும்பெரும் செல்வக் குடும்பமே. ஆதலின அவள் கடுமையான வேலைகளைச் செய்தறியாதவள். இவ்வியல்புடைய கண்ணகி, கணவற்கு ஏதோ பசி தீரும் அளவில் எதையோ கொதிக்க வைத்தாளில்லை. எங்கேயோ ஒரு மூலையில் இருக்கச் செய்து அள்ளிப் போட்டாளிலள். பலவிதமான காய்களையும் அரிந்தாள். அதனால் மெல்லிய கைவிரல்கள் சிவந்தன. அடுப்பு மூட்டிச் சமையல் தொடங்கினாள். அதனால் கண்கள் சிவந்தன. முகத்தில் வியர்வை தோன்றிற்று. பொருட்படுத்தினாளில்லை. கணவனைக் களிக்கச் செய்யக் கைப்பாகத்திறன் முழுதையும் பயன்படுத்தினாள். சமைத்தும் முடித்தாள். பின்பு, தூய்மையானதோரிடத்தில் ஒரு தடுக்கையிட்டாள். கணவனை அதில் அமரவைத்தாள். பூப்போன்ற அழகிய கையால் கால்களில் தண்ணீர் விட்டுத் தூய்மை செய்தாள். வணங்கினாள். பின், அவன் முன்பு தண்ணீர் தெளித்துத் தடவிவிட்டாள். அவ்விடத்தில் ஒரு தலை

வாழை இலையைப் பரப்பினாள். பணிவுடன் பரிமாறினாள். 'அன்பரே! நன்றாக உண்டு மகிழ்க' என்று இன்மொழியும் புகன்றாள். கோவலன் நாக்கு அறுசுவையமுதால் இன்புற்றது. இடையிடையே தேனூறப் பாலூறப் பேசிய கண்ணகியின் இன்சொல்லால் செவிகளும் இன்புற்றன. அவன் மனமார வயிறார உண்டு மகிழ்ந்தான்.

ஒரு மனைவி தன் கணவற்குச் சென்ற இடத்தில் இவ்வளவு சிறப்புச் செய்வதென்றால் எளிதா? இந்நிலை பலபடப் பாராட்டிப் பகர்தற்குரியதாம். இந்நிகழ்ச்சி முழுவதையும் சிலப்பதிகாரத்தால் செவ்விதின் உணரலாம். கண்ணகி கற்புடையளாகக் கொண்டாடப் பெறுவது இதனால் அல்லவா? இதுமட்டுமா? கோவலன் பெயர் இன்றும் உலகில் விளங்குவதற்குக் காரணமும் கண்ணகி யென்னும் விளக்கேயன்றோ?

**தம் இல்லும் தம் உணவும்:**

இங்கு மற்றொன்று நோக்குதற்குரியது. கண்ணகி வெளியூரில் பிறர் வீட்டிலேயே இங்ஙனம் சிறப்புச் செய்துளாள் என்றால், கணவன் ஊரில் கணவன் வீட்டில் எவ்வளவு சிறப்புச் செய்திருப்பாள் என்பது நன்கு விளங்கும். பிறர் வீட்டில் பிறரால் கொடுக்கப்பட்டு உண்ணும் தெய்வ அமிழ்தத்தைவிட, தம் வீட்டில் மனைவிமக்களுடன் கூடியும், பலர்க்கும் பகுத்துக் கொடுத்தும் உண்ணும் தம் கூழ் மிகச் சிறந்ததாகும். இதனைத் தித்திக்கத் தித்திக்கத் தேனொழுகும் திருக்குறள் ஒன்றால் தெளியலாம்.

தன் காதலியோடு கலந்து சிற்றின்பம் நுகர்ந்த ஓர் ஆண்மகன், தான்பெற்ற இன்பத்தைப் புகழக் கருதி, அதனினும் சிறந்ததோர் இன்பத்தை அதற்கு உவமை யாகக் கூறலானான். அது வருமாறு: ''என் காதலி யோடு கலந்து யான்பெற்ற இன்பமானது, தம் சொந்த வீட்டில் (மனைவியுடன்) இருந்துகொண்டு தாம் தேடிய சொந்த உணவைப் பலர்க்கும் பகுத்துக் கொடுத்து உண்ணும் இன்பம் போன்றுள்ளது'' என்பதே அவன் புகழ்மொழி. இக்கருத்து, திருக்குறள் காமத்துப் பாலிலுள்ள

**''தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்**
**அம்மா அரிவை முயக்கு''**

என்னும் குறளில் நயம்பட நவிலப்பட்டுளது.

**பொறுப்பும் சகிப்பும்:**

மேலும், பெண்களை வீட்டின் விளக்காக விளம்பு வதற்குக் காரணம் வேறொன்றும் உண்டு. அது. ஆண்களைவிடக் குடும்பப் பொறுப்பும் சகிப்புத் தன்மையும் பெரிதும் உடைமையேயாகும். பெண் தாய் வீட்டில் செல்வமகளாக வளர்க்கப்பட்டு வருகின்றாள். கணவன் வீட்டிற்கு வந்ததும் பெரிய பொறுப்புணர்ச்சி உடையவளாகி விடுகின்றாள். தாயினிடத்தில் கொஞ்சிக் கொஞ்சி விருப்பம் போன்றிருந்தவள், இங்கு எழுந்ததிலிருந்து தூங்கும் வரையும் கணவற்காகவும் குழந்தைகட்காகவும் ஓடியாடுகின்றாள். எவ்வளவோ வேலைகளைச் செய்து முடிக்கின்றாள். வீட்டுப் பொருள்களைச் சிதறாமல் காக்கின்றாள். கணவற்கும்

குழந்தைக்கும் நோய் வந்து விட்டால் மருத்துவம் பார்க்கின்றாள். திடீரென விருந்தினர் வந்துவிட்டால் தன் உணவை அவர்கட்கிட்டுத் தான் பட்டினி கிடக்கின்றாள். அல்லது, அலுப்பைப் பொருட் படுத்தாது நேரங்கெட்ட நேரத்திலும் மற்றொரு முறை சமைத்துப் பரிமாறுகின்றாள். தன் உடம்பு சோர்வுற்றிருந்தாலும் விடுவதில்லை. கணவன் நன்மை யிலேயே கண்ணும் கருத்தும் கொள்கின்றாள். மெல்ல எழுந்து சமையல் முதலிய வேலைகளைச் செய்து முடிக்கின்றாள். ஒரு கற்புடைய பெண் இங்ஙனம் பலவிதத்திலும் தன் கணவற்காகத் தன் வாழ்க்கை யினையே உரிமை (தியாகம்) செய்கின்றாள். **'வளங்கெழு திருநகர்ப் பந்து சிறிதெறியினும்'** என்னும் அகநானூற்றுப் பாடலாலும் பிறவற்றாலும் இதனை நன்குணரலாம். தாய்வீட்டில் விளையாடி னாலும் உடல் நொந்து போவதாகக் கருதியவள், கணவற்காகப் பெருமுயற்சி யெடுத்துக் கொண்டதாக அப்பாடல்கள் அழகாக அமைந்துள்ளன.

**உயிர் நீத்தல்:**

தம் கணவர்க்கு நேரும் துன்பம் பொறாது உயிர் நீக்கும் பெண்மணிகளும் உளர். இதுபற்றிய உருக்கமான வரலாறு ஒன்று, மணிமேகலை என்னும் நூலில் அவலச்சுவை ததும்ப அழகாக அமைக்கப் பட்டுளது. பண்டொரு காலம் காவிரிப் பூம்பட்டினத்தில் கோதமை என்னும் பெண்ணொருத்தி தன் கண்ணில்லாக் கணவனொடு வாழ்க்கை நடாத்தி வந்தாள். அவர்கட்குச் சார்ங்கலன் என்னும் செல்வத்

தனிமகன் இருந்தான். வயதில் சிறியவன். அவன் ஓர்நாள் அவ்வூர்ச் சுடுகாட்டைக் கண்டு அஞ்சி உயிர்விட்டான். அதுபொறாத கோதமை, அவ்வூர்த் தெய்வத்தை விளித்து, ''ஏ தெய்வமே! என்மகன் உயிர்க்குப் பதிலாக என் உயிரை எடுத்துக்கொண்டு அவனை உயிர் பெறச் செய்வாயேயானால், அவன் என் கண்ணில்லாத கணவனைக் காப்பாற்றுவான்'' என்று முறையிட்டுக் கெஞ்சினாள். பயன் கிடைக்க வில்லை. மகன் இறந்தது ஒரு புறம் நிற்க, 'இனிக் கணவர் நிலை என்ன ஆவது' என்றெண்ணிப் பெரு மூச்சு விட்டாள். அவ்வளவுதான்; அவளும் மகளைப் பின் தொடர்ந்தாள்.

**பெண்டிரால் பெருமிதநடை:**

இவ்வரலாற்றைக் கூர்ந்து நோக்கினால், கோதமை சிறிதும் தன்னலங் கருதாது, பெரிதும் கணவன் நலத்தையே கருதினாள் என்பது கருதப்படு கின்றது. இப்போதும் சில குடும்பங்களில் தம்மைக் கணவர் எவ்வளவு கடுமையாக நடத்தினாலும், அவர் மேல் சிறிதும் வெறுப்பின்றி, உள்ளன்போடு அவர் நலத்திற்கே பாடுபடும் பெண்ணின் நல்லார்களை நாம் காண்கின்றோம். கணவன் தன் மனைவியின் இத்த கைய சிறந்த இயல்பைக் கண்டு தான் செய்த கொடுமைக்குத் தானே நோவதும் வெட்கப்படுவதும் உண்டு. பிணக்கின்றிக் குடும்பம் விளக்கம் பெறுதற்கு இது ஒரு சிறந்த வழியாகும். நன்மனைவி வாய்ப்பதும் ஒரு நற்பேறே. புகழ்ச்சிக்குரிய செயல்களைச் செய்யும்

மனைவி வாய்க்கப் பெறாதவர்கட்குத் தங்கள் எதிரிகள் முன்பு சிங்கம்போல் நடக்கும் பெருமிதநடை யில்லை. இதனை,

**''புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்**
**ஏறுபோல் பீடு நடை''**

என்னும் திருக்குறள் தெளிவுபடுத்துகின்றது.

**வள்ளுவர் வருத்தம்:**

இத்தகைய நன்மனைவி வாய்க்கப் பெற்றவர்கள் அம்மனைவி இறந்துவிட்டால், உயிரும் உடலுமா யிருந்த பேரன்பு பற்றிப் பெரிதும் வருந்துவார்கள். மனைவியையிழந்த வள்ளுவரே வருந்திக் கூறியதாக, உருக்கமான பாடலொன்று தனிப்பாடல் திரட்டில் உள்ளது. ''அன்பு மிக்க என் மனைவியே! கணவன் சொல் கடவாக் கற்புக்கரசியே! எனக்கு மிகவும் இனி மையாகச் சமைத்துப் பரிமாறுவாயே! பல்வகைப் பணி விடைகளையும் அன்போடு செய்வாயே! யான் படுத்த பின்பு வீட்டுவேலைகளையெல்லாம் அடக்கிப் பின்பே படுத்துக்கொள்வா யன்றோ? எனக்கு முன்னெழுந்து வேலைகளைச் செய்யத் தொடங்குவாயன்றோ? இத்தகைய நீ என்னை விட்டுச் சென்றாயே! இனி யான் என்செய்வேன்? என் கண்கள் இரவில் எப்படித் தூங்குமோ?'' என்னும் கருத்தில்

**''அடிசிற் கினியாளே அன்புடை யாளே**
**பதிசொல் தவறாத பாவாய்—அடிவருடிப்**
**பின் தூங்கி முன்னெழுந்த பேதையே போதியோ**
**என் தூங்கும் என்கண் இரா''**

என அவலச்சுவை ததும்ப அழகாக அமைந்துளது அப்பாடல். வள்ளுவர் வருத்தத்திற்குக் காரணம் அம்மையின் அரும்பணி யன்றோ?

**பொழுது போக்கு:**

எனவே, பெண்மணிகள் இக்கடமைகள் யாவற்றையும் நன்குணரவேண்டும், நற்பொழுது போக்க வேண்டும். இஃதறியாத பெண்டிர் சிலர், வீடுகளில் கும்பலாக மாதர் மாநாடு கூட்டி விடுகின்றார்கள். பயனற்ற வீண்பேச்சுகளைக் கொட்டி யளக்கின்றார்கள். அல்லது எப்போதும் தாயமாடிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால் நாளெல்லாம் உழைக்கும் பெண் மக்கட்கு ஓய்வு வேண்டியதுதான். அது குறிப்பிட்ட ஓரளவினதாக இருக்க வேண்டும். ஓய்வாகவும் தெரிய வேண்டும்; அதனோடு நல்ல பயனளிப்பதாகவும் இருக்கவேண்டும். நல்ல நூற்கள்தமையோ (புத்தகம்), செய்தித்தாட்களையோ (பத்திரிகை) வைத்துக் கொண்டு படிக்கலாம். தமக்குப் படிக்கத் தெரியாது போயின், தெரிந்தவர்களைப் படிக்கச் சொல்லிக் கேட்டுக்கொண்டாயினும் இருக்கலாம். மேலும் பின்னல் முதலிய சிறு கைத்தொழில்களையும் செய்யலாம்.

**பல்வகை வன்மை:**

மற்றும், பெண்கள் வேலை செய்வதற்கு வேலைக்காரியாயிருந்தால் மட்டும் போதாது. சிற்றின்பத்திற்கு மனைவியாய் இருந்தாலும் போதாது.

கணவற்கு உணவு பரிமாறுங் காலத்தில் தாய்போல் தலையன்பு செலுத்த வேண்டும். **'தாய்க்கடுத்தது தார'மன்றோ?** நோயுற்ற காலத்தில் மருத்துவர் போன்று மருத்துவம் செய்ய வேண்டும். கணவன் ஒரு காரியத்தைச்செய்யத் தொடங்கின் அமைச்சனைப் (மந்திரி) போன்று அறிவு கொளுத்த (யோசனை கூற) வேண்டும். தளர்ந்த காலத்தில் நண்பனைப் போன்று உதவ வேண்டும். தீயவழியில்செல்லின் அமைச்சனைப் போன்றும் நண்பனைப் போன்றும் இருந்து இடித்துரைத்து நல்வழிக்குத் திருப்பவேண்டும். இப்பல்வகை வன்மைக்கு எடுத்துக்காட்டாக மங்கையர்க்கரசியம்மையாரைப் போன்ற உயர்நலப் பெண்மணிகளின் வரலாற்றை மேற்கொள்ளலாம்.

**மங்கையர்க்கரசியின் மாண்பு:**

மதுரைமாநகரில், கூன்பாண்டியன் என்னும் அரசன் ஆண்டுகொண்டிருந்தான், பண்டைக் காலத்திலிருந்து தம் முன்னோர் கைக்கொண்டு வந்த சைவ சமயத்தைப் புறக்கணித்தான். இடையே சமண சமயத்தைத் தழுவினான். நாடு முழுமையும் சைவ விளக்கம் குன்றத் தலைப்பட்டது. அவன் மனைவி மங்கையர்க்கரசியார்க்கு அது பிடிக்கவில்லை. எங்ஙனமாயினும் உரிய சமயமாம் சைவத்திற்குக் கணவனைத் திருப்பவேண்டுமென்று அம்மையார் எண்ணினார்கள். சீர்காழியில் தோன்றிய திருஞான சம்பந்தரை வரவழைத்தார்கள். சம்பந்தர்க்கும் சமணர்க்கும் சமயப்போர் நிகழ்ந்தது. சம்பந்தரே வெற்றி

பெற்றார். பாண்டியனும் கூன் நீக்கப்பெற்று நின்ற சீர் நெடுமாறன் எனப் பெயர் பெற்றான். அம்மையார் எண்ணமும் நிறைவேறியது. நாடும் நலமுற்றது.

**அனைவரும் அவரே:**

ஈண்டு மங்கையர்க்கரசியம்மையாரைப் பாண்டிய னுக்கு மனைவி யென்று மட்டும் கூறுவதா? வேலைக் காரியென்றுதான் விளம்புவதா? அல்லது, கூன் நீக்கும் படிச் செய்ததால் மருத்துவர் என்றழைப்பதா? தமக்குரிய சைவசமயத்தைவிட்டுப் புறச்சமயமாகிய சமணத்தைத் தழுவிய தவறைத் திருத்தியதால் அமைச்சன் என்பதா? ஆருயிர் நண்பன் என்பதா? அல்லது சமய குரு என்றே சாற்றிவிடலாமா? ஆகவே அம்மையார் அனைவருமாக இருந்து, அவன் அரசி யலையே விளக்கம் பெறச் செய்தார் என்றால் மறுக்கவும் முடியுமோ? மற்றும் தன் கணவனைக் கொலை செய்வித்த கொடுமைக்கு மனம் பொங்கி, அவ்வூர் அரசன் முன்பு சென்று, நீதிகள் பலவற்றைக் கூறி, அவ்வூரையே எரித்து ஒறுத்த (தண்டித்த) கற்புசால் கண்ணகியைப் பெரிய வழக்கறிஞர் என்றோ, பெரிய நீதிபதி என்றோ கூறினால் வரும் தவறென்ன உளது?

**பெரியார்களின் வாய்ப்பு:**

இங்ஙனம் நன்மனைவியரைப் பெற்றதனால் அன்றோ பாண்டியன் பண்பட்டான்; சிறுத்தொண்டர் சிறப்புற்றார்; இளையான்குடிமாறர் இன்பெய்தினார்;

திருவள்ளுவர் திகழ்ந்தோங்கினார்; பல பெரியார்களும் பற்பல நன்மைகள் வாய்க்கப் பெற்றார்கள். அவர் வீடுகள் எல்லாம் இன்பத்திற்குரிய எழிலிடமாகக் காணப்பட்டன.

**ஒத்துழைப்பு:**

ஆனால், ஆண்கட்கு உழைக்கவே பிறந்தவர்கள் பெண்கள்; ஆண்கள் அவர்களை வருத்தித் தம் விருப்பம் போல் வேலைவாங்கிக் கொள்ளலாம் என்றெண்ணுவதோ, பேசுவதோ, செய்வதோ மிகப் பெருந்தவறாகும். ஆடவரும் அவர்தம் நற்பணிக்கு ஒத்துழைத்து அவர்களை நன்முறையில் நடாத்தல் வேண்டும். அப்போதே பெண்மக்களின் வாழ்க்கையும் பொலிவு பெறும். மேலும் மேலும் அவர்களால் குடும்ப விளக்கமும் செய்ய முடியும். இதனை அறியாத அறிவிலிகள் சிலர், கீரியும் பாம்பும் போலவும், எலியும் பூனையும் போலவும் இருந்து வருகின்றார்கள். **''வேண்டாம் என்ற பெண்டாட்டி கை பட்டால் குற்றம் கால் பட்டால் குற்றம்''** என்றது வீணா? அவ்வீட்டில் எப்போதும் ஒரே இரைச்சல் குடிகொண்டிருக்கும். கண்டோர் நகைப்பர். இங்ஙனம் இருத்தலாகாது. ஒவ்வொரு வீட்டிலும் உள்ள கணவனும் மனைவியும், திருவள்ளுவரைப் போன்றும் அவர்தம் மனைவியைப் போன்று மிருந்து வாழ்க்கை நடாத்தல் வேண்டும். அவ்வீடே விளக்கம்பெறும். குடும்பத்தில் கணவன் குடி, சூது முதலிய தீநெறிகட்கு அடிமைப் பட்டுக் கெட்டவனாய் இருப்பினும், மனைவி தன் திறமையால்

அவனை வயப்படுத்திக் குடும்பத்தை விளக்கஞ் செய்ய வேண்டும். பெண்கள் முயன்றால் அது முடியும் என்பது உறுதி.

எனவே வள்ளுவர் மனைவி, இளையான்குடிமாறர் மனைவி, கண்ணகி, மங்கையர்க்கரசி முதலிய பெண் மணிகளின் வரலாற்றை நோக்கின், பெண்கள் வீட்டின் விளக்காய் விளங்குவதோடு நாட்டின் விளக்காகவும் திகழ்கின்றார்கள் என்று சொல்லத் தடை யாதொன்றும் இல்லையல்லவா?

---

பெண்களே நாட்டிற்குப் பெருவிளக்கம் ஆதலினால்
பெண்களைத் தாழ்த்துவது பேதமையாம் அம்மானை

நன்மக்களைப் பெற்று நாட்டிற்கு நலனளிக்கும்
பெண்மக்கள் தமிழுணர்ச்சி பெறவேண்டும் அம்மானை.

### மணமக்கள் தேடுதல்

*பெண் வைத்திருப்பவர்களே! மாப்பிள்ளையின் சொந்த வருமானத்தைக் கருதிப் பெண் கொடுப்பீராக! முன்னோர் சொத்தில் பிழைக்கும் தலையில்லாத முண்டங்களுக்குப் பெண் கொடாதீர்கள் என்று எச்சரிப்பதுபோல் "தற் கொண்டான் வளம்" என்னும் தொடர் அமைந்திருக்கின்ற தல்லவா?*

*பெண் பார்ப்பவர்களே! பணத்துக்காகவும் பளபளப்புக் காகவும் பெண் கட்டாதீர்கள்! பண்புக்காகப் பெண் கட்டுவீர்களாக என்று எச்சரிப்பது போல் "மாண்புடைய வள்" என்னுந்தொடர் அமைந்திருக்கின்றதல்லவா? என்ன அழகு.*

— சுந்தர சண்முகனார்.

---

## இரண்டாம் பகுதி

# பெண்களின் விளக்கு

**விளக்கிற்கும் விளக்கு:**

வீட்டின் விளக்கு பெண்கள் என்பது முதல் பகுதியில் விளக்கப்பட்டது. இனி அவ்வீட்டின் விளக்காக்கிப் பெண்களை விளக்கமுறச் செய்வது எவ் விளக்கு? என்பது இவ்விரண்டாம் பகுதியில் விளக்கப்படும். என்ன! ஒரு விளக்கால் மற்றொரு விளக்கு விளக்கம் பெறுவதும் உண்டோ எனின், ஆம் உண்டு. கூர்ந்து நோக்கின் உண்மை விளங்கும். ஞாயிறாலேயே (சூரியனால்) வெண்ணிலா (சந்திரன்) விளக்கம் பெறுகின்றது. மற்றும், நம் கண்களாகிய விளக்குக்களும் பகலில் ஞாயிறாலும் இரவில் வெண்ணிலாவாலும் விளக்கம் பெறவில்லையா? அவ்வளவு ஏன்? நம் வீடுகளிலேயும் ஒரு விளக்கைக் கொண்டு தானே மற்றொரு விளக்கை ஏற்றுகின்றோம். எனவே, வீட்டின் விளக்காகிய பெண்களை விளக்கும் வேறொரு விளக்கும் உண்டு என்பது உணரக்கிடக்கின்றது. அதனைப் பின்வரும் சிறு கதையின் வாயிலாக நன்கறியலாம்:

**சிறுகதை:**

செல்வக் குடும்பத்தைச்சேர்ந்த பெண்ணொருத்தி. வயது முப்பது இருக்கலாம். தன் கணவனுடன் திருப்

பதிகள் (க்ஷேத்திரங்கள்) தோறும் சென்று நன்னீர் (தீர்த்தம்) ஆடியும் கடவுளை வணங்கியும் வரலானாள். ஒரு நாள் இராமேசுவரத்தை நோக்கிப் புகை வண்டியில் சென்றுகொண்டிருந்தாள். உடம்பில் விலையுயர்ந்த பட்டுப் புடவை. அதனோடு பன்மணிகளால் (நவரத்தினங்களால்) செய்யப்பட்ட அணிகலன்கள் சுமையைத் தந்துகொண்டிருந்தன. கூந்தலில் மணமிக்க பூ திகழ்ந்தது. முகத்தில் பூசப்பட்டுளது மஞ்சள். நெற்றியில் இடப்பட்டுளது பொட்டு. இவ்வளவிருந்தும் பார்வையில் சிறிதும் சுறுசுறுப்பில்லை. பேச்சில் எடுப்பில்லை. உதடுகளில் சிறு புன்முறுவலும் தோன்றவில்லை. சுருங்கக் கூறின் முகம் தெளிவின்றிச் சோர்வுற்றிருந்தது. உள்ளத்தில் பெருங்கவலையொன்று உள்ளதென்பதை அறிவித்து நின்றது, **'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்'** அல்லவா? அப்பெண் தன் எதிரில் நடக்கும் காட்சியொன்றைக் கண்டாள். கண்டு சற்றுப் பொறாமையும் வருத்தமும் கொண்டாள், அக்காட்சிதான் என்ன?

ஓர் ஏழைப் பெண். தலை புரண்டுள்ளது. உடம்பிலோ கிழிந்த அழுக்குப் புடவை. காதுக்கும் மூக்குக்கும் அணிகலம் குச்சுகளே. ஆனால் அவள் பார்வையில் சுறுசுறுப்பும் பேச்சில் மிடுக்கும் காணப்பட்டன. சிரிப்புக்கோர் எல்லையில்லை. முகத்தில் பெரியதொரு விளக்கம் காணப்பட்டது. ஒரு வயது குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தாள். ஒரு பக்கத்தில் மூன்று வயதுப் பெண்ணும், மற்றொரு

பக்கத்தில் ஐந்து வயதுப் பையனும் சாய்ந்து கொண்டிருந்தார்கள். அப்பெண் தன் கைக்குழந்தையைப் பார்த்துச் சிரிக்கின்றாள். கொஞ்சிக் கொஞ்சிப் பேசுகின்றாள். உச்சிமோந்து முத்தம் கொடுக்கின்றாள். பககத்திலிருக்கும் பிள்ளைகளை அணைத்துக் கொள்கின்றாள். அவர்கட்குக் கட்டு சோற்றை அவிழ்த்து ஊட்டுகின்றாள். அவர்கள் உண்பதைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றாள். அவளிடத்தில் பெரிய பேறு பெற்றாற் போன்றதோர் இறுமாப்பும் காணப்படுகின்றது. இங்ஙனமாகத் தாயும் பிள்ளைகளும் புகை வண்டியில் செல்வதையும் மறந்து, இப்பேருவகைப் பெரு வாழ்விலேயே திளைத்திருந்தார்கள்.

இவர்கள் பக்கத்தில் வேற்றுக்கிழவி யொருத்தியும் அமர்ந்திருந்தாள். அக்கிழவி அவ்வேழைப் பெண்ணைப் பார்த்து, எல்லாம் உன் பிள்ளைகள் தாமா? என்று ஒரு கேள்வியும் போட்டாள். அதற்கப்பெண் 'ஆமாம் பாட்டீ! மூன்றும் என் பிள்ளைகளே. ஏதோ கடவுள் கொடுத்தார்' என்று மகிழ்ச்சியும் இறுமாப்பும் தோன்றப் பதில் கூறினாள்.

பின்பு கிழவி முதலில் கூறிய செல்வப் பெண்ணை நோக்கினாள். மெல்ல, 'எந்த ஊருக்குச் செல்கின்றாயம்மா?' என்று கேட்டாள். அப்பெண் இராமேசுவரத்திற்குச் செல்கின்றோம் என்று விடை பகர்ந்தாள். மேலும் கிழவி, 'அப்படியா! சரிதான். உங்களைப் பார்த்தால் பெரிய பணக்காரராய்த் தோன்றுகின்றது. ஆனால் உள்ளத்தில் ஒரு பெருங் கவலை குடியிருப்ப

தாக முகம் அறிவிக்கின்றதே. காரணமென்ன?' என்று கேட்டாள். அதற்கப்பெண், 'விளக்கமின்றிப் பண மிருந்து என்ன செய்வது? பேரை விளக்க ஒன்று மில்லையே. பின்னால் விளக்கெரியாது போய்விடும் போலுள்ளதே. இதுதான் பெருங்கவலை. இதற்காகத் தான் இராமேசுவரம் செல்கிறோம். செய்யாத அறமே (தருமமே) யில்லை. எல்லாம் தலைவிதிப்படிதானே நடக்கும்' என்று சோர்ந்து புலம்பலானாள். பின்பு கிழவி, 'நன்றாகச் சொல்லம்மா; குழந்தை குட்டி ஒன்றுமில்லையே என்பது தானேதங்கள் பெருங் கவலை? எல்லாம் கடவுள் கொடுப்பார்; வருத்தப்பட வேண்டா' என்று ஆறுதல் கூறினாள். அவளும் அவ்வாறுதலைக் கேட்டுத் தேறுதல் கொண்டாள். இப்பல்வகைக் கூத்துக்களோடு புகை வண்டியும் விரைந்து சென்றது.

**உலகினர் பாராட்டு:**

இக்கதையால், பெண்கள் தம்மை விளக்கும் விளக் காகப் பிள்ளைகளையே கருதுகின்றார்கள் என நன்குணரலாம். இப்போதும் உலக வழக்கில், பணக் காரியாய் இருப்பினும் பிள்ளையில்லாதவளை நோக்கி ஏதாவது குழந்தை குட்டி உண்டா என்று கேட்டால், இறுமாப்பொடுங்கிச் சோர்ந்துவிடுகின்றாள். ஏழையா யிருப்பினும் பிள்ளையுள்ளவளை நோக்கி அங்ஙனம், கேட்டால், 'எனக்கென்ன குறைவு; கடவுள் என்னைச் சரியாய்த்தான் வைத்திருக்கின்றார்' என்று இறுமாப் புடன் பதில் விடுக்கின்றாள். ஒரு பெண்ணைப் பெரிய

பணக்காரர் வீட்டில் கட்டிக் கொடுத்தாலும் பிள்ளை யின்றி யிருப்பாளேயாயின் உலகினர் 'ஒன்றும் விளக்க மில்லை' என அவளைப்பற்றிக் குறை கூறுகின்றனர். கொடிய ஏழை வீட்டில் கட்டிக் கொடுத்தாலும் குழந்தையோடு வாழ்வாளே யாயின், ''அந்தப் பெண் வாய்ப்புடையவள்; நன்கு விளக்கமாக வாழ்கின்றாள்'' என்று அவளைப் பாராட்டுகின்றனர். மேலும், பிள்ளையில்லாத குடும்பத்தைக் குறிப்பிட்டு, 'அங்கு விளக்கேற்ற ஆளேது? இனி அக்குடும்பமே பூண்டற்றுப் போய்விடும்' என்று தூற்றுகின்றனர். இவையெல்லாம் புனைந்துரையாகுமோ?

**முதல் கேள்வி:**

அன்றியும் பிள்ளையிலாதார் சிலரைப் பார்த்துப் பிள்ளையுளதா என்று கேட்டால், இல்லையென்று சொல்ல வெட்கப்படுகின்றார்கள். கேட்பவர்மேல் சினங்கொள்வோரும் உண்டு. 'ஒரு செட்டியார், பிள்ளையில்லாத கொடியோன் (பாவி) என்று தன்னைத் தன் தங்கை இழித்துக் கூறியதற்கு வெட்கமும் சினமுங்கொண்டு, அடுத்த பிறவி யிலாயினும் பிள்ளை உண்டாகும்படியாக நோன்பு கிடக்கலாம் என எண்ணித் தன் மனைவியுடன் காட்டிற்குச் சென்றுவிட்டதாகக் கூறும் திருவிளை யாடற் புராணக்கதை மேற் கூறியதை வலியுறுத்து கின்றது. மற்றும், உலகத்தார் புதிதாக ஒருவரைக் கண்டதும், வீடுவாசல் உள்ளனவா? நிலநீர் உள்ளனவா? என்று முதலில் கேட்பதில்லை. குழந்தை

குட்டி உண்டா? என்பதே அவர்தம் முதல் கேள்வி. அப்பேற்றினையே இன்றியமையாதனவாகக் கருது கின்றார்கள். எனவே வீட்டை விளக்கும் பெண்கட்கு விளக்கம் பிள்ளைகளே என்பது மறுக்கமுடியாததோர் உண்மையாகும்.

**சிறப்புரிமை:**

பிள்ளைகள் விளக்கம் அளிப்பது பெண்கட்கு மட்டுமா? ஆண்கட்கும் விளக்கம் அளிக்க வில்லையா? என்ற கேள்விகள் இங்கு முன்னிற்கின்றன. ஆம் உண்மைதான். ஆண்கட்கும் விளக்கமே. ஆயினும் பெறுமுரிமை, வளர்க்கும் உரிமை முதலிய இயற்கைச் சிறப்புரிமைகளை நோக்கிப் பெண்களின் விளக்காகப் பாராட்டுவதே பெரிதும் வழக்கம். ஆண்களினும் பெண்களே தமக்குப் பிள்ளை பிறக்கவேண்டும் என ஆவல் மிகுதியும் அடைகின்றார்கள் ஆண்கள் ஆவல் அடைவதில் அப்படியொன்றும் வியப்புள்ள தாகத் தோன்றவில்லை. ஏனெனில், ஆண்கட்கு அதனால் ஒருவகைத் துன்பமும் இல்லையல்லவா? பெண்கட்கோ அப்படியில்லை. பத்துத் திங்கள் (பத்து மாதம்) கருவுற்றிருக்கும் துன்பம் (கர்ப்பசுமை), பொறையுயிர்க்கும் துன்பம் (பிரசவவேதனை) என்னும் இரண்டால் தாக்கப்பட்டுப்பிள்ளையைப் பெறுகின் றார்கள். மேலும் குழந்தைக்காகத் தாம் மருந்துண் கின்றார்கள். குறிப்பிட்ட உணவை (பத்தியம்) உண் கின்றார்கள். தூக்கம் கெடுகின்றது. இன்னும் பலவகையிலும் தன்னலமற்று வாழ்கின்றார்கள். உடல் நலம் அறவே கெட்டுப்போவதையும் பொருட்படுத்துவ

தில்லை. ஆனால், இவ்வளவு துன்பங்களும் தம்மைத் தாக்கும் என்பதை முன்னதாகவே அறிந்து வைத்தும், தமக்குப் பிள்ளை பிறக்க வேண்டுமென்று ஆவல் கொள்வதில்தான் வியப்புள்ளது, பிள்ளைகளைப் பெண்கட்கு விளக்காகக் கூறுவதும் இதுபற்றியே.

ஆனால், பெண்கள் தம் கணவரால் பெறும் சிற்றின்பத்திற்காகவே இங்ஙனம் ஆவல் கொள்கின்றார்கள் எனப் புல்லிய எண்ணங் கொள்வது பெரிய மடமை. இங்குக் குறிப்பிடப்படும் ஆவல் அஃதன்று. அச்சிற்றின்பந்தான் மணமான பின் இயற்கையாகவே அமைந்து கிடைக்கின்றதல்லவா? ஆதலின், தம் வயிற்றில் கருதங்கிக் குழந்தை பிறக்கவேண்டும் என்ற ஆவலே இங்குக் குறிப்பிடப்படுவதாகும்.

மேற்கூறிய துன்பங்களில் ஒன்றாயினும் ஆண்கட்கில்லை. தாயால் வளர்த்து உருவாக்கப்படும் பிள்ளை, பின்னால் பொருளீட்ட (சம்பாதிக்க) வரும்வரையும் தாம் பொருளீட்டவேண்டிய துன்பம் ஒன்றுமே ஆண்கட்குண்டு. பிள்ளையில்லாவிட்டாலும் அவ் வேலையை ஆண்கள் செய்துதானே தீரவேண்டும். ஆனால் சில குடும்பத்தில் பெற்ற பிள்ளை கொடியனாய் இருப்பனேயாகில், தான் கேட்ட பொருளை வாங்கித் தரவில்லயென்றோ, விரைவில் திருமணம் செய்து வைக்கவில்லையென்றோ தந்தையை அடிப்பதும் உண்டு. அந்த அடிவாங்கும் துன்பம் வேண்டுமானால் சில தந்தைமார்கட் கிருக்கலாம். அது எங்கேயோ ஒன்று. ஆகவே, ஆண்களைவிடப்

பெண்கள் பிள்ளையாவல் கொள்வதிலேயே பெரிதும் வியப்புள்ளது. எனவே, பிள்ளைகள் பெற்றோர் இருவர்க்கும் விளக்காகத் திகழினும், மேற் கூறப் பட்டுள்ள இயற்கைச் சிறப்புரிமைகளை நோக்கிப் பெண்களின் விளக்காகவே கூறிவிடுவதில் குற்ற மொன்று மில்லையல்லவா?

**குழந்தை விளையாட்டு:**

இதற்கேற்றபடியே பெண் குழந்தைகளின் விளையாட்டும் அமைந்துள்ளது. ஆண் பிள்ளைகள் இளம் வயதில் வேறு பல ஆட்டங்களை ஆடுகின்றனர். பெண் பிள்ளைகளோ மணல்வீடு கட்டி மணற் சோறாக்குகின்றனர். அதனோடு குழந்தை விளையாட்டும் ஆடுகின்றனர். ஒரு பொம்மைக்குக் குழந்தை எனப் பெயரிட்டுக் காலில் போட்டுத் தலை முழுக் காட்டுகின்றனர். மருந்தூட்டு கின்றனர். பாலும் போடுகின்றனர். மணற்சோறூட்டு வதும் உண்டு. முத்தமிட்டு அப்பொம்மையோடு கொஞ்சிக் குலாவுவதையும் நிறுத்துகின்றார்களா? இவ்வளவு தாமா? இன்னும் பல செய்கின்றனர். பொம்மை வடிவாக இல்லாவிடினும் ஒரு மரக்கட்டையை வைத்துக்கொண்டாயினும் பொய் யாட்டத்தைத் தொடங்கி விடுகின்றனர். சிறுமியர் கட்கு இதில் ஒரு பேரின்பம். சிறுமியர்க்கு மட்டுமா? பெரிய பெண்கட்கும் இம்முறையில் பெரிய பித்துண்டு. தம் குழந்தைகளோடு அடிக்கடிக் கொஞ்சுவதையும், குழல் பின்னுவதையும், சோறூட்டுவதையும் இன்ன

பிறவற்றையும் செய்துமகிழ்வதையே தம் வாழ்க்கையின் பெரும் பயனாகக் கொள்கின்றார்கள். தமக்குக் குழந்தையில்லாது போயின், பிறர் குழந்தையைக் கண்டுவிட்டாலும் தொடங்கிவிடுகின்றார்கள் இவ் வேலைகளை. பிள்ளைகள் முதன்மையாகப் பெண்களின் விளக்காகப் பேசப்படுவதற்கும் இன்னபிற செயல்கள் காரணங்களாகும்.

**சுவையுடைய வாழ்க்கை:**

அன்றியும், எவ்வளவு பெருஞ்செல்வராயினும் பிள்ளையிலாதார் வாழ்க்கையில் ஒருவித ஊக்கமும் இராது. ஒருவித இன்பச் சுவையும் இராது. பல பொருள்களையும் படைத்துப் பலரோடுண்டு மகிழக் கூடிய அளவு பெருஞ் செல்வராய் மட்டும் இருந்தால் போதுமா? அல்லது உலகமெல்லாம் ஒரு குடைக்கீழ் அமையப்பெற்று முடி தாங்கிய மன்னராய் இருந்தால் தான் போதுமா? தம் பிள்ளைகள் பேசுகின்ற யாழ், புல்லாங்குழல்களைக் காட்டிலும் இனிமையான மழலைச் சொற்களைக் கேட்டு மகிழவேண்டாவா? குறுகுறுவென நடக்கும் நடையைக் கண்டு பெருமிதம் பெற வேண்டாவா? தம்மேல் படுத்துப் புரண்டு கையை நீட்டிக் காலால் உதைக்கும் உதையை ஏற்று இன்புற வேண்டாவா? உண்ணும் உணவில் கையையிட்டுத் துழாவி வாயில் வைத்துக்கொண்டு தம் மேலும் பூசி நகைக்கின்ற குழந்தையின் செயலைக் கண்டு களிகூர வேண்டாவா? சுவையுடைய வாழ்க்கையும் இதுவேயன்றோ? இத்தகைய இன்பங்

கிடைக்கப் பெறாதோர் வாணாள் வீணாளாம். இவற்றை,

> ''படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
> உடைப்பெரும் செல்வ ராயினும் இடைப்படக்
> குறுகுறு நடந்தும் சிறுகை நீட்டியும்
> இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
> நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
> மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
> பயக்குறை வில்லைத் தாம்வாழு நாளே''

என்னும் புறநானூற்றுப் (188) பொற்பாடல் புலனாக்குகின்றது. பாடியவர், பாண்டியன் அறிவுடை நம்பி என்னும் அரசர் பெருந்தகை. இக்கருத்துக் களையமைத்து,

> ''அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
> சிறுகை அளாவிய கூழ்'',
> ''குழலினிதி யாழினி தென்பதம் மக்கள்
> மழலைச்சொல் கேளா தவர்''

என நம் வள்ளுவரும் நயம்பட நவின்றுள்ளார்.

இங்கு, தம் குழந்தைகள் கையை விட்டுத் துழாவியது கூழாயினும் அமிழ்தத்தைக் காட்டிலும் இனியதாகும்; தம் குழந்தைகளின் மழலைச் சொல் கேட்டு மகிழாதாரே குழலையும் யாழையும் இனியன எனப் புகழ்வர் என வள்ளுவர் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலுமவர், மனிதர்கள் அடைய வேண்டிய பேறுகட்குள் நன்மக்கட் பேறே சிறந்த தாகும்; அதைத் தவிர நற்பேறு வேறொன்றுளதாகத் தோன்றவில்லை; நற்குணம் நிறைந்த பிள்ளையைப்

பெற்றவர் பின்பு எப்பிறவியிலும் துன்பமின்றி இன்பம் எய்துவர் என்றெல்லாம் பலபட விரித்துக் கூறி யுள்ளார். இதனால்தான் பிள்ளையில்லாப் பெருஞ் செல்வர்கள் இன்பம் பெறாத ஏழைகளாக எள்ளப் படுகின்றார்கள். பிள்ளையுள்ள ஏழைகள் செழிப்புமிக்க செல்வராகச் சிறப்பிக்கப்பெறுகின்றார்கள். இத்தகைய விளக்கம் தரும் பிள்ளைகளைப் பெறுதற்கு எப்பெண் ணால்தான் ஆவல் கொள்ளாதிருக்க முடியும்? எத் துன்பத்தையும் பொறுக்க உடன்பட்டுப் பிள்ளையிருந் தால் போதும் என எண்ணுவதும் இயற்கைதானே?

**இளமை உதவி:**

சில குடும்பங்களில், குழந்தைகள் தம் இளமைப் பருவத்திலேயே தாய்மார்கட்குச் சில உதவிகளை இயற்கையாகவே செய்து கொடுக்கின்றார்கள். சில பெண்கள் மாமியார் கொடுமையிலிருந்து தப்பிப் பிழைப் பதற்குக் குழந்தையை ஒரு பற்றுக் கோடாகக் கொள் கின்றனர். சில வீடுகளில் கொடிய மாமியானவள் மருமகளை ஒழுங்காய் நடத்துவதில்லை. வயிற்றுக்கும் நிறைய உணவு கொடுப்பதில்லை. பழைய உணவு முதலியவற்றையே கொடுப்பாள். எப்போதும் வைது கொண்டேயிருப்பாள். எடுத்ததற்கெல்லாம் வீட்டை விட்டு வெளியே போ என்றும் விரட்டுவாள். உள்ள மட்டும் வேலையை வாங்கிக்கொள்வாள். ஆனால் நல்ல பேர் இருக்காது. இப்படியிருக்கும்போது அப் பெண்ணுக்கு ஒரு குழந்தை பிறந்துவிடும். உடனே மாமியானவள், பேரப் பிள்ளையின் நன்மைக்காயினும்

மருகியைச் சற்று ஒழுங்காக நடத்தத் தொடங்கி விடுவாள். நல்ல உணவு கொடுப்பாள். வேலையும் மிகுதியாக வாங்குவதில்லை. வீட்டை விட்டு வெளி யேறச் சொல்வதும் இல்லை. அந்தப் பெண் தன்னை யறியாது ஒரு குற்றம் செய்துவிட்டாலும், தன் குழந்தையை ஒரு காரணமாகக் காட்டிப் பிழைத்துக் கொள்ள முடியும். குழந்தைப் பருவத்திலேயே இவ்வளவு பெரிய நன்மைகளைச் செய்யும் பிள்ளை களைப் பெண்களின் விளக்காகக் கூறுவது பொருத்தமே என்பது இப்போது நன்கு விளங்கும்.

ஆனால் சில பெண்கள் குழந்தையைக் காரண மாகக் காட்டிக் காட்டிக் குடும்பத்தில் அடாதன செய்கின்றனர். **'சருக்கியது சாக்கு'** என்பது இவரளவில் உண்மைப்படுகின்றது. சிறிதும் அது கூடாது. அங்ஙனம் செய்வது, வெளிச்சத்திற்காக ஏற்றிய விளக்கை வீட்டைக் கொளுத்துவதற்குப் பயன்படுத்தும் மடமையோ டொக்கும். ஆதலின், குழந்தையால் கிடைக்கும் வாய்ப்பை நல்ல வகையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதுதான் முறைமை யாகும். அறிவுடைமையும் ஆகும்.

**ஊடல் நீக்கம்:**

மற்றும், மாமியார் கொடுமையினின்றும் தப்புவது போலவே கணவன் மிரட்டலினின்று தப்புவதற்கும் குழந்தை ஒரு காரணமாக இருப்பதுண்டு. கணவன் எவ்வளவு கொடியவனாய் இருப்பினும், குழந்தையின் நன்மைக்காகவாவது சில நேரத்திலாயினும் மனைவியை

அன்போடு நடாத்தத் தொடங்குகின்றான். இது புனைந்துரை என்று எவரும் கூற முடியாது. கண் கூடாகக் காணப்படும் நிகழ்ச்சியே. சில நேரங்களில் கணவனும் மனைவியும் தமக்குள் போரிட்டுக்கொள் வார்கள். அதனால் ஒருவர்க்கொருவர் கலந்து பேசிக் கொள்ளாமலும் இருப்பதுண்டு. இந்நிலைக்குத்தான் ஊடல் (சிறுபிணக்கு) என்று பெயர். அந்நேரத்தில் குழந்தை தன் இனிய பேச்சாலும் செயலாலும் அவர் களை மகிழவைத்து ஊடலைத் தீர்த்துவிடும். பின்பு இருவரும் பிணக்கு நீங்கப் பெறுவார்கள். அம்மகிழ்ச்சி யின் பயனாகக் கலந்து உறவாடுவார்கள். இங்ஙனம் பலவிதத்திலும் பெண்கள் தம் குழந்தைகளால் நலம் பெற்று விளக்கம் அடைகின்றார்கள். குழந்தையால் நலம் பெற்ற பெண்ணொருத்தி, தான் பெற்ற நலத்தைத் தன் தோழியிடம் கூறி மகிழ்ந்ததாக அகநானூறு என்னும் பழந்தமிழ்ச் சங்கநூலில் ஓர் செய்யுள் காணப்படுகின்றது. அந்நிகழ்ச்சியின் விளக்கம் வருமாறு:—

**பல்லோர் கூறிய பழமொழி:**

"என் அன்புடைய தோழியே! நேற்று நம் வீட்டில் நிகழ்ச்சியொன்று நிகழ்ந்தது; சொல்கிறேன் கேட்பா யாக. என் கணவர் அடுத்த தெருவில் உள்ள அயலாள் வீட்டிற்கு வழக்கம்போல் புறப்பட்டார். புதிதான பூ மாலையாலும் ஆடையணிகலன்களாலும் அழகு செய்து கொண்டார். தன் அழகிய தேரின் மேல் (தேர்-அக் காலத்தில் செல்வர் செல்லும் வண்டியாகும்) அமர்ந் தார். பாகனும் தேரைச் செலுத்தத் தொடங்கினான்.

நான் அறிந்து கொண்டேன். உடனே என் மகனை நோக்கி, 'குழந்தாய்! உன் தந்தை தேரேறி எங்கேயோ செல்கின்றார். நீ வெளியே சென்று அழுது அவரை அழைத்துவா' என்று தூண்டிவிட்டேன். தேரின்மேலும் குதிரையின் கழுத்திலும் கட்டியிருந்த மணிகளின் ஒலியும் குழந்தையின் காதுக்கெட்டியது. குழந்தை தந்தையைக் காணும் விருப்பத்துடன் வாயிற்படியைக் கடந்து தளர்ந்து தளர்ந்து தெருவில் ஓடினான். அவர் குழந்தையைக் கண்டார். மேற்செல்ல முடியவில்லை. பாகனை நோக்கித் தேரை நிறுத்து எனக் கட்டளை யிட்டார். கீழே வந்தார். மகனைத் தூக்கினார். அவனது பவளம் போன்ற வாய் தன் மார்பில் அழுந்தும்படியாக அணைத்துக்கொண்டார். பின் கீழே விட்டார். குழந்தாய்! வீட்டிற்குச் செல்வாயாக எனக் கூறி உள்ளே அனுப்பினார். இவ்வளவில் ஏமாறு பவனா குழந்தை? மேலும் அழத் தொடங்கினான், என்ன செய்வார் தந்தை? மறுபடியும் மகனைத் தூக்கிக்கொண்டார். 'என் செல்வமே' என்று கொஞ்சிக் கொண்டே உள்ளே நுழைந்தார்.

இதற்குக் காரணமாகிய யான் ஒன்றும் உணரா தாள் போன்று நடிக்கலானேன். குழந்தையை நோக்கி. 'ஏடா! அப்பா எங்கேயோ புறப்பட்டார்களே. நீ ஏன் அழுது தடை செய்தாய்?' எனக் கூறி ஒரு கோலை எடுத்து அடிப்பவள் போல் அவனைக் குறுகினேன். உடனே தந்தையார் தடுத்து என் கைக்கோலை வாங்கிக்கொண்டார். இந்நிலையில், அயலாள் வீட்டில்

இசைக்கப்படும் யாழொலியும் முழவொலியும் வா வா என்றழைப்பது போல் நம் வீடு வரையும் கேட்டது. அவ்வொலியைக் கேட்டும் கணவர் அவ்வீட்டிற்குப் புறப்பட்டாரிலர். என்னையும் குழந்தையினையும் மாறி மாறி நோக்கினார். மணமாவதற்கு முன் தோழி மார்களோடு விளையாடிக் கொண்டிருந்தபோதே என்மேல் காதல் கொண்ட காட்சிகள் யாவும் அவர் கருத்தை ஈர்க்கலாயின. ஆகவே அவர் வெளிப் புறப்பாட்டை நிறுத்திக்கொண்டார். எங்களுடனேயே இருந்து இன்புற்றார். எதிர்பாராத அளவில் நிகழ்ந்த நிகழ்ச்சியல்லவா இது?

ஏ தோழியே! என் மகனால் குழந்தைப் பருவத்தி லேயே இவ்வளவு பெரிய நன்மை கிடைத்ததை நோக்கின், இன்னும் வயதாக வயதாக மிகப் பெரும் நன்மைகள் கிடைக்கும் என்பது உறுதியல்லவா? ஆகவே, பகைவரும் விரும்புமளவில் அழகும் குணமும் வாய்ந்த நற்பிள்ளைகளைப் பெற்றவர்கள் இவ்வுலகில் இன்பமும் புகழும் எய்தி மறுஉலகிலும் நற்பேறு பெறு வார்கள் என்னும் கருத்தில், பல பெரியார்களும் கூறி யுள்ள பழமொழி உண்மையே என்பது விளங்குகின்ற தல்லவா?யான் என் வாழ்க்கையில் கண்கூடாக நுகர்ந்து கண்ட முடிபாகும் இது, பிள்ளைப் பேற்றின் பெருமையே பெருமை!'' என்று கூறிக் களிப்பெய்தினாள். அம்மடந்தையின் மட்டற்ற மகிழ்ச்சிதானென்னே! இந்நிகழ்ச்சி,

“இம்மை உலகத் திசையொடும் விளங்கி
மறுமை உலகமும் மறுவின்று எய்துப
செறுநரும் விரும்பும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப்
பல்லோர் கூறிய பழமொழி யெல்லாம்
வாயே யாகுதல் வாய்த்தனம் தோழி,”

என்று தொடங்கும் (66) அகப்பாட்டினுள் நயம்பட நவிலப்பெற்றுள்ளது.

**வளர்க்கும் வன்மை:**

மற்றும், பிள்ளைகளால் பேரின்பப் பேறடையும் பெண்மக்களே வளர்க்கும் வன்மையினையும் பெற்றிருக் கின்றார்கள். அவ்வன்மை ஆண்கட்கு அவ்வளவு போதாது. பெண்டிர் உதவி ஒரு சிறிதும் இன்றி ஆண்களே வளர்த்ததாகப் பெரும்பாலும் நாம் கேள்விப்பட்டிருக்கமாட்டோம். “**பெண்ணிடம் அகப் பட்ட பணமும், ஆணிடம் அகப்பட்ட பிள்ளையும் உருப்படா**” என்னும் பழமொழியுந்தான் உண்டே. பெண்ணிடம் அகப்பட்ட பணம், காவல் திறமை போதாததால் கள்வராலோ பிறராலோ கவரப்படும். ஆணிடம் அகப்பட்ட பிள்ளை, வளர்ப்புத்திறமை போதாததால் விரைவில் நோயுற்றுக்கெடும். ஆனால், எங்கோ ஓரிடத்தில் இதற்கு மாறாகவும் நடக்கலாம். அது கிடக்க.

**பெற்றமனம் பித்து**

பெண்கள் தம் குழந்தைகளை மிகவும் பரிந்து வளர்க்கின்றனர். சுருங்கக்கூறின் குழந்தைமேல்

ஈயொன்று மொய்த்தாலும் அது அவர் கண்களை உறுத்தும். அப்படியாயின் வேறு துன்பங்கட்கும் இடம் கொடுப்பார்களோ? பிள்ளைகள் எவ்வளவு குற்றம் செய்தாலும் பொருட்படுத்தாது விட்டு விடுகின்றனர். அவர்களை அடிக்க மனம் வருவதில்லை. அங்ஙனம் அடிக்கக் கையோங்கினாலும் அதற்குள் மனமிளகி ஓங்கிய கையை நிறுத்தி விடுகின்றார்கள். சில முரட்டு மூடப்பிள்ளைகள் தம் தாய்மார்களை, அடித்தும் வைதும் அல்லல்படுத்து வதும் உண்டு. அவற்றையும் பொறுத்து மேலும் பேரன்பு கொள்கின்றார்கள். **'பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு'** அல்லவா?

**தாய்த்தலை யன்பு**

தாயன்பை மூன்றாகப் பிரிப்பதுண்டு. அவை தலையன்பு, இடையன்பு, கடையன்பு என்பனவாம். சில தாய்மார்கள், குழந்தை அழுவதற்கு முன்பே இனி குழந்தைக்குப் பசிவந்துவிடும் எனத் தாமே நினைந்தெடுத்துப் பாலூட்டுவார்கள். **"பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்** பரிந்து நீ'' என மணிவாசகனார் திருவாசகத்தில் குறிப்பிட்டிருப்பது இதனையே. தலையன்பு என்ற பெயரும் இதற்கே உரியதாகும். சிலர் குழந்தை அழத்தொடங்கிய உடனேயே எடுத்துப் பால் கொடுப்பார்கள், இதற்கு இடையன்பு என்று பெயர். சிலர் குழந்தை அழஅழ வேலைகளைச் செய்து முடித்துப் பின்பே வந்து பால் தருவார்கள். இதற்குக் கடையன்பு என்று பெயர்.

இவற்றுள் மிகவும் போற்றற்குரியது தலையன்பே. தலையன்பு நிறைந்த தாய்மார்கள் பிள்ளைகட்கு வயிறுநிறைய உணவு கொடுப்பார்கள். விரும்பிய உணவையும் செய்து தருவார்கள். குழந்தைகள் சரிவர உண்ணாமல் குறும்பு செய்வது முண்டு. அப்போது நிலா, நாய், பூனை முதலியவற்றைக் காட்டி உண்ணச் செய்வார்கள். சில தாய்மார்கள் மூடத்தனமான அன்பினால் வற்புறுத்தி அளவு மீறிச் சோறூட்டி உடம்பைக் கெடுத்தும் விடுகின்றார்கள். சிலர் பெரியவர்கட்குப் பரிமாறும் போதும் இப்பழக்கத்தைக் கையாளுவதுண்டு. இது சிறிதும் கூடாது.

மேலும் குற்றம் செய்த பிள்ளைகளைச் சில தந்தைமார்கள் அடித்துத் துரத்தி விடுவதுமுண்டு. அந்நிலையில் தாய்மார்கள் தந்தைக்குத் தெரியாமல் பிள்ளையை வரச் செய்து உணவளிப்பார்கள். அல்லது பிள்ளையிருக்கும் இடத்தைத் தாமே தேடி யடைந்தும் உணவு கொடுப்பதுண்டு. இங்ஙனம் தந்தை மார்களின் மிரட்டலிலிருந்து அடிக்கடிக் காப்பாற்றி விடுகின்றார்கள். சில குடும்பங்களில், பிள்ளைகள் தாயால் சொல்லச் செய்தே (சிபார்சு) தந்தையிடம் பல நன்மைகளைப் பெறுவதை இன்றும் உலக வழக்கில் காண்கின்றோம். இத்தகைய தாயின் தலையன்பை என்னென்று புகழ்வது?

**பிரிவாற்றாமை**

பெண்கட்குப் பிள்ளைகளைப் பிரிந்திருக்கச் சிறிதும் மனம் வருவதில்லை. ஒரு வேலையை முன்

னிட்டு வெளியில் சென்றாலும் குழந்தையை விட்டு வந்து விட்டேன் என விரைவில் வீட்டிற்கு ஓடி வந்து விடுகின்றார்கள். ஒரு பெண் சிறுவயதில் தன் தாயை விட்டுப்பிரிய மனமில்லாமல் இருக்கின்றாள். மணமான பின்னும் முதலில் கணவன் வீட்டிற்குச் செல்ல மனம் துணிவதில்லை. பின்பு பிள்ளைகள் பல பெற்று வாழ்ந்துகொண்டிருக்கின்றாள். அச்சமயம் தாய் கடுமையான நோயுற்றிருப்பதாகத் தாய் வீட்டிலிருந்து செய்தி கிடைத்தது. ஓடோடியும் வருகின்றாள். நோயுற்ற தாயைப் பார்க்கின்றாள். இரண்டொரு நாளே தங்கியிருக்கின்றாள். பின்பு பிள்ளைகளின் நினைவு வருத்துகின்றது. உடனே தாய் தடுக்கவும் நிற்காமல் கணவன் வீட்டிற்கு ஓடிவிடுகின்றாள். சில பெண்கள் மகளைக் கட்டிக்கொடுத்து விட்டுப் பிரிந்திருக்கப் பெரிதும் வருந்துவார்கள். மகள் கணவனுடன் செல்லும் போது அழுது விடுவதும் உண்டு. தம் வீட்டில் பலர் சூழ இருந்தும், மகள் இல்லாததால் அவ்வீடு அவர் கண்கட்கு வெற்றிடமாகவே புலப்படும். இதனை,

> **'ஈன்று புறந்தந்த எம்மும் உள்ளாள்**
> **வான்தோய் இஞ்சி நன்னகர் புலம்ப'**

என்று தொடங்கும் அகப்பாட்டானும் பிறவற்றானும் அறியலாம். ஒரு தாய் காக்கையை நோக்கி, 'ஏ காக்கையே! என்மகள் வரும் வண்ணம் கரைவாயேயானால் நினக்குச் சோறிடுவேன்' என்று வேண்டிக்கொண்டதாகவும் பழைய இலக்கியங்களில் காணக்கிடக்கின்றது

மகளைப் பிரிந்திருப்பது மட்டுமா துன்பம்? மகனைப் பிரிந்திருப்பதென்றாலும் இயலாத காரியந் தான். மகனுக்கு மணமாயிருக்கும். (தீபாவளி) மருவுக் காக மாமியார் வீடு சென்றிருப்பான். இங்குத் தாய்க்கு வீடே விளக்கமாய்த் தோன்றாது. நல்ல சமையல் செய்யவும் மனம் ஓடாது. இங்ஙனம் சிறிது நேரம் பிரிந் திருப்பதே இயலாததென்றால், அப்பிள்ளைகள் இறந்து விட்டாலோ என்ன பாடுபடுவார்கள் என்பதைப் பற்றி இங்கு விரித்துக்கூறவும் வேண்டுமோ? பாயும் படுக் கையுமாகக் கிடப்பார்கள். அதே ஏக்கமாய் இறந்து போகும் பெற்றோர்களும் உண்டு. இவையெல்லாம் உலகில் கண்கூடு. **'புத்திர சோகம் நிரந்தரம்'** என்று புகலப்படுவதும் பொய்யாகுமா?

**விட்டுக்கொடுத்தல்**

பெண்மணிகள் தம் பிள்ளைகட்காகக் கருவுற்றதி லிருந்து இறுதிவரையிலும் தம் வாழ்க்கையினையே விட்டு (தியாகம்) கொடுக்கின்றார்கள். வாழ்க்கையை மட்டுமா? உயிரையே வாங்கும் நிலைமையும் சில தாய்மார்கட்கு நேருகின்றது. ஒரு பெண் நீண்ட நாட்களாகப் பிள்ளையின்றி இருந்திருப்பாள். பல அறப்பணிகளை (தானதருமம்) செய்து கருவுற்றிருப் பாள். பத்துத் திங்களும் நிரம்பப்பெறும். பிள்ளையும் பிறக்கும். உடனே அவள் இறந்து விடுவாள். அவள் அறப்பணி பல புரிந்ததின் நோக்கம் என்ன? வாழ்க்கை யின் குறிக்கோள்தான் என்ன? தன் குழந்தையால் உயிரையே யல்லவா விட்டாள்? இந்நிலைமையைக்

கூர்ந்து நோக்கின், தாய்மையின் நிலைக்களமான பெண்கட்கு ஆண்கள் மிகுதியும் கடமைப்பாடுடைய வர்கள் என்பது சொல்லாமலே விளங்கும்.

மற்றும், அன்றாட வாழ்க்கையிலும் தம் நன்மை முழுவதையும் பிள்ளைகட்காக விட்டுக்கொடுக்கின் றார்கள். தாம் உண்ண வைத்திருக்கும் உணவைப் பிள்ளைகள் விரும்பிக்கேட்டால் கொடுத்துவிட்டுத் தாம் பட்டினி கிடக்கின்றார்கள். தமக்கு எவ்வுணவில் விருப்பமோ, அவ்வுணவை இப்போது குழந்தையின் நலத்திற்காக நீக்கிவிடுகின்றார்கள். தாம் எவ்வுணவை முன்பெல்லாம் வெறுப்பது வழக்கமோ, அவ்வுணவை இப்போது விரும்பி (பத்தியம்) உண்கின்றார்கள். தாம் சிறுமிகளாய் இருந்தபோது ஒரு தின்பண்டத்திற்காகத் தம் பெற்றோரிடத்திலும் உடன் பிறந்தாரிடத்திலும் எவ்வளவோ வம்பு செய்திருப்பார்கள். இப்போது அத்தின்பண்டம் கிடைக்கின், அப்படியே வைத்திருந்து பிள்ளைகள் வந்ததும் கொடுக்கின்றார்கள். இங்ஙனம் உணவளிப்பதில் பெயர்பெற்றவர்கள் தாய்மார்களே.

**'தாய்க்கடுத்தது தாரம்'** என்னும் தொடர் ஒன் றுண்டு. இத்தொடருக்கு, தாய்க்குப் பின்னால் உணவு முதலிய நன்மை செய்வதில் சிறந்தவள் மனைவி என்பது பொருள். இன்னும் இதற்கு, தாரமும் (மனைவியும்) தாய்க்கு அடுத்தபடிதான். அதாவது இரண்டாம் படித்தரந்தான் என மற்றொரு பொருளும் கூறிவிடலாம். ஆனால் எங்கேயோ சில பெண்டிர் பிள்ளைகளிடம் போதிய அன்பில்லாதவராய் இருக்க

லாம். **'தாயானாலும் பிள்ளையானாலும் வாயும் வயிறும் வேறு'** என்னும் தொடர் எழுந்ததும் இவர்களை நோக்கியே. இன்னோர் மிகக்குறைவாகலின் இன்னோர் செயலை விட்டுத்தள்ளுவோம். எனவே, பெண்மணிகள் பெரிதும் பாடுபட்டுப் பிள்ளைகளைப் பெற்றுத் தலையன்பால் தம் வாழ்க்கையினையும் விட்டுக்கொடுத்து வன்மையுடன் வளர்ப்பதையே தமக்குப் பெரியதொரு விளக்கமாகக் கொள்கின்றார்கள் என்பது வெளிப்படை.

**விருப்பும் வெறுப்பும்:**

இங்குக் கட்டாயமாகக் குறிப்பிட வேண்டிய மற்றொரு நிகழ்ச்சியும் உண்டு. உலகில் மக்கள் பலர் ஆண் குழந்தைகளையே பெரிதும் அவாவி விரும்புகின்றார்கள். பெண் குழந்தை பிறந்தால் பெரிதும் வெறுக்கின்றார்கள். சோர்ந்தும் விடுகின்றார்கள். அவர் எண்ணப்படியே ஆண்பிள்ளைகளே பிறந்தால் அப்பிள்ளைகட்குத் திருமணம் செய்து வைக்கப் பெண் பிள்ளைகள் வேண்டாவா? அப்பெண் பிள்ளைகளை வேறு எவரேனும் பெற்றுத்தானே தீரவேண்டும்? அவர்கட்கு மட்டும் அவ்வெறுப்புத் தோன்றாதா? தாமட்டும் அல்லலின்றி யிருந்தால் போதுமா? அஃதென்ன மனப்பான்மை? **''புல்லென்றால் வாயைத் திறப்பதா? கடிவாளம் என்றால் வாயை மூடிக் கொள்வதா?''** பெண்பிள்ளைகளையும் கடிவாளமாகக் கருதாது புல்லாகவே கருத வேண்டுவது கட்டாயம் அல்லவா? இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டவா? ஒரு சிலர்க்கு ஆண் பிள்ளைகள்

கடிவாளமாவதும் உண்டு; பெண் பிள்ளைகள் இனிய புல்லாவதும் உண்டு. இவையெல்லாம் நம் விருப்பு வெறுப்புக்குக் கட்டுப்பட்டன அல்லவே. வாழ்க்கையில் எது வரினும் தளராமல் ஏற்பதுதானே (வீரம்) பெருமிதம்? அங்ஙனம் பெண்ணின்றி அனைவர்க்கும் ஆணே பிறக்குமாயின், உலகம் மேலும் மேலும் வளர்ச்சியுறுவது எங்ஙனம்? ஆதலின், பெண் குழந்தையை வெறுக்கும் பேதைமையை அடியோடு அகற்றிக் களையவேண்டும். ஆண்கள்மட்டுமா வெறுக்கின்றார்கள்? சில பெண்களும் தம் இனமாகிய குழந்தையை வெறுக்கின்றார்கள். அதுதான் வியப்பாயுளது.

**ஆசைக்கொரு பெண்:**

ஆனால், சிலர்மட்டும் பெண் பிறந்தாலும் வெறுப்பதில்லை. அப்பெண் குழந்தைக்கு விலையுயர்ந்த ஆடையணிகள் அணிந்து அழகு பார்க்கின்றனர். மணம்செய்து கொடுத்து மகிழ்ச்சி யெய்துகின்றனர். மருமகன் வந்துவிட்டால், '**மருமகன் ஆசை மட்டற்ற ஆசை**' என்றபடி மனங்கோணாமல் நடக்கின்றனர். உணவு முதலிய பல்வகைச் சிறப்புக்களாலும் அவனை மகிழச் செய்கின்றனர். அதன் காரணம் அவன்மேல் உள்ள அன்பா? அல்லவே. உண்மைக் காரணம் கண்ணான தம் பெண்ணன்பே யன்றோ? **பெண்ணைக் கொடுத்தோமோ கண்ணைக் கொடுத்தோமோ**' என்னும் முதுமொழியும் இதனை உறுதிப்படுத்து கின்றது. எனவே, எப்பிள்ளையாயினும் விரும்பி

ஏற்கவேண்டும் என்பது இனிது விளங்கும். குறைந்தது ஆணொன்று பெண்ணொன்றாயினும் இருக்கலாமே. இக்கருத்தை, **'ஆசைக்கு ஒரு பெண்ணும் ஆத்திக்கு (ஆஸ்தி-சொத்து) ஓர் ஆணும்'** என்னும் தொடர் மொழி வலியுறுத்துகின்றது. இவ்வாய்ப்பாயினும் கிடைக்கப் பெறார்க்கு வாழ்க்கையில் பயனென்ன உளது? அவர் வீடு வெற்றிடமே. பல்லாண்டுகளாகப் போரும் பிணக்குமாக விளக்கமின்றிக் கிடந்த வீடுகள் சில, இரண்டொரு குழந்தை ஏற்பட்டதும் அமைதியும் விளக்கமும் அடைவதை நாம் காணலாம்.

**வளர்க்கும் முறை:**

ஆனால், அவாவுக்குப் பிள்ளை பெற்றுவிடுவது மட்டும் போதுமா? நன்முறையில் வளர்க்கவும் தெரிய வேண்டும். அப்போதுதான் அப்பிள்ளைகள் பெற்றோர்க்குப் பயன்பட்டு விளக்கம் செய்வார்கள். **'தாயெப்படி மகளப்படி,' 'தாயைத் தண்ணீர்த் துறையில் பார்த்தால் மகளை வீட்டில் பார்க்க வேண்டியதில்லை'** என்னும் பழமொழிகள் அறிவிப்ப தென்ன? பெற்றோர்களின் குணமே பிள்ளைகட்கும் இருக்கும் என்பது இவற்றால் விளங்கவில்லையா? எனவே, பிள்ளைகள் ஒழுங்காய் இருக்க வேண்டுமானால் பெற்றோர்களும் ஒழுங்காய் இருக்க வேண்டும். அதிலும், உடனிருந்து வளர்க்கும் உரிமை பெற்ற தாய் முதலில் ஒழுங்காய் இருக்கவேண்டும்,

சில பிள்ளைகள் தாய்மார்களின் தீக்குணங்களைக் கண்டு தாமும் பழகிக்கொள்கின்றனர். கண்ட

வுடனேயே தாமாகவே பழகிக்கொள்ளும் பிள்ளைகட்கு அத்தீக் குணங்களைக் கற்றுக்கொடுக்கும் தாய்மார் களும் உளர். பிறரை வையச் சொல்வர். பிறர் வீட்டுப் பொருள்களைத் திருடி எடுத்துக்கொண்டு வரவும் கற்றுக்கொடுப்பர். இவ்வளவுதாமா? இன்னும் பல உள. இப்பழக்கம் அறவே கூடாது. தாம் ஓர் ஆசிரியர் (குரு) போல் இருந்து நல்ல கருத்துக்களைப் புகட்ட வேண்டும், நல்ல பழக்க வழக்கங்களில் திருப்ப வேண்டும். பிற்கால வாழ்க்கைக்குப் பெரிதும் பயன் படக்கூடிய வேலைகளைத் திறம்படக் கற்றுக் கொடுக்க வேண்டும். பிள்ளைகட் கெதிரில் கெட்டதைப் பேசு வதும் கூடாது, செய்வதும் கூடாது. கெட்டதைப் பேசினாலும் செய்தாலும் நம்மை அம்மா அடிப்பாள் என்ற அச்சம் பிள்ளைகட்கு உண்டாகும்படியாகத் தாய்மார்கள் நடந்துகொள்ளவேண்டும்.

**வீரம் ஊட்டல்:**

சில தாய்மார்கள் பிள்ளைகளை அடக்குவதற்குத் தம் மிரட்டலைப் பயன்படுத்துவதில்லை. பூனை பூச்சாண்டிகளைக் காட்டியே அச்சுறுத்துகின்றனர். அது கூடாது. சிறுவயதில் ஏற்பட்ட இவ்வச்சம் பெரியவர்களான பின்னும் வாழ்க்கையைப் பெரிதும் தாக்குகின்றது. ஆதலின் குழந்தைகளைக் கோழை களாக்கக்கூடாது. வீரமூட்டி வளர்க்கவேண்டும். வீரமும் தீயவழியில் செலுத்துவதாய் இருத்தலாகாது. பிள்ளைகட்கு வீரம் வரவேண்டுமாயின, முதலில் தாய் மார்கட்கும் வீரம் இருக்கவேண்டும். இந்த அமைப்பே

நம் நாட்டில் இப்போதில்லை. தங்கள் மகன் பட்டாளத்திற்குச் சென்றானாயின், ஒரே ஒப்பாரி வைக்கத் தொடங்கிவிடுகின்றனர். அதற்காக அஞ்சக்கூடாது. 'போய்வருவானாக!' என்றிருக்க வேண்டும். தள்ள முடியாக கட்டாயம் ஏற்படின், தாமும் அயல்நாட்டுப் பெண்களைப்போல் போர்க்களத்தில் முன்னணியில் நிற்கவேண்டும். இத்தகைய தாய்மார்களின் வயிற்றில் பிறந்த பிள்ளைகளே வீரமணிகளாகத் திகழ்வார்கள் **'புலிக்குப் பிறந்ததும் பூனையாகுமா?'**

**வீரப்பெண்:**

இங்கு நம் நாட்டில் வழங்கும் சிறுகதை யொன்று நினைவைத் தூண்டி நிற்கின்றது. ஒரு வீரப்பெண் அவள். கணவன் போருக்குச் சென்றான். வெற்றியும் பெற்றான், வீட்டிற்கும் திரும்பினான். மனைவியோடு இன்புற்றிருக்கலானான். மறுபடியும் ஊரில் போர் முழக்கம் எழுந்தது. அம்முழக்கம் வீரப்பெண்ணின் காதில் கேட்டது. இஃதென்ன ஒலி? என்று கணவனைக் கேட்டாள் அவள். போர் முழக்கம் என்றான் அவன். அப்படியாயின் நீவிர் இப்போது போர்க்குச் செல்ல வேண்டாவா? என்று வினாவினாள். அதற்கவன், யான் இப்பொழுதுதானே போர்க் களத்திலிருந்து வந்தேன். இன்னொருநாள் ஓய்வெடுத்துக் கொண்டு உன்னுடன் இன்பப்பொழுது போக்க விரும்புகின்றேன் என்று பதிலீந்தான். உடனே அவள் அறிவித்த தென்ன? 'அப்படியாயின் நீவிர் ஓய்வெடுத்துக் கொண்டு இங்கேயே இருக்கலாம்; ஆனால் என்

உடைகளை வாங்கிக்கொண்டு நும் உடைகளைத் தருவீராக; யான் போருக்குச் சென்று வெற்றி பெற்று விரைந்துவந்து நும்மை மகிழ்விப்பேன்' என்று கூறினாள். கேட்டான் கணவன். தலை குனிந்தான். உடனே நிமிர்ந்து நின்றான். வாளேந்தினான். போர்க்களத்திற்குப் பறந்தோடினான். வீரப் பெண்ணும் கண்டு களித்தாள். இஃதல்லவா வீரம்? இப்போதும் சில குடும்பங்களில், ஆண்கள் கோழைகளாய் ஒரு தொழிலைச் செய்ய அஞ்சுவதுண்டு. உடனே பெண்கள் உறுதி (தைரியம்) புகட்டியும், அத்தொழிலைச் செய்யும்படியாக வற்புறுத்தியும் பிடர் பிடித்துத் தள்ளுவதை நாம் காணலாம். இதைப் போலவே பிள்ளைகளையும் பழக்கவேண்டும்.

**கடமைகள்:**

பொன்மொழியார் என்னும் பெண் புலவர் புறநானூற்றில் ஒவ்வொருவருடைய கடமைகளையும் குறிப்பிட்டுள்ளார். ''பிள்ளையைப் பெற்று வளர்த்தல் பெண்ணாகிய என் கடமையாகும். அப்பிள்ளையைக் கல்வியறிவால் சிறந்தவனாக்குதல் தந்தையின் கடமையாகும். அவன் போர் செய்தற்கு வேல் முதலிய படைகளைச் செய்து தருதல் கொல்லன் கடமையாகும். அவனுக்கு நன்னடை நல்கல் அரசன் கடமையாகும். போர்க்களத்தில் முன்னணியில் நின்று எதிரியின் யானைகளை வாளால் வெட்டியெறிந்து வெற்றி பெறுதல் காளையாகிய என் மகனுக்குக் கடமையாகும்'' என்னும் கருத்தில்,

**"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே**
**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே**
**நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே**
**ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்**
**களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"**

என அழகாகப் பாடப்பட்டுள்ளது அப்பாடல். இப் பாடலை ஒரு பெண் புலவரே பாடியிருப்பது நுணுகி நோக்கி மகிழ்தற் குரியதாகும். மேலும் 'என் தலைக் கடனே' (தலைக் கடன் - முதல் கடமை) என்பதை ஆராய்ந்து பார்க்கின், பெண்கள் பெற்று வளர்த்தால் தான், பின்னால் கூறப்பட்ட நிகழ்ச்சிகள் நிகழ்த்தப் பெற்று ஒரு நாடே வெற்றியால் விளக்கம் பெறும் என்பது பெறப்படுகின்றது. மற்றும் அப்புற நானூற்றிலேயே. ஒரு வீரத்தாய் தன் சிறு மகனைப் போருக்கனுப்பியதாக இரண்டு செய்யுட்கள் உள்ளன. அவற்றின் கதையமைப்பு வருமாறு:—

**வீரத்தாய்:**

வீரப் பெண்ணொருத்தி கணவனுடன் இல் வாழ்க்கை நடத்தி வந்தாள். நீண்ட நாளாகப் பிள்ளை யில்லை. முதுமையும் நெருங்கத் தொடங்கிற்று. அரிய நோன்பு கிடந்தாள். பின் வயதான காலத்தில் ஓர் ஆண் மகன் பிறந்தான். சீராட்டிப் பாராட்டி வளர்த் தாள். அவளுக்கு ஓர் அண்ணனும் உண்டு. இவ்வளவே அவள் குடும்ப நிலை. இப்படி வாழ்ந்த காலையில் அவ்வூரை வேற்றரசன முற்றுகையிட்டான். உள்ளூர்

வேந்தனும் எதிர்த்தான். மூண்டது கடும்போர். அவ் வூர்க் குடிமக்கள் அனைவரும் தம் நாட்டின் நன்மைக் காகப் போர்புரியலானார்கள். அதுதானே அக்கால முறையும் வழக்கமும். அம்முறைப்படியே அப் பெண்ணின் அண்ணனும் கணவனும் போர்க்குச் சென்றனர். வலுத்தது போர். இருபக்கத்திலும் மாண்டோர் பலர். போரோ நின்றபாடில்லை. முதல் நாட்போரில், அண்ணன் எதிரியின் யானைப்படை களையெல்லாம் வெட்டி யெறிந்து தானும் மாய்ந் தொழிந்தான். இரண்டாம்நாள் போரில் கணவனும் இறந்துபட்டான்.

மறுநாளும் போர் தொடங்கிற்று. பார்த்தாள் வீரப் பெண். என்ன செய்தாள்? மேலும் போருக்கு ஆளனுப்ப வேண்டுமென விரும்பினாள். வீட்டில் எஞ்சியிருந்தவன் தன் ஆண்மகன் ஒருவனே. அவனோ சரியாக ஐந்து வயதும் நிரம்பாச் சிறுவன். சிறுவன் என்று விட்டாளா? அழைத்தாள் அவனை. எண்ணெய் தடவி அவன் குடுமியைத் திருத்தினாள். வெண்மையான ஆடை உடுத்தினாள். வேலொன்றைக் கையில் கொடுத்தாள். அவனை நோக்கி, ''என் அருமைக் குழந்தாய்! நின் முன்னோர் அனைவரும் வீரப்போர் நிகழ்த்தி இறந்துபட்டனர். அவர் தம் நினைவிற்கு அறிகுறியாக நடப்பட்டுள்ள கற்கள் இதோ இருக் கின்றன பார்'' எனக் கூறிப் பழைய நடுகற்களைக் காட்டினாள். காட்டி, ''நீயும் அவ்வீரக் குடியில் பிறந்தவன்; ஆதலின் போர்க்குச் சென்று வெற்றி

பெற்று வருக'' என்று அறிவுறுத்தினாள். அணைத் தாள். உச்சிமோந்தாள். அனுப்பியும் விட்டாள். வீர மகனும் சென்று போர் புரியலானான்.

தாய் தன் மகன் வெற்றிபூண்டு விரைவில் வருவான் என எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அவ் வமயம் உண்மையறியாது மாறியுணர்ந்த பலர் தாயை யணுகி, நின்மகன் எதிரிக்குத் தோற்றுப் புறமுதுகிட் டோடிவிட்டான் என்று புகன்றனர். கேட்டாள் வீரத் தாய். வயிறெரிந்தது. மகன்மேல் மூண்டது சினம். ஒரு வாளைக் கையில் ஏந்தினாள். என்மகன் புறமுது கிட்டது உண்மையாயின், அவன் பாலுண்ட என் மார்பை இவ்வாளால் அறுத்துக் கொள்வேன் என வஞ்சினம் கூறினாள். அடைந்தாள் போர்க்களத்தை. புரட்டினாள் பிணங்களை. மகன் தோற்கவும் இல்லை. புறமுதுகைக் காட்டவும் இல்லை. ஓடிவிடவும் இல்லை. மார்பினும் முகத்தினும் விழுப்புண் (வீரர்க்கு ஓரணி) பட்டு இறந்துகிடந்தான். அவன் பிணமும் மல்லாந்தே கிடந்தது. 'விரையொன்று போட்டால் சுரையொன்றா முளைக்கும்?' கண்டாள் வீரத்தாய்க் கிழவி. ஒப்பாரி வைத்தாளா? இல்லை யில்லை. அரிய நோன்பியற்றி அம்மகனைப் பெற்றபோது எவ்வளவு மகிழ்ச்சி யுற்றாளோ, அதனினும் பன்மடங்கு இப்போது மகிழ் வுற்றாள். வாழ்க்கையில் சிறந்ததொன்றைச் செய்து முடித்ததாகவும் பூரித்தாள். என்னே அம்மடந்தையின் வீரம்! இவ்வரலாறு நமக்கு நல்ல உணர்ச்சி ஊட்டு கின்றதல்லவா?

இந்நிகழ்ச்சியினை, ஒக்கூர் மாசாத்தியார் என்னும் பெண்புலவரால் பாடப்பெற்ற **"கெடுக சிந்தை கடிதிவள் துணிவே"** என்று தொடங்கும் (279) புறப்பாட்டும், காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் என்னும் பெண்புலவரால் பாடப்பெற்ற **"நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்"** என்று தொடங்கும் (278) புறப்பாட்டும் தெள்ளிதின் உணர்த்துகின்றன.

இப்பாடல்களைப் பெண்புலவர்களே பாடியிருப்பது குறிப்பிடத் தக்கதாம். இங்ஙனம் தாய்மார்களின் உள்ளத்தில் வீர உணர்ச்சி ஊறவேண்டும். இவை போன்ற செய்யுட்களையும் வரலாறுகளையும் அவர்கள் துருவித் துருவி ஆராயவேண்டும். போருக்குச் செல்லலாகாது என்னும் கருத்தில், **'பந்திக்கு முந்து படைக்குப் பிந்து'** என்னும் பழமொழியைப் பயன் படுத்தப் பெரிதும் வெட்கப்பட வேண்டும். எனவே, ஒவ்வொரு தாயரும் தம்பிள்ளைகளை வெறுங் கோழைகளாக்காது வீரமணிகளாக வளர்க்க வேண்டும்.

**செல்லம் கூடாது:**

மற்றும், வேலை கொடுத்தால் பிள்ளை நொந்து போகும் என்ற இரக்கம் மிகுதியாக இருத்தலாகாது. ஏனெனில், பிள்ளைகள் பிற்காலத்தில் எவ்வளவோ துன்பங்களை எதிர்த்துப் போராட வேண்டியவர்களாய் உள்ளனர். இப்போது நோவாது வளர்ந்து விட்டால், எதிர்கால வாழ்க்கையில் ஏற்படும் போராட்டங்களை எதிர்க்கமுடியாமல் சோர்ந்துவிடுவர். ஆனால் பெற்ற தாயாதலின் முற்றிலும் இரக்கங் காட்டக்கூடா

தென்பதன்று. மிகுதியாகச் செல்லம் கொடுக்கலாகா தென்பதே.

**இரங்குவதும் இயற்கைதான்:**

அறிவிற் குறைந்த பறவை விலங்கு முதலியனவும் தம் குஞ்சுகளையும் குட்டிகளையும் தீங்கொன்றும் வாராதபடி அருகிருந்து காக்கின்றன. எதிரிகள் அருகில் வருவதாக அறிந்தால் எதிர்த்துத் தாக்குகின்றன. முன்னொரு காலத்தில், திருவாரூர்த் தெருவில் இளவரசனது தேர்க்காலில் அகப் பட்டிறந்ததோர் கன்றின் தாய்ப்பசு, அத்துன்பம் பொறாது ஆராய்ச்சி மணி யடித்து, அதே தேர்க் காலில் அவ்வரசிளங் குமரனைப் பழிக்குப்பழி வாங்கிய பின்பே ஆறுதல் அடைந்ததாகக் கூறப்படும் கதை இங்கு போதிய சான்று பகரும்.

அவைகளே இப்படியென்றால், ஆறறிவுபடைத்த மனிதத் தாய் தன் பிள்ளையை நோகவிடாமையும் இயற்கை யன்றோ? அவள் பிறர் அடிக்கவும் பார்ப்பாளா? தனக்குத்தான் அடிக்க மனம் வருமா? சில தாய்மார்கள் சில சமயங்களில் தப்பித் தவறிப் பிள்ளையை அடித்துவிடுவார்கள் பக்கத்திலிருந்த வர்கள் விலக்கிவிடவில்லை யென்றால் 'ஏன் விலக்கவில்லை?' என்று பின்பு அவர்கள்மேல் சினங் கொள்வதும் உண்டு. **'கடந்த மாமுனிவரும் கடப்பரோ மக்கள்மேல் காதல்?'** எனவே, பெற்றோர் பிள்ளைமேல் இரக்கம் காட்ட வேண்டியதுதான். அதுவும் இயற்கைதான். ஆனாலும் அவ்விரக்கம் குறிப்பிட்ட ஓரளவினதாகவே இருக்க வேண்டும்.

**அடித்தும் வளர்க்கலாம்:**

ஆனால் சில பிள்ளைகள் அளவுக்கு மீறிக் குறும்பு செய்வார்கள். அவர்களைப் பெற்றோரும் கண்டிப்பதில்லை. அக்குறும்பைக் கண்டு மகிழும் பெற்றோரும் உண்டு. அது பிறர்க்குப் பிடிக்காது. அக்குறும்புப் பிள்ளையினையும், கண்டிக்காத பெற்றோரினையும் நன்கு வதைக்க வேண்டும் என்றும் பிறர் எண்ணுவதுண்டு. அவ்வளவு வெறுக்கத் தக்க நிலையில் பெற்றோர் செல்லம் கொடுத்தலாகாது. கொடுத்தால் பிள்ளைகள் அறவே கெட்டுப் போவார்கள். பின்னால் பெற்றோர்க்கே அடங்காது போனாலும் போகலாம். ஆதலின், தாய்மார்கள் தம் பிள்ளைகளைத் திருத்துவதற்காகத் தம் பேரன்பை உள்ளேயே வைத்துக்கொண்டு அடித்தும் வளர்க்கலாம். **'அடித்து வளர்க்காத பிள்ளையும் ஒடித்து வளர்க்காத முருங்கையும் உருப்படா'** என்றது பொய்யா? **'அடி உதவுவது போல் அண்ணன் தம்பியும் உதவார்கள்'** என்றது புனைந்துரையா? அல்லவே, ஆதலின் தாய்மார்கள், எவ்வெவ் விதத்தால் தம்பிள்ளைகள் முன்னேற்றம் அடைவார் களோ அவ்வவ்விதத்தில் அவர்களைப் பழக்கி வளர்க்கவேண்டும். அப்போது தான் பிள்ளைகள் பிள்ளைகளாகி விளக்கம் பெறுவார்கள். அதனால் தாய்மார்களாகிய தாமும் விளக்க மெய்தலாம். தம்மால் வீடும் விளக்கமுறும். எனவே, இவ்வளர்ப்பு முறைகளைத் தாய்மார்கள் நன்கு கடைப்பிடிப் பார்களாக.

**பிள்ளைகள் கடமை:**

ஆனால், தாய்மார்கள் மட்டும் தம் கடமைகளைச் செய்துவிட்டால் போதுமா? பிள்ளைகளும் பெற்றோர்க்குச் செய்யவேண்டிய கடமைகளை நன்குணரவேண்டும். **'ஆண்டிச்சி பெற்றது ஐந்தும் அவலம்'** என்றபடி கணக்குக்குப் பிள்ளையென்றிருந்தால் மட்டும் போதுமா? தாங்கள் நற்குணசாலிகளாக விளங்கித் தம் பெற்றோரையும் விளக்கமுறச் செய்ய வேண்டும்.

**'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்',**
**'தந்தை தாய்ப்பேண்',**
**'தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை',**
**'தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை'**

என்னும் பொன்மொழிகளைப் பொன்னேபோல் போற்ற வேண்டும்.

**தாயிடம் பற்று:**

பெற்றதாய்தனை எக்காரணத்தை முன்னிட்டும் எப்போதும் மறத்தலாகாது. அவள் பசித்திருக்கவும் காணக் கூடாது.

**''பெற்றதாய்தனை மகன் மறந்தாலும்......**
**நமச்சி வாயத்தை நான் மறவேனே''**

- திருவருட்பா.

என்னும் தெய்வப்பாவையும்

**''ஈன்றாள் பசிகாண்பா னாயினும் செய்யற்க**
**சான்றோர் பழிக்கும் வினை''**

என்னும் குறளையும் ஊன்றி நோக்கின் உண்மை விளங்கும். எவனும் பெற்ற தாயை மறக்கமாட்டான்; மறக்கவும் கூடாது என்னும் கருத்து அப்பாவில் குறிப் பாக அமைந்து கிடக்கின்றது. அதேபோல், எவனும் ஈன்றாள் (பெற்ற தாய்) பசித்திருக்கக் காணமாட்டான்; காணவும் கூடாது என்னும் கருத்துக் குறளில் குறிப் பாகக் குறிக்கப் பட்டுளது. இன்னும், '**தாயைப் பழித் தாலும் தண்ணீரைப் பழிக்கக்கூடாது**' என்னும் பழ மொழியும் தாயைப் பழிக்கலாகாது என்னும் கருத் தையே குறிப்பாக உணர்த்தி நிற்கின்றதல்லவா? இது பற்றி வழங்கும் சிறுகதையொன்றும் உண்டு.

**கடமை உணர்த்தும் கதை:**

ஓரூரில் எரிமலை பற்றி எரியத் தொடங்கியது. மக்கள் அனைவரும் இன்றியமையாப் பொருள்கள் சில வற்றை எடுத்துக் கொண்டனர். உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடவும் தொடங்கினர். ஆனால் ஒருவன் மட்டும் ஓடினானில்லை. எப்பொருளையும் எடுத்துக் கொண்டானும் இல்லை. வயது முதிர்ந்த கண்ணில் லாத தன் தாய் தந்தையர்களைத் தூக்கி இரண்டு தோள்களிலும் சுமந்து கொண்டு செல்லலானான். பலரும் இக்காட்சியைக் கண்டார்கள். ஆகா! இவ னல்லவா கடமையை உணர்ந்தவன்? இவனைப் பிள்ளையாகப் பெறுதற்கு இக்கிழவனும் கிழவியும் என்ன நோன்பு செய்தார்களோ? எனப் புகழ்ந்தார்கள். இதுபோலவே பிள்ளைகள் ஒவ்வொருவரும், 'இவன் தாய் தந்தையர் இவனைப் பெற என்ன நோன்பு

செய்தார்களோ' எனப் பெற்றோரைப் பிறர் புகழும் படியாக நடந்துகொள்ள வேண்டும். பிள்ளை, பெற்றோர்க்குச் செய்யவேண்டிய இன்றியமையாத உதவியும் இதுவே. இதனை,

**"மகன்தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை**
**என்நோற்றான் கொல்லென்னும் சொல்"**

என்னும் திருக்குறளாலும் தெளியலாம். ஈண்டு தந்தைக்குக் கூறப்பட்டிருப்பினும் உரிமை பற்றிப் பொதுவாகத் தாய்க்கும் வைத்துக்கொள்ள வேண்டும். இது போன்ற வரலாறொன்று இராமாயணத்திலும் காணப்படுகின்றது.

**தசரதன் மகிழ்ச்சி:**

பிள்ளையொருவன், காவடி கட்டி அதன் இரண்டு பக்கத்திலும் கண்ணில்லாத தன் தாய் தந்தையரை வைத்துக்கொண்டு ஊரூராய்ச் சென்று காப்பாற்றுவது வழக்கம். வழக்கபபடியே ஒரு நாள் ஓர் ஊரை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். இளைப்பாறுவதற்காக வழியில் ஒரு காட்டில் தங்கினான். தாய் தந்தையர் அருந்தத் தண்ணீர் கேட்டனர். அவன் ஒரு கலத்தை (பாத்திரம்) எடுத்துக்கொண்டு ஒரு குளத்தை யடைந்து தண்ணீர் மொண்டான். அவ்வொலி அங்கு வேட்டையாட வந்திருந்த தசரதனுக்குக் கேட்டது. ஆனால், அரசன் அவ்வொலியை யானை தண்ணீர் குடிக்கும் ஒலியென மாறியுணர்ந்தான். அம்பெய்தான். தாக்கப்பட்ட பிள்ளை கத்தினான். மனிதக்குரல் கேட்டு அரசன் திடுக்கிட்டான். அருகில் ஓடினான்.

நடந்ததைக் கூறினான் அப்பிள்ளை. தாய் தந்தையர்க்குத் தவறாது தண்ணீர் கொண்டுபோய்க் கொடுக்கும்படி வேண்டி உயிர் துறந்தான். அரசன் தன் பிழைக்குப் பெரிதும் வருந்தினான். தண்ணீருடன் கண்ணில்லாதோரை அடைந்தான். நடந்ததைக் கூறி மன்னிப்புக் கேட்டான். பயனில்லை. அக்கிழவர்கள் அரசனை நோக்கி, 'எம்மைப் போலவே நீயும் பிள்ளையைப் பிரிந்து இறப்பாயாக' என்று கெடுமொழி (சாபம்) இட்டு இறந்தனர். அதனைப் பிள்ளையே யில்லாத தசரதன் கேட்டான். ஓர் உயிரைக் கொன்ற தீவினையை எண்ணி ஒருவிதத்தில் வருந்தியும், நமக்கும் பிள்ளை பிறக்கும் போலும் என ஒருவிதத்தில் மகிழ்ந்தும் அரண்மனை அடைந்தான்.

இவ்வரலாற்றிலுள்ள கருத்துக்கள் சில குறிப்பிடத்தக்கனவாம். அப்பிள்ளை பெற்றோர்க்குச் செய்த கடமையினையும், பிள்ளையால் பெற்றோர் பெற்ற நன்மையினையும், தசரதன் ஓருயிரைக் கொன்ற பொல்லாங்கையும் மறந்து நமக்கும் பிள்ளை பிறக்கும் போலும் என்று கொண்ட மகிழ்ச்சியினையும் கருதி நோக்கின், பிள்ளைகள் இருக்க வேண்டிய இன்றியமையாமையும், பிள்ளைகள் செய்யவேண்டிய கடமையும், பிள்ளையால் பெற்றோர் அடையும் விளக்கமும் நன்கு புலப்படுகின்றனவன்றோ?

**மணமானபின் மாறுதல்:**

ஆனால், பிள்ளைகள் சிலர் மணமானபின் மாறுபட்டு விடுகின்றனர். மனைவிக்கு அணுக்கத்

தொண்டராகி விடுகின்றனர். அவள் பேச்சைக் கேட்டுத் தாயை வைவதும் வெறுப்பதும் செய்கின்றனர். அதற்கேற்பவே சில பெண்களும் நடக்கின்றனர், கணவனைக் கையில் அடக்கிக்கொண்டு வயது முதிர்ந்த மாமியை வருத்துகின்றனர். உணவு முதலிய உதவிகளை ஒழுங்காகச் செய்வதில்லை. கணவன் வீட்டில் இல்லாத நேரம் பார்த்துத் தள்ளாத கிழவியைப் படாத பாடு படுத்திவிடுகின்றனர். பொதுவாகப் பெண்கள், தம் மகன் சிறுவனாய் இருக்கும்போது அவனுக்கு உணவளிப்பதற்காக எப்பொழுது பள்ளிக்கூடத்திலிருந்து வருவான் எனத் தெருவையே நோக்கி அவன் வருகையை எதிர் பார்ப்பார்கள். அதேபோல் சில பெண்கள் மருமகள் வந்த பின்னரும், தமக்கு எப்போது சோறு கிடைக்குமோ என்றேங்கித் தெருவை நோக்கி மகன் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதும் உலகில் உண்டு. பிள்ளைகள் தாய்மார்களை இவ்வளவு எளிய நிலையில் வைத்திருத்தலாகாது. இறந்த பின்பு பிணத்தைச் சிறப்பாக எடுப்பதில் என்ன பயன்? சில குடும்பங்களில் தாய் தண்ணீரும் இன்றித் தவித்துக் கொண்டிருப்பாள். பிள்ளையோ அவளைச் சிறிதும் பொருட்படுத்தான். வருவார் போவார்க்கு விருந்து செய்தல் முதலிய ஆரவார வாழ்க்கையிலேயே ஈடுபட்டிருப்பான். ''**தாய் தண்ணீரின்றித் தவிக்கின்றாள், தம்பி கும்பகோணத்தில் கோதானம் செய்கிறான்**'' என்னும் பழமொழி ஏற்பட்டதும் இன்னோரைக் குறித்தே.

**தாய் தந்தையர்க்கு அறிவுரை:**

இவ்விடத்தில் மக்களிடையே வழங்கும் சிறு கதையொன்று நினைவிற்கு வருகின்றது, ஒருவன் தன் மனைவியின் வயப்பட்டான், தாய் தந்தையரை வெறுத்தான். ஆனால் முற்றிலும் உதறித்தள்ள முடியவில்லை. தள்ளினும் இந்த உலகம் விடாதல்லவா? எனவே, வேண்டா வெறுப்பாய் ஒருவாறு கடமையைக் கழித்துவரலானான். வயது முதிர்ந்து தளர்ந்த பெற்றோர் இருவரையும் தெருத் திண்ணையிலேயே தங்கவைத்துவிட்டான், இருவர்க் கும் இரண்டு மட்கலங்களைத் தந்திருந்தான். வேளா வேளைக்கு ஏதேனும் குறிப்பிட்ட உணவை அம்மட் கலங்களில் இட்டு வந்துவிடுவது வழக்கம். ஒருநாள் உணவு கொண்டு போகப்பட்டது. ஆனால் மட்கலங்கள் காணப்படவில்லை. பல விடங்களிலும் தேடிப்பார்த்தான் பயனில்லை,

அப்போது அவனுடைய சிறிய மகன் ஓடி வந்தான். வந்து தந்தையை நோக்கி, 'என்ன தேடுகின்றீர்கள்?' என்று கேட்டான். அதற்கவன், மகனைப் பார்த்து, 'இங்கு உன் பாட்டன் பாட்டி களுடைய மட்கலங்கள் இருந்தனவே; அவை எங்கே?' என்று வினவினான். உடனே சிறுவன், 'யான் அவற்றைப் பாதுகாவலாக ஓரிடத்தில் வைத்துள் ளேன்' என்று பதில் பகர்ந்தான், ஏன் அங்ஙனம் செய்தாய் என்று தந்தை அதட்டினான். அதற்குச் சிறுவன், ''நீரும், நும் மனைவியும் (என் தாயாரும்)

வயது முதிர்ந்து தள்ளாதவர்களாகிவிட்டால், இருவரையும் இத்தெருத் திண்ணையில் இருக்கவைத்து உணவளிக்கவேண்டிய கடமை எனக்கு உள்ளதல்லவா? அப்போது யான் மட்கலங்களை எங்குத் தேடுவது? அதனால் இப்பொழுதே எடுத்துப் பாதுகாவல் செய்து கொண்டேன்'' என்று கன்னத்தில் அறைவது போல் பதில் கூறினான். கேட்ட தந்தையும் தாயும் வெட்கித் தலைகுனிந்தனர். எனவே, அச்சிறுவன் குறிப்பாகத் தன் தாய் தந்தையர்க்கு அறிவுறுத்திய அறிவுரையினை அனைவரும் கருதிப்பார்க்க வேண்டுவது கடமையாகும்.

**தாய்மை உணர்ச்சி;**

இத்தீய பழக்கந்தான், சிலரைத் தாய்மொழியன்பையும் தாய்நாட்டன்பையும் மறக்கச் செய்கின்றது. பிறமொழிகளையும் பிறநாடுகளையுமே விரும்பவும் புகழவும் செய்கின்றது. பிள்ளைகள் இங்ஙனம் இருக்கலாமா? **''மாதாவை ஒரு நாளும் மறக்கவேண்டா''** என்னும் மூதுரையை நினைவுக்குக் கொண்டுவர வேண்டும்,

**''பெற்ற நல்தாயும் பிறந்த பொன்னாடும்**
**நற்றவ வானிலும் நனி சிறந்தனவே''** (பாரதியார்)

என்னும் மணிமொழிக்கிணங்கத் தாய்மையின் சிறப்பை உணரவேண்டும். உணர்ந்து தாயைப்பேண வேண்டும். தாய்மொழியை வளர்க்கவேண்டும். தாய்நாட்டைத் தழைக்கச் செய்யவேண்டும், தாய் வேறல்லள்; தாய்மொழி வேறன்று; தாய்நாடு

வேறன்று என்ற உணர்ச்சியை உள்ளத்தில் ஊன்றப் பதிக்க வேண்டும். அதனால், பிற மொழிகளையோ பிற நாடுகளையோ வெறுத்தலும் இகழ்தலும் செய்ய வேண்டும் என்பவன்று. தன் தாயைப் போற்றவேண்டு மென்றால் பிறபெண்களைத் தூற்றவேண்டும் என்பதா பொருள்? அல்லவே. எனவே. இக்கடமைகளை உணர்ந்த பிள்ளைகள் வாய்க்கப்பெற்ற தாயே, தாய் மொழியே, தாய் நாடே விளக்கம்பெற முடியும்.

**உயிரிழந்தும் உதவி:**

மேலும், உயிரிழந்தும் பெற்றோர்க்கு உதவக் கூடிய பிள்ளையொருவன் இருப்பானேயானால் அவன் பிறவியே மிகச் சிறந்த பிறவியாகும். சிறுத்தொண் டரும் அவர் மனைவி திருவெண்காட்டு நங்கையும் தெய்வக் கூட்டத்துள் சேர்ந்தவராகக் கருதப்பட்டு இன்றும் என்றும் போற்றப்படுவதற்குக் காரணம் மகன் சீராளன் அல்லவா? அம்மகன் இல்லாவிட்டால் அவர்கள் பிள்ளைக்கறி படைத்திருக்க முடியுமா? பேரின்ப வீட்டைத்தான் பெற்றிருக்க முடியுமா? அவர் தம் தொண்டினை எங்கும் சுடர்விட (பிரகாசிக்கச்) செய்த மலைமேல் விளக்கு அம்மைந்தன் அல்லவா? இவ்வரலாற்றைப் பற்றிச் சிலர்க்குக் கருத்து வேற்று மையும் உண்டு. இவ்வரலாறு உண்மையானதன்று; பொருத்தமும் அன்று எனக் கூறுவோரும், அவரை மறுத்து உறுதி செய்வோரும் உலகில் உளர். அந்த ஆராய்ச்சி இங்கு வேண்டுவதின்று. அது மற்றொன்று விரித்தலாகும். எங்ஙனமோ, பிள்ளை பெற்றோர்களின்

விருப்பம் நிறைவேறுவதற்குக் காரணமாய் இருந்தான். அதனாலேயே அவர்கள் சைவ உலகத்தில் விளக்கம் பெற்றார்கள் என்ற உண்மையை மட்டுமே இங்கு நாம் எடுத்துக் கொள்ளவேண்டும். இந்நிகழ்ச்சியைச் சேக் கிழார் என்னும் செந்தமிழ்ப் புலவர் பெரிய புராணத் தில் அழகுபட அமைத்துப் பாடியுள்ளார்.

**சீராளன் வரலாறு:**

அடியார் ஒருவர் அமுதுண்ண வந்தார். சிறுத் தொண்டரை நோக்கி, ''ஒரு குடிக்கு ஒரு மகனாய் இருக்க வேண்டும்; ஐந்து வயதுக்குமேல் கூடாது; உருவத்தில் ஒருவிதமான குறைபாடும் இருத்தலா காது; மேலும் அம்மைந்தனைத் தாய் மகிழ்ந்து பிடிக்கத் தந்தை மகிழ்ந்து அரியவேண்டும்; அங்ஙனம் அரிந்து சமைத்துப் படைக்கும் உணவையே யான் உண்ணு வேன்'' என்று அறிவித்துவிட்டார். கேட்டார் சிறுத் தொண்டர். கேட்டார் கேட்டபடி உணவிடுவதாக உறுதியிட்டுக் கொடிகட்டியுள்ளாராதலின் அங்ஙனமே ஒத்துக் கொண்டார். வீட்டிற்கு வந்தார். மனைவி நங்கையாரிடம் கூறலானார்.

''என்ன! இத்தகைய மைந்தன் எங்குக் கிடைப்பான்? எவர்தாம் கொடுக்க இசைவர்? அதிலும் ஒரே மகனாய் இருக்கவேண்டுமாம். ஐந்து வயதாகவும் இருக்க வேண்டுமாம், இத்தகைய பிள்ளையைத் தேடி விலைக்கு வாங்கினாலும் அவன் தாய் பிடிக்கத் தந்தை அரிய வேண்டுமே! நடப்பதா இது? அப்படியே செய்வதாகவும் வாக்குறுதி கொடுத்துவிட்டேனே.

செய்யாவிட்டால் இவ்வளவு நாட்களாய்ச் செய்து வந்த மெய்த்தொண்டு பழுதுபட்டுவிடுமே'' என்றெல்லாம் கூறினார். இருவரும் கவலையுற்றார்கள். ஆனால் ஓர் எண்ணம் தோன்றியது. இத்துணை இலக்கணமும் நம் மகன் சீராளனுக்கு இருக்கின்றமையால் அவனை அரிந்து சமைத்துப்போட்டு விடலாமே என்று கலந்து மகிழ்ந்தார்கள். இருவரும் தம் மகன் தமக்கு உதவியாவதைத் தனித்தனியே எண்ணி இன்புறலானார்கள்.

'ஒப்பில்லாத பெருமையுடைய என் மைந்தன் என் உண்மை உறுதியை (சத்தியத்தைக்) காப்பாற்றினான்' என்றெண்ணிப் பேருவகை எய்தினார் சிறுத்தொண்டர். 'அடியாருக்குப் பிள்ளைக்கறி படைக்காவிட்டால் உறுதி (சத்தியம்) தவறும்; அதனால் என் கணவர் உயிர்விடுவார்; அங்ஙனம் நிகழாதபடி என் கணவர் உயிரை எனக்களித்து என் மங்கல நாணைக் (தாலி) காப்பாற்றினான் என் மைந்தன்' என்றெண்ணிப் பேருவகை யடைந்தார் நங்கையார். இதனை,

''பொருவில் பெருமைப் புத்திரன்மெய்த்
தன்மை அளித்தான் எனப்பொலிந்து
மருவு மகிழ்ச்சி எய்தஅவர்
மனைவி யாருங் கணவனார்
அருமை உயிரை எனக்களித்தான்
என்று மிகவும் அகமலர
இருவர் மனமும் பேருவகை
எய்தி அரிய வினைசெய்தார்''

என்னும் பெரிய புராணச் செய்யுளால் உணரப் பெறலாம்.

மேலும், சிறுத்தொண்டர் தம் மனைவியை நோக்கி நானுய்யும்படி நீ பிள்ளை பெற்றாய் என்னும் கருத்தில் 'எனை இங்குய்ய நீ பயந்தான்' (பயந்தான்- பெற்ற பிள்ளை) என்று கூறியதாகவும். மனைவியாரும் 'நம்மைக் காக்க வரும் மணி' என்று கூறியதாகவும், சேக்கிழார் இயம்பியுள்ளார். எனவே, சீராளன் தன் இளமைப் பருவத்திலேயே உயிரையும் இழந்து உடம்பாலும் பயன்பட்டுத் தந்தையின் உறுதியினையும் தாயின் தாலியினையும் காப்பாற்றினான்; அவர்களைப் பேரின்ப வீட்டிற்கும் செலுத்தினான்; மேலும், அவர்களின் புகழொளியை எங்கும் வீசச் செய்த விளக்காகவும் திகழ்ந்தான் என்னும் கருத்துக்கள் பெரியபுராண வரலாற்றிலிருந்து பெறக் கிடக்கின்றன. எனவே, பிள்ளையென்றிருந்தால் வீண் இல்லை போலும்?

**பிணத்திற்குப் பெருமை:**

இங்கு மற்றொரு நிகழ்ச்சி நினைவின் முன் நிற்கிறது. தாம் இறந்துவிட்டால் தாம் பிணமும் பிள்ளைகளாலேயே விளக்கம் பெற வேண்டியுள்ளது. பிள்ளை யில்லாத பிணத்திற்குச் சிறிதும் பெருமை யில்லை. உலகினர் பிள்ளையிலாதாரை நோக்கிக் கொள்ளி வைப்பதற்கும் இவர்கட்குப் பிள்ளை யில்லையே என்று குறை கூறுவதும் இதுபற்றியே. எனவே, காப்பாற்றுவதற்குப் பிள்ளையில்லாவிட்டா

லும் இறுதிக்கடன் (சாவுச் சடங்கு) செய்வதற்காயினும் பிள்ளையிருக்கவேண்டும். இவ்வாய்ப்பும் இல்லாதார்க்கு ஒரு புகழும் இல்லை. இப்பழிச் சொல்லினின்றும் சிறிதாயினும் தப்புவதற்காகவே, சிலர் தமக்குப் பிள்ளையில்லா விட்டாலும் பிறர் பிள்ளையினையாவது எடுத்து (சுவிகாரம்) வளர்ப்பது வழக்கம். தமக்கென ஒரு பிள்ளை இருந்தால்தானே தாம் இறந்த காலத்தில் எல்லாக் கடமைகளையும் பொறுப்புடன் செய்து முடிப்பான். அதுதான் அனைவர்க்கும் ஒப்புதலாகவும் இருக்கும். சில பிணங்கட்குக் கொள்ளி வைக்க ஆளே கிடைப்பதில்லை. யாரை அழைப்பினும் 'நான் மாட்டேன்' என அஞ்சிப் பின்வாங்குவார்கள். இதனை ஆராய்ந்தால், எவ்விதத்திலும் பிள்ளையுள்ளவர்களே விளக்கம் பெற முடியும் என்பது விளங்குகின்றதல்லவா? இங்கு நம் பட்டினத்தார் வரலாற்றை எடுத்துக் காட்டாமல் விட முடியவில்லை.

**பட்டினத்தார் பற்று:**

பட்டினத்தார்க்கு முதலில் வழங்கிய பெயர் திருவெண்காடர். நம் திருவெண்காடர் மிகப் பெருஞ் செல்வர். மாணிக்க வாணிகம் (நவரத்தின வியாபாரம்) செய்தவர். பல கப்பல்கட்குச் சொந்தக்காரர். சுருங்கக் கூறின், தென்னாட்டுக் குபேரன் என்றே கூறிவிடலாம். அத்திருவெண்காடர் இறைவன் செயலால் இவ்வுலக இன்பத்தை வெறுத்தார். துறவுபூண்டார், துறவென்றால் எளியதன்று. கோவணத்தையும் பொறை (சுமை) யாகக் கருதிய கடுந்துறவு. வீட்டை விட்டு வெளி

யேறினார். பின்தொடர்ந்த மனைவியை நிறுத்தி விட்டார். ஆயின் அவ்வூரை அறவே விட்டுப் பிரிந்தாரில்லை. அவ்வூர்ப் பக்கத்தேயே சுற்றித்திரிந்து கொண்டு கிடந்தார். காரணம் என்ன? வயது முதிர்ந்த தாயார் இறந்துவிட்டால் அவர்க்கு இறுதிக் கடன் (சாவுச்சடங்கு) செய்யவேண்டிய கடமை தம்மைப் பொறுத்திருக்கின்றதல்லவா? குபேர செல்வத்தையே வெறுத்த அவரால் இக்கடமையை மட்டும் தள்ள முடியவில்லை. நமச்சிவாயத்தை நாக்கு மறந்தாலும் பெற்ற தாய்தனை மகன் மறவாமல் இருப்பது ஒரு சிறந்த இலக்கண மன்றோ? ஆதலின் தாய்க்காகக் காத்திருந்தார்.

ஆயுள் முடியத் தாய்க்கும் உயிர் போயிற்று, பற்றற்ற பட்டினத்தடிகள் அச் செய்தியைக் கேட்டு அடைந்த வருத்தத்திற்கும் அளவுண்டோ? தாயார் உடம்பில் தீ மூட்ட மனம் வரவில்லை. புலம்பத் தொடங்கிவிட்டார். ''என் அருமைத் தாயே! என்னைப் பெறுதற்காகப் பல்லாண்டுகள் வருந்திக் கடிய நோன்பு கிடந்தாய்; வயிறு சரிய முந்நூறு நாள் சுமந்து பெற்றாய்; இரவு பகலாய் ஈ யெறும்பு தீண்டாமல் கண் விழித்துக் காத்தாய்; இங்ஙனம் எவ்வளவோ துன்பங்களைப் பொறுத்து என்னை வளர்த்தாய்; இப்போது விட்டுப்பிரிந்தாயே; யான் என்ன செயவேன்! உன் உடலுக்கா நான் தீ மூட்ட வேண்டும்?'' என்றெல்லாம் பல கூறிப் புலம்பினார். இப்புலம்பலை

**''முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்து**
**அந்திபக லாச்சிவனை ஆதரித்துத்—தொந்தி**
**சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ**
**எரியத் தழல்மூட்டு வேன்''**

என்னும் உருக்கமான பாடலானும் பிறவற்றாலும் உணரலாம்.

**வயிற்றெரிச்சல்:**

பின்னென்ன செய்வது? கொள்ளி வைத்துத் தானே தீரவேண்டும்? அக்கடமையினையும் முறைப் படி முடிக்க முற்பட்டார். 'முற்காலத்தில், சிவபெருமான் அரக்கர்களின் கோட்டைகள் மூன்றினை (முப்புரம்) தீ மூட்டி யெரித்தார்; அங்நெருப்புகட் கொப்பாக, என் அன்னையும் தான் இறந்து என் அடிவயிற்றில் (வயிற்றெரிச்சல்) தீ மூட்டிவிட்டாள்; அவைபோல் யான் இடும் தீயும் மூள்வதாகுக' என்னும் கருத்துடைய

**''முன்னை யிட்டதீ முப்பு ரத்திலே**
**பின்னை யிட்டதீ தென்னி லங்கையில்**
**அன்னை யிட்டதீ அடிவ யிற்றிலே**
**யானும் இட்டதீ மூள்க மூள்கவே''**

என்னும் இச்செய்யுளைக் கூறிக் கொள்ளி வைத்தார். தாய் இறந்த செய்தியைக் கேட்டதும் கடுந்துறவியின் வயிறும் பற்றியெரிந்தது என்பதை இச்செய்யுள் எடுத்துக் காட்டுகின்றதல்லவா? எனவே, முற்றத் துறந்த முனிவராய பட்டினத்தடிகளே இங்ஙனம்

கடமையை உணர்ந்திருந்தாரென்றால், இல்வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் பிறர் தாய்மார்கட்கு எவ்வளவோ கடமைப்பட்டுள்ளார்கள் என்பது இனிது விளங்கும்.

**மறைந்தும் விளக்கம்:**

இங்ஙனம் இறந்து பிணமாகக் கிடக்கும்போது மட்டுந்தானா பிள்ளைகளால் பெற்றோர்கள் விளக்கமுறுகின்றார்கள்? இறந்து மறைந்த பின்னரும் தெய்வமாகக் கொண்டாடி வணங்கப்பெறுகின்றார்கள். பிள்ளைகள் ஆண்டாண்டு தோறும் நினைவுநாள் ஏற்படுத்தி (திவசம் கொடுத்தல்) சிறப்புக் கொண்டாடி அப்பெற்றோர்களைத் தெய்வமாகவே கருதி வழிபட்டு வருகின்றார்கள். பிள்ளையிலாதோர்க்கு இப்பெருமைகள் எல்லாம் உண்டா? சிறிதும் இல்லையே. இறந்ததுமே அவர்கள் பெயர் மறைந்துவிடும் என்பது கண்கூடு.

**இரங்கத்தக்க நிலை:**

ஆண்களைவிடப் பெண்கட்குப் பிள்ளை விளக்கம் இன்றியமையாதது என்பது வேறொரு விதத்திலும் விளங்குகின்றது. அஃதெப்படி? ஆண்கள் மனைவி இறந்துவிட்டால் வேறொரு பெண்ணை மணந்து பிள்ளை பெற இடமுண்டு. ஆனால் பெண்கட்கோ, கணவன் இறந்துவிட்டால் நம் நாட்டு இனக் கட்டுப்பாட்டின்படி வேறு உய்வழியில்லை. இவ்வெளிய நிலையில் சிக்குண்டு கிடக்கின்றனர். கணவனில்லாக்

கைம்பெண்ணானதோடு பிள்ளைப்பேறு அற்றவராயும் விடுகின்றனர். இந்நிலை பெரிதும் இரங்கத் தக்கதல்லவா? '**பெண்ணென்றால் பேயும் இரங்குமே**' ஆதலின், இரங்கத்தக்க இப்பெண்மை நிலையை எண்ணின், பெண்கட்குப் பிள்ளைப்பேறு எவ்வளவு இன்றியமையாதது என்பது இனிது விளங்குமன்றோ?

எனவே, பெண்கள் மேற்கூறியவாறு பலவிதத்திலும் தம் பிள்ளைகளாலேயே விளக்கம் பெறுகின்றார்கள் என்பது நன்குபோதரும். ஆகவே, வீட்டின் விளக்காகிய பெண்களின் விளக்குப் பிள்ளைகளே என்னும் கருத்து நன்கு வலியுறும்.

**இல்லற வாழ்வு**

*உலக மக்களை இல்லறத்தார், துறவறத்தார் என்னும் இரு பிரிவுக்குள் அடக்கிவிடலாம் துறவறத்தாரோ நூற்றுக்கு ஒருவர் தேறுவதே அரிது. எனவே, மிக மிகப் பெரும்பாலோர் இல்லறத்தார்கள்தானே. எனவே மக்கள் வள்ளுவர் நெறி நின்று தத்தம் இல்லக் கடமைகளை ஒழுங்காய் நிகழ்த்தினால் அவர்தம் இல்லற வாழ்வு இனிது செழிக்கும்.*

நூல்: வள்ளுவர் இல்லம்
சுந்தர சண்முகனார்

# முடிப்புரை

இந்நூலில் இதுவரையும் கூறப்பட்டவற்றைச் சற்றுச் சுருங்கத் தொகுத்து ஆராய்வோம்.

## முதல் பகுதி

மனித வாழ்க்கைக்கு வீடும் விளக்கும் இன்றியமையாத பொருள்கள் என்பதும், வீட்டிற்கு வெளிச்சம் ஒன்றனையே கொடுக்கும் எண்ணெய் விளக்கு, மின்சார விளக்குக்களைக் காட்டிலும், இடத்தூய்மை, மங்கள முடைமை, தெய்வ விளக்கம், செல்வ விளக்கம் விருந்தோம்பல், கணவனைக் காத்தல் முதலிய பல விளக்கங்களையும் தரும் பெண்களே வீட்டிற்குச் சிறந்த விளக்கு ஆவார்கள் என்பதும், இன்ன பிறவும் முதல் பகுதியில் உணர்த்தப்பட்டன.

## இரண்டாம் பகுதி

அடுத்தபடியாக, வீட்டின் விளக்காகிய பெண்கட்கும் விளக்கொன்று இருந்தால்தான் அவர்களும் விளக்கம் பெற்று வீட்டையும் விளக்கமுடியும் என்பதும், இயற்கை யமைப்பாலும், பெற்று வளர்க்கும் சிறப்புரிமையாலும், திருமணமாகிக் கருவுற்றதிலிருந்து

முதியவளாகி இறக்கும் வரையிலும் பலவகை நன்மைகளைப் பெறும் பெருமையாலும், இறந்த பின்னும் தெய்வமாகக் கருதிப் போற்றப் பெறும் புகழ்ச்சியாலும் பிள்ளைகள் பெண்கட்கு விளக்கு ஆவார்கள் என்பதும், இன்ன பிறவும் இரண்டாம் பகுதியில் உணர்த்தப்பட்டன.

**நான்மணிக்கடிகைச் செய்யுள்:**

இந்நூலில் இதுகாறும் கூறப்பெற்ற கருத்துக்கள் யாவும், விளம்பிநாகனார் என்னும் சங்கப் புலவரால் இயற்றப்பெற்றதும், பழந்தமிழ்ச் சங்க இலக்கியங் களுள் ஒன்றுமாகிய நான்மணிக்கடிகை என்னும் நூலில் உள்ள ஒரு செய்யுளில் அழகாகத் தொகுத்து உணர்த்தப்பட்டுள்ளன. அச்செய்யுள் வருமாறு:

**''மனைக்கு விளக்கம் மடவார்; மடவார்**
**தமக்குத் தகைசால் புதல்வர்; மனக்கினிய**
**காதல் புதல்வர்க்குக் கல்வியே; கல்விக்கும்**
**ஓதில் புகழ்சால் உணர்வு'' (103)**

என்பது செய்யுள். இச்செய்யுளின் பொருள் வருமாறு:

**செய்யுளின் பொருள்:**

''மனைக்கு (வீட்டிற்கு) விளக்கம் செய்யும் விளக்கு மடவார்கள் (பெண்கள்); அம்மடவார்க்கு விளக்கம் தரும் விளக்குத் தகுதி நிறைந்த பிள்ளைகள்; மனத்திற்கினிய காதலுடைய அப்பிள்ளைகட்கு விளக்கம் செய்யும் விளக்குக் கல்வி; அக்கல்விக்கு விளக்கம் தரும் விளக்குப் புகழ்ச்சி தரத்தக்க உணர்ச்சி

யாகும்'' என்பது நேர் பொருள். இங்கு முதலடியில் உள்ள விளக்கம் என்னும் சொல்லுக்கு விளக்கம் செய்யும் விளக்கு எனப் பொருள் கொள்ளவேண்டும், அவ்விளக்கம் என்னும் ஒரு சொல்லையே, மனைக்கு விளக்கம் என முதலடியிலும், மடவார் தமக்கு விளக்கம் என இரண்டாம் அடியிலும், காதல் புதல்வர்க்கு விளக்கம் என மூன்றாம் அடியிலும், கல்விக்கும் ஓதில் விளக்கம் என நான்காம் அடியிலும் சேர்த்துக் கொவீளவேண்டும், இச்செய்யுள், தண்டியலங்காரம் என்னும் அணியிலக்கண நூலின் உரையில், 'மாலா தீபகம்' என்னும் அணிக்கு எடுத்துக் காட்டாக (உதாரணமாக) காட்டப்பெற்றுள்ளது.

**விளக்குவது விளக்கு:**

ஆனால், இச்செய்யுளில் கூறப்பட்டுள்ள நான்கு விளக்குக்களுள் நாம் இங்கு எடுத்துக்கொள்ள வேண்டுவன பெண்கள், பிள்ளைகள் என்னும் முதலிரண்டு விளக்குக்களேயாம். (பின்னுள்ள கல்வி, உணர்ச்சி என்னும் இரண்டு விளக்குக்களும் வேறு நூலில் விளக்கப்படும்.) பொதுவாக, உலகில் எண்ணெய் விளக்கு முதலிய விளக்குக்கள் இருளிலிருந்து நீக்கிப் பொருள்களை விளக்கும் காரணத்தினாலேயே விளக்கு என்னும் பெயர் பெற்றன. அவை போலவே பெண்கள் பாழ்நிலை என்னும் இருளிலிருந்து நீக்கி வீட்டை விளக்கு கின்றார்கள். பிள்ளைகள் துன்பம் என்னும் இருளிலிருந்து நீக்கிப் பெண்களை (பெற்றோரை)

விளக்குகின்றார்கள். இக்காரணத்தினாலேயே பெண்கட்கும் பிள்ளைகட்கும் விளக்கு என்னும் பெயர் இடப்பட்டது. விளக்குவன எல்லாம் விளக்கேயன்றோ? எனவே, பெருமையளிக்கும் பிள்ளைகளைப் பெற்ற பெண்கள் இருக்கும் வீடுகளே முழு விளக்கம் பெற்றுத் திகழும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெள்ளிதின் விளங்கும். இந்நான்மணிக்கடிகைச் செய்யுளைப் பற்றுக்கோடாகக் கொண்டே இந்நூல் எழுந்தது.

**ஏற்புடைய குறள்:**

அன்றியும், இந்நூலின் இரண்டு பகுதிகளையும் தொகுத்து ஒரே குறளில் அழகாக அமைத்துக் காட்டியுள்ளார் நம் திருவள்ளுவப் பெருந்தகையார். "ஒரு குடும்பததிற்கு மங்கலமாவது மனையாள் மாட்சிமை உடையவளாய் இருப்பதே; அவளுக்கு அழகு தரும் அணிகலமாவது நன்மக்களைப் பெறுதலே" என்னும் கருத்தில்

> **"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்**
> **நன்கலம் நன்மக்கள் பேறு"**

என்னும் இக்குறள் அமைந்துளது. இக்குறள் நாம் எடுத்துக்கொண்ட கருத்துக்கு ஏற்புடையதாக உள்ளது அல்லவா? இக்குறளின் விளக்கமே இந்நூல் என்று கூறினும் மிகவும் பொருந்தும்.

**இல்லற நிலை:**

ஆகவே, நற்குண நற்செய்கையுடைய கணவனும் மனைவியும் பெருமையளிக்கும் பிள்ளைகளைப்

பெற்றும், விருந்தினர் முதலானோரைக் காப்பாற்றி யும் வீட்டிலிருந்து கொண்டே செய்யும் இல்லற வாழ்க்கை மிகவும் சிறந்ததாகும் என்னும் உண்மை புலப்படும். ஆற்றல் (சகிப்புத் தன்மை) இல்லாத பேடிகட்கே குடும்பம் ஒரு சுமையாகத் தோன்றும். வீட்டில் மனைவி மக்கள், வேலையாட்கள் முதலானோ ருடனும், உணவு உடை முதலிய இன்பப் (போகப்) பொருள்களுடனும் கூடி இன்பவாழ்வு வாழ்ந்து வரும் சிலர், அவ்வின்ப வாழ்வுக்கிடையே ஒரு சிறு துன்பம் வந்து நேரிடினும் அதனைப் பொறுக்கும் வீரம் இல்லாக் கோழைகளாகிக் களைத்து விடுகின்றனர். தளர்ந்து சோர்ந்து புலம்பவும் தொடங்கிவிடுகின்றனர்.

**திண்ணை வேதாந்தம்:**

மேலும் இவர்கள் வெறுந்திண்ணைப் பேச்சுக்கள் பல பேசத் தொடங்கிவிடுகின்றார்கள். 'குடும்பமே ஒரு சுமை (பாரம்); இவ்வுடலே (காயமே) பொய் யானது; உலகமே நிலையற்றது (மாயை); ஆதலின் இத்துன்ப உலகில் குடும்ப வாழ்க்கையில் இருந்து கொண்டு பல துன்பங்களை அடைந்து வருந்துவதைக் காட்டிலும், துறவி (சந்நியாசி) யாகி வீட்டை விட்டு வெளியேறிவிடுவது மிகவும் நல்லதாகும்' என வாய்க்கு வந்தபடியெல்லாம் பிதற்றுகின்றனர். இப்பேடிகளின் பேதைமையை என்னென்று பேசி நோவது? வீட்டில் இருந்துகொண்டு வெயிலாலும், மழையாலும், பனியாலும், பசியாலும், இன்னபிற

துன்பங்களாலும் சிறிதும் தாக்கப்படாமல் இன்ப வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும்போதே இவர்கள் களைத்து இளைத்துப் போகின்றார்களே! இவர்களாலே துறவியாகப் போய் மேற்கூறிய துன்பங்கள் பலவற்றையும் எதிர்த்து வெற்றி பெற முடியுமா? துறவியென்றால் எவ்வளவோ பொறுக்குந்தன்மை இருக்க வேண்டாவா? எனவே, இப்பேடிகள் தப்பித் தவறி வீட்டை விட்டு வெளியேறிவிடுவார்களேயாயின், முன்னிலும் பன்மடங்கு இடர்ப்படுவார்கள் என்பது திண்ணம்.

**பல்லக்குச் சுமப்பது யார்?**

ஆகவே, இத்தகைய வெறுந்திண்ணைப் பேச்சுக்களை அறவே அகற்றிவிட வேண்டும். அங்ஙனமே அனைவரும் துறவியாகப் போய்விடின் உலகந்தான் நடப்பதெப்படி? தொழில் செய்ய முடியாத நோயாளிகள், கூனர், குறளர் முதலானோர் பிழைப்பது தான் எப்படி? துறவிகளே சில சமயங்களில் நோய், பசி முதலியவற்றால் தாக்கப்பட்டு வருந்தும்போது அவர்களைக் காப்பவர்தாம் யாவரோ? அனைவரும் பல்லக்கு ஏறிவிட்டால் சுமக்கத்தான் ஆள் வேண்டாவா? இந்நோக்கத்தாலேயே,

**''துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்**
**இல்வாழ்வான் என்பான் துணை''**

என வள்ளுவரும் வகுத்துச் சென்றுள்ளார். ஆதலின் கோழைமையை நீக்கிக் குடும்ப வீரராகத் திகழ்வதே மேல்.

**இல்லறத்தின் சிறப்பு:**

இவ்வில்லற வாழ்க்கையே ஏனைய் வாழ்க்கையினும் சிறந்ததும் பெருமையுடையதும் ஆகும் **'இல்லறம் அல்லது நல்லறம் அன்று'** என்பது ஔவையார் வாக்கு. இவ்வில்லற வாழ்க்கையிலேயே பிறர்க்குப் பெரிதும் உதவ முடிகின்றது. பிறர் பழிக்க முடியாதபடி ஒழுங்கான முறையில் இல்லறம் நடாத்தினால், துறவறத் துறையில் சென்று பெற வேண்டிய நலம் வேறொன்றும் இல்லை. இதுவே போதும். இவ்வில் வாழ்க்கையானது துறவிகள் ஆற்றும் கடிய நோன்பினும் சாலச் சிறந்ததாகும். உறுதிப் பொருட்காக முயலும் உயர்ந்தோர்கட்குள் உயர்ந்தவர்கள் இல்லறத்தார்களே. மேலும், இவர்கள் தெய்வமாகக் கருதப்பட்டுப் பலராலும் போற்றவும் பெறுவார்கள் என்பது அறுதியிட்ட உறுதியாகும் இக்கருத்துக்கள் அனைத்தையும், திருக்குறளுள் இல்வாழ்க்கை என்னும் பகுதியில் உள்ள

**"அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றிற்**
**போஒய்ப் பெறுவ தெவன்",**

**"ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை**
**நோற்பாரின் நோன்மை உடைத்து"**

முதலிய குறள்களால் தெள்ளத் தெளியலாம்.

**துறவற நிலை:**

ஆனால் நம் திருவள்ளுவர் தம் திருக்குறளுள் நீத்தார் பெருமை என்னும் பகுதியில் (அதிகாரம்)

துறவிகளின் பெருமையினையும், துறவறத்தின் சிறப்பினையும் பலவாறு பாராட்டிக் கூறியுள்ளாரே! மேலும் துறவறவியல் எனத் தனி இயல் ஒன்றும் வகுத்துள்ளாரல்லவா? ஆதலால் இல்லறத்தை விடத் துறவரத்தையே கொள்ளலாகாதா? என்று சிலர் வினவலாம், துறவறம் சிறப்புடையது என்பது உண்மைதான்.

**பழந்தமிழ்த் துறவு:**

ஆயினும், பழந்தமிழர் கைக்கொண்டு வந்ததாக ஓர் துறவு நிலை பேசப்படுகின்றது. அஃதாவது:- தொடக்கத்தில் குழந்தைகளுடன் வீட்டிலிருந்து இல்லறம் நடாத்தவேண்டும். நடாத்திச் சிற்றின்பம் முதலிய உலகப் பற்றுக்களை நுகர்ந்து வெறுத்து ஒதுக்கவேண்டும். பின்னர், குடும்பத் தலைவனும் தலைவியும் தம் வீட்டை விட்டு, ஊர்க்குப் புறம்பானதோர் இடத்தில் தங்கி துறவற நெறியில் ஈடுபட்டு உயிர்க்கு உறுதி தேடவேண்டும். இது ஒரு நல்ல முறையாகும். இதனை நம்பி யகப்பொருள் விளக்கம் என்னும் நூலுள் உள்ள

**''மக்களொடு மகிழ்ந்து மனையறங் காத்து**
**மிக்க காமத்து வேட்கை தீர்ந்துழித்**
**தலைவனும் தலைவியும் தம்பதி நீங்கித்**
**தொலைவில் சுற்றமெபடு துறவறங் காப்ப''**

என்னும் நூற்பாவால் (சூத்திரம்) நன்கு தெளியலாம்.

**பட்டினத்தார் துறவு:**

இல்லறத்தைக் கைவிட்ட பின்னர் ஊர்க்குப் புறம்பே ஓரிடத்தே தங்கவேண்டுமென மேலே உணர்த்தப்பட்டது. ஆனால் மற்றொரு முறையும் உண்டு. மறுபடியும் ஓர் விடுதியில் தங்காமல் ஊர்தோறும் சுற்றினும் சுற்றலயம். பட்டினத்தார் போன்றோர்களே இதற்குத் தக்க சான்றாவார்கள்.

**அப்பர் துறவு:**

ஆனால். அப்பரடிகள் போன்ற பழந்தமிழ்ப் பெரியார் சிலர் தொடத்திலிருந்தே துறவறத்தைக் கைக்கொள்ளவில்லையா? அதனால் அவர்கள் எடுத்த காரியத்தில் வெற்றி பெறாமல் தோல்வியா உற்றனர்? என்னும் கேள்விகள் எழலாம். உண்மைதான். அத்துறவாலும் உயர்நிலை அடைய முடியும். ஆயினும், அந்நிலை அனைவர்க்கும் கைவரப்பெறாத தொன்றாகும். அது பெரிய ஆற்றல் உடையதுமாகும். முடிந்தவர்கள் அங்ஙனம் முயன்றும் வெற்றி பெறலாம். அதற்குத் தடையொன்றும் இலது.

**இல்லறத் துறவு:**

எனவே, இங்குத் தொடக்கத்தில் இல்லறத்தில் (வீடு விளக்குக்களுடன்) இருந்து பின்பு துறவறங் கொள்ளும் நிலை யொன்றும், தொடக்கத்திலிருந்தே துறவறங்கொள்ளும் நிலை யொன்றுமாக இரண்டு நிலைகள் பேசப்பட்டன. இவ்விரண்டனுள் முதல் நிலைக்குப் பட்டினத்தடிகளும், இரண்டாவது நிலைக்கு

அப்பரடிகளும் எடுத்துக்காட்டப் பெற்றனர். இவ்விரண்டு நிலைகட்கு மேல் மூன்றாவது நிலையும் ஒன்றுண்டு. அந்நிலையை இல்லறம் என்றும் கூற முடியாது. துறவறம் என்றும் கூறமுடியாது. இரண்டும் அல்ல என்றும் கூறமுடியாது. இல்லறம் வேறு துறவறம் வேறு என்று பிரிக்கமுடியாத அளவில் இணைந்துள்ளது அந்நிலை. ஆதலின் அந்நிலைக்கு 'இல்லறத் துறவு' என்றே பெயர் கொடுத்துவிட வேண்டும்.

**இல்லறத் துறவிகள்:**

அதுபோலவே, அவ்வில்லறத் துறவு நிலையைக் கைக்கொண்டொழுகும் பெரியார்களையும் இல்லறத்தார்கள் என்றும் அழைக்க முடியாது; துறவறத்தார்கள் என்றும் அழைக்க முடியாது. இல்லறத் துறவிகள் (இல்லறத்து ஞானி) என்ற பெயராலேயே அவர்களை அழைத்துவிட வேண்டும். அவர்கள் தொடக்கத்திலிருந்து இறுதிவரையிலும், மனைவி மக்களாம் விளக்குக்களுடன் வீட்டிலேயே தங்கியிருப்பார்கள். தங்கியிருந்து இல்லறத்தார் செய்யவேண்டிய இல்லற நெறியினையும் கைக்கொண்டு ஒழுகுவார்கள். துறவறத்தார் செய்யவேண்டிய துறவற நெறியினையும் கடைப்பிடித்து ஒழுகுவார்கள். அவர்கட்கு ஒப்பு நன்கு பழுத்த புளியம்பழமேயாகும். பழம் ஓட்டுக்குள்ளேதான் இருக்கும். ஆனால் ஓட்டில் பசையுடன் ஒன்றியில்லாமல் தனித்தே கிடக்கும். அதுபோலவே அவர்களும் வீடு விளக்குக்களுடன் குடும்பத் தொடர்

புற்று இருப்பவர்போல்தாம் காணப்படுவார்கள். ஆயினும் உள்ளுக்குள் பற்றற்றவராகி, உயிர் இறுதியில் அடையவேண்டிய உண்மை உயர் நிலைக்குப் பெரிதும் பாடுபடுவார்கள். சிறுத்தொண்டர், திருநீலகண்டர், குலசேகரப் பெருமாள் முதலிய பெரியோர்கள் இதற்குப் போதிய சான்றாவார்கள்.

**வீடும் விளக்கும்:**

எனவே, இவ்வில்லறத் துறவு நிலையே ஏனைய நிலைகளைக் காட்டிலும் இனியதாகும்; எளியதாகும்; சிறந்ததாகும்; தமக்கும் பிறர்க்கும் ஒருங்கு பயன் கொடுப்பதுமாகும் எனத் தெளியலாம். ஆனால், இந் நூலுள் கூறப்பெற்றுள்ள வீடும் விளக்கும் இல்லையேல், புகழ்தற்குரிய இவ்வில்லறத் துறவு நிலைக்குச் சிறிதும் இடமில்லையன்றோ? எனவே, வரம்புகடந்த பெருமைக்குரிய இவ் 'வீடும் விளக்கும்' மக்கட்கு இன்றியமையாத பொருள்கள் என்பது இப்போது இனிது விளங்குமே!

## மதிப்புரை

**வித்துவான். சி. துரைசாமி ஐயர்,**
*மயிலம் தமிழ்க் கல்லூரித் தலைவர்.*

மதிநுட்பம் நூலோடுடைய திருவாளர் வித்துவான்–சுந்தர சண்முகனார் எழுதிய ''வீடும் விளக்கும்'' என்ற நூலைப் படித்து உவகையுற்றனன். தூய எளிய இனிய தமிழ் நடையில் எழுதப்பட்ட இந்நூல் எல்லோரும் படித்து இன்புறுதற்குரியது.

இதனுள் தலைசிறந்த நகைச்சுவை ஆங்காங்கே விளக்க முறுதலால், இந்நூல் படிப்பவரைத் தன் வயப்படுத்தும் தகுதியுடையது. மேலும், படிப்பவர் மனத்தைத் தூய்மைப் படுத்தி, இல்லறத்தினை அறத்திற்றிரம்பாவண்ணம் செவ் விதின் நடத்துவிக்க வல்லது இந்நூல் என்றால் அது மிகை யாகாது. இது போன்ற நூல்களே இக்காலத்துப் பெரிதும் வேண்டப்படுவன.

இந்நூலை ஆக்கியவர், பெற்றம் இவர்வோர்க்குப் பிரணவப் பொருளை இற்றெனை உணர்த்திய இறை திருவருளால் நோய் ஒரீஇச் சீரும் சிறப்பும் எய்துவாராக!

தமிழ்க்கல்லூரி,
மயிலம்.
8—12—1947

இங்ஙனம்,
**சி. துரைசாமி**

## மதிப்புரை

**அனைத்திந்திய வானொலி - திருச்சி**

15—2—1948

"வீடும் விளக்கும்" என்பது மங்கலமான பொருள் நிறைந்த தமிழ்த் தொடர். ஆசிர்வாதம் செய்கின்ற நாவில் சரளமாகத் தவழ்ந்து வரும் தகைமை பெற்ற தொடர். சந்திரனைச் சுற்றி ஒளி வட்டம் படிந்து கிடப்பது போன்று இத்தொடரைச் சுற்றி இல்லற வாழ்வின் எழிலே படிந்து கிடக்கின்றது. ஆசிரியரும் இல்லற வாழ்விற்குரிய இன்றியமையா நலத்தையே விரித்துக் காட்டுகின்றார். ஆசிரியரின் கருத்துப்படி வீடு என்பது இன்பத்திற்குரிய இடம். அதற்குரிய விளக்கு மனைவியே. விளக்கினுக்கு விளக்காக விளங்குவது குழந்தைச் செல்வம். ஆசிரியரின் விளக்கமெல்லாம் கலப்பற்ற தமிழ்ப் பண்பாட்டைத் தழுவியே செல்கின்றது.

அணுகுண்டு மகான்மியத்தை அருமறையாகக் கொண்டு துதிக்கும் இந்தக் காலத்தில், மற்றும், கடமை நிறைவைவிட உரிமை வாதமே ஓங்கி நிற்கும் இந்தக் காலத்தில், வீடும் விளக்கும் என்ற இந்நூலானது தனது இலட்சியத்தைத் தன் பலம் கொண்டே சாதிக்க முன் வந்திருப்பது கவனிக்கத் தக்கதாகும். நமது வாழ்க்கையோடு கலந்து நிற்கும் மரபின் பொருளை உணராமலே முன்னேற முயலும் நமக்கு ஆபத்து எல்லையை எச்சரித்துக் காட்டும் அபாயச் சின்னம் போல் விளங்குகின்றது. தன் மரபை மறந்து வாழும் நிலையே சதுரான நிலையென மயங்கி நிற்கும் நவீன உலகமானது இந்நூலின் பொருளை மனதில் இருத்தும் பொறுமையை வளர்க்குமாயின் இலாபம் அடையக்கூடும். ஆசிரியர் தமது அனுபவம், அறிவு, விவேகம் ஆகிய இவற்றின் துணை கொண்டு தெளிந்த உண்மைகளை மிகவும் எளிதான முறையில் விரித்துரைக்கின்றார். முன்னோர் மொழிகள் பலவும் ஆசிரியருடைய முயற்சிக்குத் துணை நின்று உதவுகின்றன.

# பேராசிரியர் சுந்தர சண்முகனார்

சிறந்த இலக்கிய வல்லுநராகத் திகழ்ந்த சுந்தர சண்முகனார் அவர்கள் தமிழுக்கு மிகப்பெரிய தொண்டு செய்துள்ளார். சிறந்த கல்வி நிறுவனங்களில் கல்வி பயின்றதோடு தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தொகுப்பியல் துறைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். செந்தமிழ் ஆற்றுப்படை என்னும் நூலைப் படைத்தமைக்காக நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களே அவருக்கு "இயற்கவி" எனும் பட்டத்தை வழங்கியுள்ளார். இன்று தமிழகம் இருக்கின்ற சூழ்நிலையில் ஏராளமான பேர்களைச் செந்தமிழ் நோக்கித்தான் ஆற்றுப்படுத்த வேண்டியுள்ளது. கல்வித் துறையிலுங்கூட அகராதிக் கலையில் அவருக்குப் பெரும் ஈடுபாடு இருந்துள்ளது. இலக்கண அறிவும், இலக்கிய ஆர்வமும் படைத்த சுந்தர சண்முகனாரின் தொண்டுகளை நினைவில் கொண்டு பாராட்டுவோம். இக்காலத்தில இவரைப் போன்ற பேராற்றல் படைத்த அறிஞர்களின் எண்ணிக்கை குறைந்துவருகிறது என்பதை வருத்தத்துடன் ஒப்புக் கொள்ள வேண்டியுள்ளது. இந்த நிலையிலும் சுந்தர சண்முகனார் போன்றவர்களின் பணிகளால் விளைந்த தமிழ் மேம் பாட்டினைச் சிந்தித்துப் பார்த்துச் செயற்பட வேண்டியது நமது கடமையாகும்.

முனைவர் **மு. தமிழ்க்குடிமகன்** எம்.ஏ.,பி.எச்.டி.,
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு,
இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்,
தலைமைச் செயலகம், சென்னை - 600 009.